கல்கி


இலவசம்: சென்னை ஸ்கேன்
சென்னை வாசகர்களுக்கு மட்டும்

KALKI 21.11.2004
ரூ.6.00



'ஜோ'வைப் பின்பற்றுங்கள்!

– சூர்யா


திருச்சி என்றாலே
தெரியும் மலைக்கோட்டை...
சாரதாஸ் என்றாலே
அழகுத் துணிக்கோட்டை..!
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
கன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:2852177.



“ஊழலுக்குக் காரணம் முழுநேர அரசியல்வாதிகள்!”



20



“என் பொறுப்புகளை உணர்ந்திருக்கிறேன்!”

கல்கி 21.11.2004

இனி பாலஸ்தீனம்?



பக்கவாத நோய், விமான விபத்து, இஸ்ரேலியர்களின் முந்தைய கொலை முயற்சிகள், இத்தனையிலிருந்தும் பல்வேறு கால கட்டங்களில் தப்பி வந்த யாசர் அராபத் இறந்து விட்டார். எதனால் இறந்தார் யாசர் என்பது சரிவர தெளிவாக்கப்படவில்லை. அவரது வயிற்றுப் பகுதியில், குறிப்பாக, குடலில் ஏற்பட்டிருந்த அதிகப்படி வளர்ச்சிகள் தாம் அவரது இறப்புக்குக் காரணமாக அமைந்தன என்கிறார்கள். பாரிஸில் இறப்பு; கெய்ரோவில் உலகத் தலைவர்களின் அஞ்சலி; பாலஸ்தீனத்தில் உள்ள ரமல்லாவில் இறுதிச் சடங்குகள் என்று, அவரது உடல் ஒரு சின்னச் சுற்றுலா வந்திருக்கிறது. உண்மையில், யாசர் அராபத்துக்கு ஊர் (உலகம்) சுற்றுவதென்றால் கொள்ளைப் பிரியம்!

*1972*ல் ஐ.நா. பொதுக் குழுவிற்கு விஜயம் செய்தார் யாசர் அராபத். அப்போது அவரது ஒரு கையில் ஆலிவ் மரக்கிளை. மற்றொன்றில் துப்பாக்கி! அவரது வாழ்க்கையும் அமைதி, வன்முறை ஆகியவற்றின் கலவையாகத்தான் இருந்து வந்திருக்கிறது. அவர் பிறந்தது கெய்ரோவிலா, ஜெருசலத்திலா என்பதில் தொடங்கி, யாசர் அராபத்தின் வாழ்வில் பல மர்மங்கள்.

உலகெங்குமுள்ள யூதர்கள் தங்களுக்கெனத் தனிநாடு இல்லையே என ஏங்கின போது, பைபிளின்படி ஜெருசலத்தைச் சுற்றியுள்ள பகுதிதான் தங்களது பூமி என்ற முடிவுக்கு வந்தனர். உடனடியாக பாலஸ்தீனத்தில் கொத்து கொத்தாகக் குடியேறினார்கள். தங்களுக்கென ஒரு பகுதியை ஏற்படுத்திக் கொண்டு, அதற்கு இஸ்ரேல் என்று பெயர், அதைத் தனி நாடாக அறிவித்தார்கள். அமெரிக்காவின் ஆதரவும் இருக்கவே, இஸ்ரேல் மிகவும் துளிர்த்துப் போய் பாலஸ்தீனத்தின் பிற பகுதிகளையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது. பாலஸ்தீனியர்கள் கொதித்துப் போக, போராட்டம் வெடித்தது.

கெய்ரோ பல்கலைக்கழகத்தில் சிவில் என்ஜினியரிங் மாணவராக இருந்த போதே, இந்தப் போராட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடு யாசர் அராபத்துக்கு. அல்ஃபடா என்ற தீவிரவாத அமைப்பை உருவாக்கினார். ஆயுதக் கடத்தலில் முக்கியப் பங்கு வகித்தார். பலரும் நினைத்திருப்பது போல் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தைத் தொடங்கியவர் யாசர் அராபத் அல்ல. எகிப்து, சிரியா, ஜோர்டான் போன்ற நாடுகளில் உள்ள பாலஸ்தீனிய விடுதலை விரும்பிகள் துவக்கிய அமைப்பு அது. 1968ல் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவரானார் யாசர்.

'இலக்கு சரியென்றால் எந்த வழியும் நியாயமானதுதான்' என்ற வகையில் எல்லாவிதத் தீவிரவாதங்களிலும் ஈடுபட்டார். ஆனால், ஐ.நா.வே அங்கீகரித்த பிறகு வேறு வழியில்லை என்பதை உணர்ந்தார். அதுவரை தலைமறைவு

வாழ்க்கை வாழ்ந்தவர், அமைதி ஒப்பந்தத்தில் இஸ்ரேல் பிரதமருடன் கையெழுத்திட்டபோது புதிய சரித்திரம் மலர்ந்தது.

பாலஸ்தீன அதிகார மையம், பாலஸ்தீன விடுதலை இயக்கம், பாலஸ்தீன தேசிய இயக்கமான ஃபத்தா ஆகிய மூன்று முக்கிய அமைப்புகளின் தலைவராக விளங்கியவர் அராபத்.

யாசரின் மறைவை அடுத்து, பாலஸ்தீன அதிகார மைய விதிகளின்படி, தாற்காலிகமாக அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார் ராஹி ஃபடோ. ஆனால், அடுத்த அறுபது நாட்களுக்குள் தேர்தலை நடத்தி, அவர் அடுத்த தலைவரை நியமிக்க வேண்டும்.

அடுத்த தலைவராக மஹ்மூத் அப்பாஸ் மற்றும் அகமது குரேவின் பெயர்கள் பலமாக அடிபடுகின்றன. இப்போதைக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளராக உள்ள அப்பாஸ், அந்த இயக்கம் மற்றும் ஃபத்தாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். குரே, பாலஸ்தீனப் பிரதமராகத் தொடர்ந்தாலும், அவருக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பதவி மட்டுமல்ல, யாசரின் இயக்கத்திற்குச் சேர்ந்துள்ள கோடிக்கணக்கான செல்வம் யார் கைக்குச் செல்லப் போகிறது என்பதிலும் பெரும் குழப்பம் நிலவுகிறது. தன்னுடைய வாரிசு பற்றி வாயைத் திறக்காதது போலவே, யாசர் தன் இயக்கத்தின் செல்வத்தைக் குறித்தும் யாரிடமும் மனம்விட்டுப் பேசியதில்லையாம்.

இயக்கத்தின் பொதுக் கணக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட வங்கிக் கணக்குக்கு, 9,000 லட்சம் டாலர்கள் மாற்றப்பட்டுள்ளன என்கிறார்கள் சர்வதேச நிதி நிறுவனத்தைச் சேர்ந்த ஆடிட்டர்கள். இந்த பிப்ரவரி மாதம், பிரெஞ்சு அரசு நடத்திய சோதனையில், ஒரு கோடிக்கும் அதிகமான யூரோக்கள், யாசரின் மனைவி சுஹாவின் கணக்கில் செலுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மா சேதுங்கிலிருந்து என்.டி.ஆர். வரை, வயதான காலத்தில் திருமணம் செய்து கொண்ட அரசியல் வி.ஐ.பிக்கள் பலர் உண்டு. இத்தகைய கணவரின் மறைவுக்குப் பிறகு அவர் பதவிக்கு வர விருப்பப்படுவதும், பலமுறை நாம் பார்த்த கதைதான். ஆனால் சுஹாவின் நோக்கம் பதவி மீது அல்ல, கணவரின் சொத்து மீதுதான் என்கிறார்கள். எது எப்படியோ யாசர் அராபத்தின் அரசியல் வாரிசு யார் என்பதும் பாலஸ்தீனத்தின் எதிர்காலம் குறித்தும் இன்னும் இரு மாதங்களில் தெரிந்துவிடும்.

- **ஜி.எஸ்.எஸ்.**

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு

பெட்ரோலியப் பொருள்களின் விலை ஏற்றம் இன்று சகல தரப்பு மக்களையும் பாதித்துள்ளது. இதன் காரணமாக பணவீக்கம் கிட்டத்தட்ட எட்டு சதவிகிதமாக உயர்ந்துவிட்டது.

"சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை சகட்டு மேனிக்கு ஏறிக்கொண்டிருப்பதால், மத்திய அரசுக்கு வேறு வழியில்லாமல் மக்கள் தலையில் சுமையை வைக்க வேண்டிய அவசரமும், அவசியமும் ஏற்பட்டு விட்டது'' என்கிறது மத்திய அரசு.

''விலையைக் குறைத்தே ஆக வேண்டும்'' என்று இடதுசாரிகள் கிடுக்கிப் பிடி போடுகின்றனர். ஆனால், "விலையைக் குறைக்கவே முடியாது. அப்படிக் குறைத்தால் பட்ஜெட்டில் சொல்லப்பட்ட நிதி ஆதாரங்கள் குலைந்து போகும். எண்ணெய் கம்பெனிகளின் லாபம் குறைந்து விடும்'' என்கிறார் பிரதமர்.

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏறினால், இந்திய அரசு விலையை ஏற்றித்தான் ஆக வேண்டுமா...? வேறு வழியில்லையா?

பெட்ரோலியப் பொருள்கள் இறக்குமதி, கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு விலை நிர்ணயம், விநியோகம் என்று நூல் பிடித்து ஆராய்ந்தால், அரசு இந்தத் துறையை ஒரு நிதி ஆதாரத்துக்கான அட்சயப் பாத்திரமாக வைத்துக் கொண்டிருப்பது மட்டும் பளிச்செனத் தெரிகிறது.

மூன்று பேரல் கச்சா எண்ணெயின் (சுமார் 1000 லிட்டர்) விலை, இன்றைய சர்வதேசச் சந்தையில் 49 டாலர். ஒரு டாலரின் இன்றைய ரூபாய் மதிப்பு 46 ரூபாய். அந்த அடிப்படையில் போடப்பட்ட கணக்கு :

· ஏற்றுமதி பாயிண்டில் ஒரு லிட்டரின் விலை (கச்சா எண்ணெய்) : 6.60

இறக்குமதியானதும் இந்தியாவில் போடப்படும் இறக்குமதி வரி : 9.90

போக்குவரத்து மற்றும் சுத்திகரிப்புச் செலவு : 2.71

உற்பத்தி தீர்வை : 12.27

விற்பனை வரி : 9.60

எண்ணெய் நிறுவனங்களின் லாபம் : 1.42

ஒரு லிட்டருக்கு நாம் அழுவது : 42.50

மாநிலத்துக்கு மாநிலம் விற்பனை வரி விகிதம் வித்தியாசப்படுவதால் விலையும் மாறுபடும்.

நாடு சுதந்திரம் அடைந்தபோது நமது நாட்டுக்குத் தேவையாக இருந்த கச்சா



பற்றி எரியும்

எண்ணெயின் அளவு, வருடத்துக்கு 33 லட்சம் மெட்ரிக் டன்கள்தான். ஆனால் இன்று நமது தேவை, பத்து கோடியே எட்டு லட்சம் டன். இதில் நாம் இறக்குமதி செய்வது கிட்டத்தட்ட ஒன்பது கோடி

டன். நமது தேவையில் 70 சதவிகிதத்தை இறக்குமதி செய்தே ஆக வேண்டிய நிலையில் இருக்கிறோம். நமது உள்நாட்டு உற்பத்தி, வருடத்துக்குச் சுமார் மூன்றரைக் கோடி டன்தான். 2002-2003ல் நாம் இறக்குமதி செய்த கச்சா எண்ணெயின் மதிப்பு, 85,000 கோடி ரூபாய். இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு பக்கம் பெருமளவில் நாம் இறக்குமதி செய்து கொண்டிருந்தாலும், மிகச் சிறிய அளவில் தனியார் மற்றும் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் ஏற்றுமதியும் செய்து கொண்டிருக்கின்றன.

2002-03ல் நாம் ஏற்றுமதி செய்த பெட்ரோலியப் பொருள்களின் மதிப்பு 11,000 கோடி.

நமது எரிவாயுத் தேவை நாள் ஒன்றுக்கு 15 கோடி கன அடி. ஆனால் உள்நாட்டு உற்பத்தி ஆறரைக் கோடிதான். சுமார் எட்டு கோடி மக்கள் சமையல் எரிவாயு சிலிண்டர் வைத்திருக்கிறார்கள். இதில் அறுபது சதவிகிதம் பேர் இரண்டாவது சிலிண்டர் வைத்திருக்கிறார்கள். இன்று எரிவாயுவின் பயன்பாடு உயர்ந்து கொண்டே இருக்கிறது. சுற்றுச்சூழலை மாசுபடுத்தாமல் இருப்பதற்காகவும் எரிபொருள் சிக்கனத்துக்காகவும் மோட்டார் வாகனங்களில் பெட்ரோல், டீசலுக்கு மாற்றுச் சக்தியாக எரிவாயுவைப் பயன்படுத்தி வருகிறோம். எதிர்காலத்தில் இதன் தேவை எதிர்பாராத அளவில் உயரும் வாய்ப்பிருக்கிறது.

கடந்த வருடம் அக்டோபர் மாதத்திலேயே தலைவலி துவங்கியது. ஈராக் மீது அமெரிக்கா போர் துவங்கிய நிலையில், நமது இறக்குமதி பாதுகாக்கப்பட்டது. நமது நாட்டுக்கு பெருமளவு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்த இரு நாடுகள், ஈராக் மற்றும் சவுதி அரேபியா. ஈராக்கில் அமைதியின்மை காரணமாக உற்பத்தி குறைந்தது. தேவை ஒரு பக்கம் அதிகரிக்க, பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள், ஒரு பேரல் 23 அமெரிக்க டாலராக இருந்த கச்சா எண்ணெயின் விலையை ஏற்றத் தொடங்கின. இந்த வருடம் ஜூன் - ஜூலையில் 48, 55 டாலரைத் தொட்டு, இப்போது 49 டாலரில் வந்து நிற்கிறது கச்சா எண்ணெயின் விலை. பெட்ரோலியப் பொருள்களின் விலையை 'administered price mechanism' என்ற நிர்ணயித்த



பெட்ரோல் விலை!

விலைக் கட்டுப்பாடு மூலம் அரசே மானிய ஆதரவு அளித்து நிர்வகிக்கிறது. ஆனால், ஏப்ரல் 2002 முதல் இந்த விலைக் கட்டுப் பாடுக் கொள்கையில் ஒரு பெரிய மாற்றம் புகுத்தப்பட்டது.



• மன்மோகன் சிங்

தாராளமயமாக்கல் கொள்கையின் அடிப்படையில், பொதுத்துறை பெட்ரோலிய நிறுவனங்கள் இனி இறக்குமதி செய்து கொள்வது, சுத்திகரிப்பு, மார்க்கெட்டிங், விலை ஏற்றம் ஆகியவைகளைப் பற்றி தாங்களே முடிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது. ஏற்கெனவே இந்தத் துறையில் நுழைந்துவிட்ட தனியார் துறைக்கு (குறிப்பாக ரிலையன்ஸ்), ஆதரவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் உண்டு.

ஏப்ரல் 2002க்கு முன்பு நடந்த கதை என்னவென்றால், அரசே கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும். டாலரில் பணம் கொடுக்கும். சுத்திகரிப்பு செய்து விநியோகம் செய்யும் ஆயில் கம்பெனிகள், மண்ணெண்ணெய் மற்றும் டீஸலின் விலையை மட்டும் ஏற்றக் கூடாது. பெட்ரோல் மற்றும் விமானப் பெட்ரோல் ஆகியவற்றின் விலையை ஏற்றிக்கொள்ளலாம். பெட்ரோல் விலை ஏற்றத்தின் காரணமாகக் கிடைக்கும் அதிகப்படியானத் தொகை, தனியாக வைக்கப்படும். இதற்கு Oil Pool Account என்று பெயர். இந்தக் கணக்கில் சேரும் தொகை டீஸல், கெரஸின் விற்பனையில் ஏற்படும் நஷ்டத்தை சரிக்கட்டப் பயன்படுத்தப்பட்டது. சமையல் எரிவாயு விற்பனையில் ஏற்படும் நஷ்டத்தை, அரசே மான்யம் கொடுத்து நிவர்த்தி செய்தது. இந்த நிலை ஏப்ரல் 2002க்குப் பிறகு மாறிவிட்டது. இப்போது Oil Pool Account கிடையாது. இழப்புகளைச் சரிக்கட்டிக் கொள்வது ஆயில் கம்பெனிகளின் பொறுப்பு என்றாகி விட்டது.

மத்திய அரசின் வருவாயில் முப்பது சதவிகிதத்தைக் கொடுப்பது பெட்ரோலியத் துறைதான். மத்திய மாநில அரசுகள் இந்தத் துறையின் மூலம், சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய் வருவாய் பெறுகின்றன. இறக்குமதித் தீர்வை, உற்பத்தி தீர்வை என்று கணிசமாக பாக்கெட்டில் போட்டுக் கொள்கிறது மத்திய அரசு. விற்பனை வரியைப் போட்டு வாங்கிச் சுருட்டிக் கொள்கின்றன மாநில அரசுகள்.

கடந்த ஆகஸ்டில் இடதுசாரிகளின் வற்புறுத்தல் காரணமாக, இறக்குமதி தீர்வையையும், உற்பத்தி தீர்வையையும் கொஞ்சம் குறைத்தது மத்திய அரசு. இதனால் ஏற்படப் போகும் வருவாய் இழப்பு 2500 கோடி என்கிறது. 'இதை எத்தனை நாள் தாங்குவது?' என்பது அரசின் கேள்வி.

நமது பொதுத் துறை நிறுவனங்களும் லாபம் ஈட்டுவதில் குறியாக இருக்கின்றன. 2002-03ல் ஆயில் கம்பெனிகள் ஈட்டிய லாபம், 23000 கோடி ரூபாய். கடந்த ஒரு வருடமாக சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் விற்பனையில் ஏற்பட்டுள்ள நஷ்டம் காரணமாக, 2003-04ல் இந்தக் கம்பெனிகளின் லாபம் 4000 கோடி குறையும் என்று சொல்கிறார்கள்.

ஆயில் நிறுவனங்கள், மத்திய அரசு, மாநில அரசு என்று முத்தரப்பும் சேர்ந்து கொண்டு, இந்த விஷயத்தில் மக்களை வாட்டி வதைக்கின்றன என்பதுதான் உண்மை.

இதில் வேதனையான மற்றொரு விஷயம், கச்சா எண்ணெய் விலையேற்றத்தால் இறக்குமதி செய்யப்படும் எண்ணெயின் மதிப்பு ஏற, ஏற, அந்த மதிப்புக்கு ஏற்ப இறக்குமதித் தீர்வை போடப்பட்டு, மத்திய-மாநில அரசுகளுக்கு மட்டும் வருவாய் ஏறிக் கொண்டுதானிருக்கிறது.

நமது நாட்டின் கச்சா எண்ணெய் உற்பத்தி இருக்கிறதல்லவா, அதற்குக் கொடுக்கும் விலை சர்வதேச விலையில் எழுபது சதம் இருக்க வேண்டும் என்று நிர்ணயித்து வழங்கப்படுகிறது. இந்த ஆதரவு அல்லது பாதுகாப்பு விலை காரணமாக, இந்த நிறுவனங்கள் லாபத்தில் கொழிக்கின்றன.

• ஜார்ஜ் புஷ்



ஆயில் இந்தியா வளர்ச்சி வாரியம் என்ற அரசாங்க அமைப்பு, இங்கே உற்பத்தி ஆகும் கச்சா எண்ணெய் டன் ஒன்றுக்கு 900 ரூபாய் வசூல் செய்கிறது. இதன் மூலம் 30000 கோடிக்கும் அதிகமாக மத்திய அரசு வசூல்

செய்திருக்கிறது. இப்படி சகல விதத்திலும் பெட்ரோலியத் துறை மத்திய அரசுக்கு காமதேனுதான்.

“இறக்குமதி, சுத்திகரிப்பு, விநியோகம், விலை நிர்ணயம் ஆகியவை குறித்த ஒரு வெள்ளை அறிக்கையை மத்திய அரசு வெளியிட வேண்டும்'' என்று வற்புறுத்துகிறார், இந்தியன் ஆயில் ஊழியர் சங்க பொதுச் செயலாளர் ரெங்கநாதன். ''இப்படிப்பட்ட ஒரு வெள்ளை அறிக்கைதான் மக்களிடையே உள்ள பல குழப்பங்களைத் தீர்க்கும்'' என்கிறார் அவர்.

''எப்போதும் சர்வதேசச் சந்தையை குறை சொல்லிக் கொண்டிருப்பதால் பயனில்லை. மத்திய மாநில அரசுகள் தங்கள் வருமானவரியைக் குறைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. அதிக பெட்ரோலிய ஆதாரங்களைத் தேடுவதற்கு சர்வே, சுத்திகரிப்பு ஆலைகள், தூரப்பணப் பணிகள் என்று வளர்ச்சிப் பணிகளில் ஆயில் கம்பெனிகள் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. லாபம் ஈட்டினால் தான் இது போன்ற பணிகளில் ஈடுபட முடியும். இப்போது டீலர்களுக்கு கமிஷன் கொடுப்பது முதல், நிர்வாகச் செலவுகள், போக்குவரத்து என்று எல்லாச் செலவுகளும் உயர்ந்து கொண்டே போகின்றன. இந்த நிலையில் டீசல், எல்.பி.ஜி. மற்றும் கெரஸின் விற்பனையில் நஷ்டமே ஏற்படும். எண்ணெய் நிறுவனங்களின் நஷ்டத்தைத் தவிர்க்க ஒன்று மத்திய அரசு உதவ வேண்டும் அல்லது விலையேற்றத்தை அனுமதிக்க வேண்டும்'' என்கிறார் ரெங்கராஜன்.

2001ல் 228 ரூபாயாக இருந்த சிலிண்டர், இன்று 268 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 400 ரூபாய் விற்றால்தான் நஷ்டத்தை ஈடுகட்ட முடியுமாம். நமக்கு இடிமேல் இடி காத்திருக்கிறது.

ஜார்ஜ் புஷ் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக ஆகியிருக்கும் நிலையில், ஈராக்கில் அமைதியின்மை தொடர்கதை. எனவே அங்கே உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்படும் ஆபத்து. அடுத்த சில மாதங்களில் கச்சா எண்ணெய் விலை கண்டபடி ஏறும் வாய்ப்பு உண்டு. மத்திய- மாநில அரசுகள் தங்கள் வருவாயைக் குறைத்துக் கொள்ள முன் வராத நிலையில், விலையேற்றம் சாமான்யர்கள் தலையில்தான் விழும்.

- ப்ரியன்

சத்ரபதி



கதர்வேஷ்டி அப்பா, ஜீன்ஸ் பேண்ட் மகன். அதை விட்டால் காக்கிச் சட்டையில் விறைப்பாக நின்று அடுத்த ஊருக்கு கேட்கிற மாதிரி "ஏய்ய்...!" என்று தட்டுவதுதான் சரத்குமாரின் பாதுகாப்பு எல்லை. இந்த முறை எல்லைக் கட்டுப் பாட்டுக் கோட்டை துணிச்சலாகத் தாண்டி வந்திருப்பவர் போல இடை வேளை வரை எதுவும் பேசாமல் ஆச்சர்யப்படுத்துகிறார்.

சென்னையில் உள்ள மகளிர் கல்லூரி ஒன்றின் பேருந்தில் சரத்துக்கு ஓட்டுனர் வேலை. ஜாதிக் கட்சியின் ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஊர் திரும்பிய நான்கு கொழுத்த ரவுடிகள், சரத் கல்லூரி மாணவியை ஈவ்டீசிங் செய்து கொலை செய்து விடுகிறார்கள். போலீஸ் தன் கடமையை ஒழுங்காகச் செய்து அவர்களைச் சிறையில் தள்ளுகிறது. ஆனால் தங்கள் கட்சித் தலைவரின் பணபலம், அதிகார பலத்தைப் பயன்படுத்தி கூலாக வெளியே வந்து மீண்டும் கூத்தடிக்கிறார்கள். பொங்கி எழும் சரத் அவர்களைக் கடத்தி வந்து, "என் நீதி மன்றத்தில் உங்களுக்கு தண்டனையே வேறு" என்கிறார்.

"எங்களுக்குத் தண்டனை தர நீ யார்" என்று ரவுடிகள் திமிர, தமது நிஜமுகத்தைத் திறந்து காட்டுகிறார் சரத்.

'அடேங்கப்பா! இவ்வளவு பொறுமையாக இவர் பதுங்கியிருந்தது இத்தனை வேகமாகப் பாய்வதற்குத்தானா!' என்று சபாஷ் பெறுகிறார் திரைக்கதையாளர். அதன் பிறகு ஜாதிக்கட்சியின் தலைவர் வரை சரத்தின் வேட்டை தொடர்கிறது. ஃப்ளாஷ் பேக் உத்திக்கு கன கச்சிதமாக பொருந்தியிருக்கும் கதை. ஜாதியின் பெயரால் கட்சி நடத்தி மக்களைக் கூறு போடும் பல தலைவர்களை(?) கிழித்து நாறாகத் தொங்கப் போடுவது என்று முயன்று, முக்காலே மூணு வீசம் கிணறு தாண்டியிருக்கிறார் இயக்குனர். தி.மு.க உறுப்பினரான ஹீரோ சரத்குமார், தமது கூட்டணியில் இருக்கும் ராமதாஸ் பற்றியெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், இப்படியொரு துணிச்சலான கதையை தேர்வு செய்து கொண்டதற்காகப் பாராட்டலாம். அதே நேரம், சரத் தான் சார்ந்த சமுதாயத்தின் ஜாதிய அமைப்புகளில் அதிக ஆர்வம் காட்டாமல் ஒதுங்கி இருந்தால்தான் லாஜிக் இடிக்காது. முக பாவங்கள் மூலம் சரத் நடிக்க முயற்சித்திருப்பதை வரவேற்போம். அனல் அரசு என்ற அறிமுக ஸ்டண்ட் இயக்குனரின் சண்டைக் காட்சிகளில் உண்மையாகவே அனல் வீசுகிறது.

குறும்பு படத்தில் துறுதுறுவென்று அறிமுகமான நிகிதாவுக்கு ஜூனியர் ஜோதிகா என்று "டைட்டில்" தரலாம். அத்தனை சுறுசுறுப்பு. அதே போல், வடிவேலுவின் காமெடி தர்பாரும் அபாரம்.

எஸ்.ஏ.ராஜ்குமாரும் தன் பங்கிற்கு குறை வைக்காமல் இசையால் வருடியிருக்கிறார்.

சத்ரபதி - சாணக்கியன்.

• அபவ் ஆவரெஜ்

நெறைஞ்ச மனசு

சினிமா என்பது குழு முயற்சி. இருப்பினும் யாராவது ஒருவர் படம் முழுவதும் தூக்கலாகத் தெரிவார். நெறைஞ்ச மனசில் விஜய்காந்தின் ஹீரோயிசத்தை தாண்டி கவனத்தை ஈர்க்கிறார் கதாசிரியர் சி. பாலசுப்ரமணி. கருப்பு வெள்ளை கால கட்டத்திலேயே கண்டுகொண்டிருக்க வேண்டிய உண்மைத்தன்மையுள்ள கதைக் களம். அற்புதமான யதார்த்தமும், டாகுமெண்டரித்தன்மையும் கலந்து கலாபூர்வ மண்வாசனை படைப்பாக வந்திருக்க வேண்டிய கதை, விஜய்காந்திற்காக நிறம் மாறிவிட்டிருக்கிறது. கதையை நடப்பு கால கட்டத்தில் காட்டுவதா இல்லை முப்பதாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது போல் காட்டுவதா என்பதில் திரைக்கதாசிரியருக்கு கொஞ்சம் குழப்பம். தொய்வில்லாத திரைக் கதைக்காக அதை மன்னித்து விட்டு கதைக்கு வருவோம்.

தென் தமிழ்நாட்டில் சூரியக்குடி என்றொரு கிராமம். வறட்சியால் வயிற்றுப் பாட்டிற்காக திருட ஆரம்பித்த கிராம மக்கள் மீது 'குற்றப் பரம்பரை' என்று கோடு போட்டு சட்டமும், அரசும் ஒதுக்கி வைக்கிறது. அடிப்படை வசதிகள் எதுவும் எட்டிப் பார்க்காத இந்த பொட்டல் கிராமத்தின் முகத்தையே அடியோடு மாற்றிக் காட்டுகிறார் அய்யனார் (விஜய்காந்த்). அய்யனார் எதிரிகளை அடித்து துவம்சம் பண்ணும்போது, அவருக்கு அருள் வந்த மாதிரி ஆவேசம் வந்துவிடுகிறது. கிராமவாசிகள் எல்லோரும் சூழ்ந்து நின்று, கைகளை தலைக்கு மேல் கூப்பி "அய்யனாரப்பா! மலையேறு சாமி! ஊரு தாங்காது அய்யா..." என்று கதறுகிறார்கள். நமக்கோ தியேட்டரிலேயே கைகால் உதறுகிறது. சும்மாவா! விஜய்காந்த் கைவிரல்களுக்கு நெட்டி முறித்தால் கூட 'சொடக்... சொடக்' என்று டிஜிட்டல் டால்பியில் சவுண்ட் எஃபெக்ட் கொடுக்கிறார்கள். நிற்க, கிராமத்தை விஜய்காந்த் எப்படி மாற்றுகிறார்?



தேவர் மகனில் 'போங்கைய்யா! போய் பிள்ளைகளை படிக்க வைங்க" என கமல் சொல்வார். விஜய்காந்த் பள்ளிக்கூடமே கட்டிவிடுகிறார். ரேஷன் கிடை நடத்துகிறார். இப்படி நிறைய. ஆனால், கதையை சூடாக நகர்த்திக் கொண்டு போகிறவர் வில்லன் தான். விஜய்காந்தின் வேகத்துக்கு ஈடு கொடுத்து நடித்திருக்கும் சம்பத் அசத்தலான அறிமுக வில்லன். அறிமுகக் கதாநாயகி சூஸன் ஜஸ்ட் ஃபாஸ் ரகம். உயிருக்குயிரான மாமன், ஹீரோவின் உயிரைத் தானமாகக் கேட்கும் க்ளைமாக்ஸ் காட்சியால் . மீண்டும் ஜம்மென்று சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து கொள்வது கதாசிரியர் தான்.

விஜய்காந்த் எப்படி பெரிய ஆளாக ஆனார்? அப்பா என்று தெரியாமலேயே கொலை செய்து விடும் வில்லன், சிறுவர் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து ஏன் சிறைக்குப் போனார்? என்பது போன்ற முக்கியமான கேள்விகளுக்கு படத்தில் பதில் இல்லை. என்றாலும் படம் இடையிலேயே எழுந்து வரும் அளவுக்கு போரடிக்கவில்லை.

● அபவ் ஆவரெஜ்

- விஷ்வல்தாசன்

குட்டிக்கதைகள் வாயிலாக ஒரு கருத்தைப் புரியவைப்பது தனிக்கலையாகும். சுவாமி போதமயானந்தாவின் 'ஹலோ இறைவா' தொடர், அறிவு வளர்ச்சிக்கான 'ஓர் ஆரோக்கிய டானிக்'' என்பது மிகையாகாது.
மும்பை,
கே.என். பாலகிருஷ்ணன்

'ஹலோ இறைவா' தொடர் மாணவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் பண்பையும் தெம்பையும் ஊட்டியது.
தஞ்சாவூர், ஜி. ராமதாஸ்

டியூஷன்களும், ஸ்பெஷல் கிளாஸ்களும் ஏற்படுத்தாத தெளிவை ஏற்படுத்தி, தேர்வை எதிர்கொள்ளும் துணிவை உண்டாக்கிவிட்டது 'ஹலோ இறைவா.'நன்றி!
குடந்தை-2, டி. நாதன்



ஷாலினி மணாளன் பேட்டியில் 'சிவகாசி'வெடித்தது. சிதறிய மத்தாப்பு ஒளியும் மனசுக்கு இதத்தை அளித்தது.
மேற்கு மாம்பலம், ஆர்.கோபாலன்

தமிழக ஆளுநரை விரட்டும் கார்ட்டூனில், தமிழகத்தின் பால்தாக்கரே-ராமதாஸின் கேரக்டர், அவரது டயலாக்கில் 'பளிச்'செனக் காட்டப்பட்டது



சிறப்பு!
அனுப்பானடி,
இரா. கல்யாணசுந்தரம்

தவறுகள் செய்யும் முதலமைச்சர், அவரிடமிருந்து ஆட்சியைத் தட்டிப் பறிக்க முயலும் எதிர்கட்சிகள்- இவற்றைப் பற்றிக் கவலைப் படாத கவர்னர், மத்தியில் எதிர் கட்சியினர் ஆதரவு மந்திரி சபை... இப்படி ஒரு நிலையிலிருக்கும் மாநிலத்தில் அரசியலில் சட்டம் ஒழுங்கு பிரச்னைகள் தவிர்க்க முடியாதது. அங்கே அரசியல் ஒரு கேலிக் கூத்தாகத்தான் இருக்கும். இதுவே நமது மாநிலத்தின் இன்றைய நிலை. இது தலையங்கத்தில் நன்கு பிரதிபலித்தது.
திருப்பரங்குன்றம்,
டி.கே.சுப்பிரமணியன்

7.11.2004 கல்கி இதழில் இடம்பெற்ற 'எஸ்.எம்.எஸ்.' ஜோக்கில் கூறப்பட்டுள்ள கருத்து உண்மை என்றாலும், அது சொல்லப்பட்ட இடம், பொருள் ஆகியவை, அந்த உண்மையையும் மீறி அந்த நோய் பற்றிய ஒரு தரமில்லாத கேலி மற்றும் கிண்டல் போல் உள்ளது. இனிவரும் எஸ்.எம்.எஸ்களில் அவற்றை கவனமாக கையாள வேண்டும்.
அத்திவாக்கம், நம்பிராஜன்

தோப்புக்கரணம் போடுவதற்கும் குட்டிக் கொள்வதற்கும் காரணம் படித்தவுடன், எனக்கு நானே தலையில் குட்டிக் கொண்டு மூன்று தோப்புக் கரணம் போட்டேன்.
சென்னை, சி.தெ.இளமுருகன்

ஏவி.எம்.சரவணனின் 'அந்த நாள் ஞாபகம்' தீபாவளி போனஸாக இனித்தது. சிறு வயது புகைப்படம் கண்ணை மட்டு மல்ல, கருத்தையும் கவர்ந்தது. ஒரு

மெகாதொடரை எதிர்பார்க்கிறோம்.
புரசைவாக்கம், ஜோ பிரேமானந்த்

✉ ஐஷ்வர்யன் எழுதிய 'ஆலமரத்து தீபாவளி' சிறுகதை, ஏற்கெனவே தினமலர் - வாரமலர் இதழில் டி.வி.ஆர். நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு ரூ.10,000/- பெற்ற சிறுகதையாக 'ஆலமர விதைகள்' (ஸித்தீக்) என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.
சென்னை, பி.கே.ரகுபதி

✉ பட்டு சிறப்பிதழ் பட்படாரென்று மனசுக்குள் மத்தாப்பைப் பூக்க வைத்தது.
காரைக்குடி, வீரசேகர்


✉ முதல் பக்கமோ தெய்வீக ஸ்நானம், ஒரு சிறப்பிதழோ பட்டாடை ஜொலிப்பு, வழக்கமான கல்கியோ இலக்கியப் படைப்புகள்... ம்... தொடரட்டும் உமது பணி!
திசையன்விளை, ஆர்.ஜி.கலியாணி

✉ மண்ணை விட்டு மறைந்து போனாலும், அவர் படைத்திட்ட நூற்களை வாசிக்கையில் மீண்டும் மீண்டும் பிறப்பார் தமிழ்ப் புதல்வி கோமகள்!
திண்டுக்கல், தயாகவிச்சிற்பி

✉ 'பெண்களிடம் கேட்க மறந்த கேள்விகள்' என்ற தலைப்பில் எத்திராஜ் கல்லூரி மாணவிகள் அளித்த பேட்டியைப் படித்தேன். கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் பதில்கள் நெத்தியடியாக இருந்தன!
லால்குடி, எம். இராஜேந்திரன்

✉ தமது 'கண்ணாடிக் கல்வெட்டு'களில் சம்பவங்களை சரித்திரத் துணுக்குகளாக்கி உரைக் கவிதையில் செதுக்கிவிட்டார் பா. விஜய். பாராட்டுகள். ஸ்யாமின் ஓவியங்கள் கவிதைக்கு உயிர் கொடுத்து மனதில் உலவ விட்டன!
கீரனூர், தமிழ்மணி

✉ மின்வெட்டுகளாய் வந்த சொல்வெட்டுகள்– சொல்வெட்டுகளில் செதுக்கிய கல்வெட்டுகள்– கல்வெட்டுகளாய் மனதில் பதிந்தவைதான் கல்கி வழங்கிய 'கண்ணாடிக் கல்வெட்டுகள்.' கவிஞர் வாழ்க, வளர்க!
முகவை, ராசுகவி



✉ கண்ணாடிக் கல்வெட்டுகள் மிகச் சுவையாக இருந்தது. சரித்திரப் பாத்திரங்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள உதவியது. சட்டென்று முடிந்து போனது கொஞ்சம் ஏமாற்றமே. பா. விஜய் இன்னும் நிறைய எழுத வேண்டும்.
பாப்பிரெட்டிப்பட்டி, புவனா ராகவேந்திரன்

புட்டுப் புட்டு வைத்த பட்டு!

✉ 'பட்டுப்புடவை பரிசு!' மற்றும் 'பட்டு' பற்றிய பல தகவல்களை 'புட்டு, புட்டு' வைத்த இலவச இணைப்புக்கு 'சட்டு'ன்னு புடிங்க பாராட்டை!
பருத்திக்கோட்டை, ராஜமீனா

✉ சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஸ்டாம்ப் கதைகள்... சின்னத் திரியில் வெடித்துச் சிதறிய சிவகாசி வெடிகள்!
கோவில்பட்டி - 2, ச. ஆதிகேசவன்

✉ (சி)ரிங்-டோன் படித்து, சிரிப்பு தாங்க முடியலை, 'தனுஷ்' செல்ஃபோனில், 'மாமா உன் பொண்ணைக் கொடு' ரிங்டோன் ஒலிப்பதாக (கற்பனை) செய்திருப்பது அருமை!
குமாரபாளையம், 'காசி' சக்திவேலன்

ஃபட்மேஜை

தேடினா கிடைக்காது!



• முகேஷ் அம்பானி

டெக்னாலஜி முன்னேறினா என்னெல்லாம் அற்புதம் நடக்குது பாருங்க...

நம்ம நாட்லேயே தயாரிச்ச ஏவுகணை ஒண்ணு பரிசோதனை முயற்சியா, ஒரிசா கடற்கரையில ஐஎன்எஸ். சுபத்ரா என்கிற கப்பல்லேருந்து வெற்றிகரமா செலுத்தப்பட்டிருக்கு... 250 கி.மீ. எல்லைக்குள் இது தாக்குதல் நடத்தும்... அணு ஆயுதம் அல்லது சாதா வெடிகுண்டுகளை, இந்த ஏவுகணை மூலமா குறிவைச்ச இடத்துல போடலாம்!

நம்முடைய பாதுகாப்பு ஆராய்ச்சி அபிவிருத்தித் துறைக்கு இந்த வெற்றி ஒரு மைல்கல்லாம்... முதன் முறையா ஏப்ரல் 2000ல் இந்த ஏவுகணையைச் செலுத்தினப்போ, சாஃப்ட்வேர் சிக்கல்னால இட் ஃபெயில்ட். செகண்ட் டைம் 2001 செப்டெம்பர்ல சக்ஸஸ் ஆச்சு. இப்போ மூணாவது முறையாகவும் வெற்றி...

கேட்கறதுக்குக் கொஞ்சம் தனுஷோட காரியர் ஹிஸ்டரி மாதிரி இல்ல...? முதல்ல கொஞ்சம் ஃப்ளாப். அப்புறம் ரொம்ப பரபரப்பான வெற்றி. கடைசில, ஹி ஹாஸ் கம் டு ஸ்டே! (தனுஷ் - ஐஸ்வர்யா கல்யாண ஹிஸ்டரியும் அப்படித்தானே இருக்குன்றீங்களா... டபுள் ஓ.கே!)

ஏவுகணை பேரும் தனுஷ்!

ஏவுகணையைச் சுமந்து வர ஆட்டம் பாம்ப் ரேஞ்சுக்கு இன்னொரு அதிர்ச்சி நியூஸ்... நம்ம நாட்டுல தொலைத் தொடர்பு நெட்வொர்க்கை விஸ்தாரமா அமைச்சது பி.எஸ்.என்.எல்னு தெரியுமில்லையா... இப்போ தனியார் போன் நிறுவனங்கள் பி.எஸ்.என்.எல்.லோட இந்த நெட்வொர்க்கை யூஸ் பண்ணிக்கறாங்க. அதுக்கு, லோக்கல் கால்னா இவ்வளவு, ஐ.எஸ்.டி.ன்னா இத்தனைன்னு சார்ஜ் கட்டணும். ரிலையன்ஸ் உள்பட சில பல தனியார் நிறுவனங்கள், ஐ.எஸ்.டி. கால்களை உள்நாட்டுத் தொலைபேசி அழைப்பா கணக்குக் காண்பிச்சுட்டு வரதாகவும், அதனால் பி.எஸ்.என்.எல்லுக்குப் பல கோடி நஷ்டம்னும் இப்போ ஒரு குற்றச்சாட்டு கிளம்பியிருக்கு.. முகேஷ் அம்பானி மறுத்திருக்காரு.. இந்த விஷயத்துல கோட்டை விட்டது TRAI (டெலிபோன் ரெகுலேடரி அதாரிடி ஆஃப் இந்தியா')தான். உரிய நேரத்துல பிரச்னைல கவனம் செலுத்தல அப்படின்னும் பேசிக்கறாங்க.




டெக்னாலஜி எத்தனை முன்னேறினாலும், ஹ்யூமன் மைண்ட் முன்னேற லைன்னா பிராப்ளம்தான். டெக்னாலஜியும் மனமும் சேர்ந்து அழகா முன்னேறியிருக்கிற ஒரு கேஸ் பார்ப்போமா.. மைக்ரோஸாஃப்ட் நிறுவனம் தீபாவளிலேருந்து ஒரு புது சர்ச் வசதி ஏற்படுத்தியிருக்கு... இது இந்தியப் பண்பாடுக்குன்னு வடிவமைக்கப்பட்ட வசதி. குழந்தைகள் (வளர்ந்த குழந்தைகளும் தான்) மத்த 'சர்ச்'ல போய் கன்னா பின்னான்னு பிரவுஸ் பண்ணி மனசைக் கெடுத்துக்கற மாதிரி இதுல முடியாது. 'ஏ' 'எக்ஸ்' ரேட்டட் சமாசாரங்களைத் தேடச் சொன்னா, இது 'ஸாரி' சொல்லிடும். அதுக்குண்டான ஸ்ட்ராங் ஃபில்டர் போடப்பட்டிருக்காம்.

இன்றையச் சூழல்ல இது ஒரு நெஞ்சுரம் மிக்க மூவ்... சூப்பர் மார்க்கெட் ரசிகர் மன்ற உறுப்பினர்கள் சார்பில் ஹார்ட்டி கங்கிராட்ஸ் டு மைக்ரோஸாஃப்ட்!



சுமி



முதுகெலும்பை முறிக்கும் விலை உயர்வு!

பெட்ரோல், சமையல் காஸ் விலை உயர்வு, இந்திய மக்களுக்கு மத்திய அரசு தந்துள்ள தீபாவளிப் பரிசு! பொருளாதார மேதையான பிரதமரும், தமிழகத்தின் பெருமையென நாம் கருதிவரும் நிதி அமைச்சரும் சேர்ந்து, சராசரிக் குடிமகனின் முதுகெலும்பை முறிக்கிற அளவுக்குச் சுமையை ஏற்றியிருக்கிறார்கள்.

ஏற்றியதுமல்லாமல், "இது கடினமான முடிவுதான்... சகித்துக் கொள்ளுங்கள்" என ப.சிதம்பரம் கூறியிருப்பது உலக மகா அநீதி!

சர்வதேச அளவில் பெட்ரோலியப் பொருள்கள் விலை ஏறியுள்ளன. அதனால்தான் இந்த விலையேற்றம் என்று நியாயப்படுத்துகிறது நிதியமைச்சகம். 'இந்தியப் பெட்ரோலிய நிறுவனங்களின் லாபம் ஈட்டும் திறனைக் காப்பாற்ற வேண்டும்' என்று பிரதமர் அந்தப் பொதுத் துறை நிறுவனங்களுக்காகப் பரிந்து கொண்டு வருகிறார்...! ஆனால், சராசரிக் குடிமகன் படப்போகிற அவஸ்தையைப் பற்றி மத்திய அரசு கவலைப்படவே இல்லை.

டீசல் விலை உயர்வதால் லாரிக் கட்டணங்கள், சரக்கு போக்குவரத்துக் கட்டணங்களும் ஏறும். ரயில் கட்டணங்கள் ஏறும். இதன் விளைவாக உணவு, மருந்து, ஜவுளி என்று ஒரு பொருள் விடாமல் விலை ஏறும். விலைவாசி உயர்வினால், அரசு நிர்ணயிக்கும் அகவிலைப்படி உயரும். கூடவே பணவீக்கமும் அதிகரிக்கும்.

அரசு ஊழியத்தில் இருப்போரையும், அமைப்பு சார்ந்த ஊழியர்களையும், இந்த விலையேற்றமும் பண வீக்கமும் அவ்வளவாக




கல்கி



2004 நவம்பர் 21
தாரண கார்த்திகை 6
மலர் : 63
இதழ் : 17

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பாதிக்காது. தனியார் நிறுவனங்களிலும், அமைப்புசாரா தொழில்களிலும் பணிபுரிவோரின் பாடுதான் படு திண்டாட்டம். இவர்கள்தான் ஜனத்தொகையில் மிக அதிகமான சதவிகிதத்தினர்.

பெட்ரோல் - டீசல் கார்களுள் பெரும்பாலானவை, அரசுக்கோ தனியார் நிறுவனங்களுக்கோ சொந்தமானவைதான். இவற்றுக்கு ஆகக் கூடிய கூடுதல் பெட்ரோல் செலவை அரசும், அத்தனியார் நிறுவன உரிமையாளர்களும் தங்கள் செலவுக் கணக்கில் எழுதிவிட்டு, முறையே வரிகளையும், உற்பத்திப் பொருள்களின் விலையையும் கூட்டத்தான் போகின்றனர்.


சொந்தத்தில் கார் வைத்திருக்கும் தனி நபர்களும், ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள்களை வைத்துள்ள மத்திய தர வர்க்கத்தினரும்தான் தங்கள் வரவு - செலவைச் சரிக்கட்ட முடியாமல் திண்டாடப் போகிறார்கள். இவர்களுள் அனேகம் பேர் வாகனம் வாங்குவதற்குக் கடன் வாங்கி, வட்டியும் தவணையும் செலுத்திக் கொண்டிருப்பார்கள். எரிபொருளுக்கு ஆகக் கூடிய கூடுதல் செலவுக்கு அவர்கள் எங்கே போவார்கள்?

ரயில் கட்டணங்கள் உயர்ந்தால், அரசு செலவில் 'இலவச' பயணம் செய்யும் எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்கும், அதிகாரிகளுக்கும் என்ன பாதிப்பு ஏற்பட்டுவிடும் ...? எதுவுமே இராது. அத்தனை பாதிப்பும் மீண்டும் மத்தியதர வர்க்கத்தின் மாதச் சம்பளக்காரர்களுக்குத்தான்!

சமையல் காஸ் விலை உயர்வு, வரலாறு காணாத விபரீதம்! இருபது ரூபாய் ஏற்றிவிட்டு, தொடர்ந்து மாதந்தோறும் ஐந்து ரூபாய் ஏற்றிக்கொண்டே இருப்பார்களாம்! பெட்ரோலியப் பொருள்களுக்கு அளித்து வரும் மானியத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்காக எடுத்த முடிவு இது' என்கிறார்கள்!

மானியங்களை நீக்குவது புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சம்தான். ஆனால் எந்த மானியங்களை, எந்த அளவுக்குக் குறைப்பது என்ற நுண்மதியுடன் இந்த அரசு செயல்படத் தவறியது ஆச்சரியமே!

உணவும் போக்குவரத்தும் அடிப்படைத் தேவைகள். இவற்றுக்கான மானியத்தை நீக்கினால், பொருளாதாரம் ஆட்டம் கண்டுபோகும். இன்று சமையல் காஸ் என்பது வேறெந்த



எரிபொருளைக் காட்டிலும் மலிவானது என்பதால், குடிசைவாழ் மக்கள்கூட அதைத்தான் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இவர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள்? ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினரின் நிம்மதியும், பொருளாதார ஸ்திரத்தன்மையும் பாதிக்கப்படுகிறபோது, அரசிடம் அவர்கள் நம்பிக்கை இழப்பார்கள்.

அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்த என்ன முயற்சியை இந்த அரசு எடுத்திருக்கிறது? அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கார், டெலிபோன், பெட்ரோல் உபயோகத்துக்கு ஏதேனும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறதா..? எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்குத் தொகுதி மேம்பாடு மானியம் தந்து ஏன் பணத்தை விரயமாக்க வேண்டும்...? அரசுத் துறைகள் ஒழுங்காகச் செயல்பட்டால், தனியே தொகுதி மானியம் எதற்கு...?

ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தரப்பட்டுள்ள ஏராளமான சலுகைகள், இன்னும் எத்தனை காலம்தான் நீடிக்கும்? அன்னியச் செலாவணி கையிருப்புக் கணிசமாக உயர்ந்துள்ள நிலையில், சர்வதேச பெட்ரோலிய விலை ஏற்றத்தை நம்மால் ஏன் எதிர்கொள்ள முடியவில்லை..? இத்தனைக் காலமாகச் சலுகைகள் அனுபவித்துக் கொழித்த ஏற்றுமதி நிறுவனங்களின் சலுகைகளைக் குறைத்து, வரிகள் விதித்து நிலைமையைச் சமாளித்திருக்கலாமே... எதற்காக மத்திய தர வர்க்கத்தின் வயிற்றில் அடிக்கிற இம் முடிவை மத்திய அரசு எடுக்க வேண்டும்!

சமையல் காஸ் விலை உயர்வை நியாயப்படுத்தும் பிரதமரின் மனைவி, இதே காரியத்தை பா.ஜ.க. அரசு செய்திருந்தால் ஆதரித்திருப்பாரா...?

கண் துடைப்புக்காக விலை உயர்வை எதிர்க்கும் காங்கிரஸின் தோழமைக் கட்சிகள், அமைச்சர் பதவி வேண்டுமானாலோ, ஆளுனரை மாற்ற வேண்டுமானாலோ காண்பிக்கிற பிடிவாதத்தை, இந்த விலை உயர்வை எதிர்ப்பில் ஏன் காட்டவில்லை...?

எல்லாம் பதவி மோகம் படுத்துகிற பாடுதான்!

அரசியல் சுயநலத்துக்கும், அனுதாபமற்ற பொருளாதார அணுகுமுறைக்கும் இடையில் மாட்டிக் கொண்டு திணறுகிறார்கள், இந்த அரசை ஆட்சியில் அமர்த்திய வாக்காளர்கள். ●

தென்னை மரத்தில் தேள் கொட்டினால்...!



சென்ற சில தினங்களாக பங்கு மார்க்கெட்டில் பங்குகளின் விலை சரசரவென்று ஏறிக் கொண்டே போய், நவம்பர் 3ம் தேதி ஒரே நாளில் சென்செக்ஸ் 88 குறியீட்டு எண் அதிகரித்துள்ளது. இதற்கு காரணம் அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜார்ஜ் புஷ் ஜெயித்து வெற்றி முரசு கொட்டியதுதான் என்கிறார்கள். சரி அமெரிக்கத் தேர்தல் முடிவுகள், இந்தியப் பங்கு மார்க்கெட்டை ஏன் பாதிக்க வேண்டும்? பக்கத்துக்கு இலைக்கு ஜாங்கிரி விழுந்தால், நம்ம இலையிலேயும் விழும் என்கிற சின்ன கணக்குதான்.

பயங்கரவாதத்தை அடக்க பெரு முயற்சிகள் மேற்கொள்ளும் புஷ்ஷின் அரசியல் நடவடிக்கைகள் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையால், பல அமெரிக்க கம்பெனிகள், தங்களின் பல செயல் பாடுகளை, இந்திய தகவல் தொடர்பு கம்பெனிகளிடம் ஒப்படைத் திருக்கின்றன.

இதனால் இந்தியாவில் உள்ள பல தகவல் தொடர்பு கம்பெனிகள் நல்ல லாபகரமாகச் செயல்படுகின்றன. தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட ஜான்கெர்ரி, இந்த முறையை எதிர்த்தார். ஆனால் புஷ் ஆதரித்தார். புஷ்ஷின் வெற்றியினால், இப்போதுள்ள ஏற்பாட்டுக்கு எந்தக் குந்தகமும் வராது என்ற நிலை. அதனால்தான் இந்தியாவில் உள்ள தகவல் தொடர்பு கம்பெனிகளின் பங்கு விலைகள் உச்சாணிக்குப் போய் விட்டன.

இன்னொன்றையும் முதலீட்டாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய விலை ஏற்றங்கள் நிரந்தரமானவை அல்ல. ஓர் உணர்ச்சிமயமான சந்தர்ப்பத்தில் விலை ஏறுவதும், பின் அந்தச் சூழ்நிலை இயல்புக்குத் திரும்பியதும் விலை இறங்குவதும், பொதுவாக நடக்கக் கூடியதே.

'இவ்வளவு சொல்றீங்களே... எந்த மாதிரியான பங்குகளை வாங்க வேண்டும் என்று 'பளிச்'னு சொல்லிடுங்க சார்' என்று நீங்கள் கேட்பது புரிகிறது... அதனை அடுத்த வாரம் தெளிவாகச் சொல்கிறேன்.

- வி. கோபாலன்



பங்குச் சந்தை டிப்ஸ்



இருக்கும் இடத்தை விட்டு!

தெம்புக்குப் படிங்க! 3

இயற்கை அழகை எப்போதும் கண்டுகளிக்க வேண்டும் என்பதற்காக ஒருவர் மலை உச்சியில் வீடு கட்டினார்.

நண்பர்களை அழைத்துக் கொண்டு வந்து காட்டினார். வீட்டை சுற்றிப் பார்த்த ஒரு நண்பரிடம் இவர் கேட்டார்: "வீடு எப்படி இருக்கிறது?"

"வீடு அருமையாகத்தான் இருக்கிறது... இருந்தாலும் அந்த மலை தான் இடைஞ்சலாக இருக்கிறது...!" என்றார் நண்பர்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"இந்த ஜன்னல் வழியே பார்க்கும்போது அந்த மலை தான் அழகு முழுவதையும் ரசிக்கவிடாமல் மறைக்கிறது!"

"அப்படியா?"

வீடு கட்டியவர் யோசித்தார்.

மலை அழகை ரசிக்கத்தான் ஜன்னல் வைக்கப்பட்டது. ஆனால் அந்த மலையே இடைஞ்சல் என்றால்...?

அவருக்கு ஓர் உண்மை புரிந்தது.

'மனம் கண்ணில் தெரிவதை விட்டு விட்டு கண்ணுக்குத் தெரியாததை நினைத்துத்தான் ஏங்குகிறது!'

அருகில் இருக்கும் அருமை புரிவதில்லை. ஆகாயத்தில் இருக்கும் வெறுமைக்காக ஏங்குகிறோம். இதனால் மனம் தளர்ந்து போகிறது. வாழ்க்கை தடுமாறுகிறது.

ஓர் இளைஞன், 'இந்த உலகத்திலேயே அழகான பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்!' என்று பிடிவாதமாக இருந்தான். அவனுக்கும் வயதாகிக் கொண்டே போனது. நீண்ட காலத்துக்குப் பின் அவனை நண்பன் ஒருவன் சந்தித்தான்.

"என்னப்பா... அழகான பெண் கிடைத்தாளா...?"

"தேடிக்கிட்டுத்தான் இருக்கேன். மூணு மாசத்துக்கு முன்னாடி கோயமுத்தூர்லே ஒரு பெண்ணைப் பாத்தேன்!"

"என்ன ஆச்சு?"

"அவளுக்கு மூக்கு சரியில்லே!"

"அப்புறம்?"

"திருநெல்வேலியிலே ஒரு பெண்ணைப் பார்த்தேன்... அவளுக்குக் காது சரியில்லே!"

"அய்யோ... அப்புறம்...?"

"திருச்சியிலே ஒரு பெண்ணைப் பார்த்தேன்... அவளுக்குக் கண்ணு சரியில்லே...

"கடைசியா தஞ்சாவூர்லே போய் ஒரு பெண்ணைப் பார்த்தேன்... அவதான் நான் எதிர்பார்க்கிற மாதிரி அழகா இருக்கிறா!"

"நல்லவேளை...! அதுவாவது முடிஞ்சுதா?"

"இல்லையே!"

"ஏன்?"

"அவளும் ஒரு அழகான மாப்பிள்ளையா தேடிக்கிட்டிருக்காளே!"

(பேசலாம்)



தென்கச்சி சுவாமிநாதன்

இளவயது நினைவுகள் எப்போதுமே இனிமையானவை. 'உங்களின் பால்ய கால சம்பவங்கள் ஞாபகமிருக்கிறதா?' என்று கேட்டதுதான் தாமதம்... பழைய ஞாபகங்களில் மூழ்கி முத்தெடுத்து விட்டனர் வி.ஐ.பிகள்.

பொன்மணி வைரமுத்து:

"இரண்டாம் வகுப்பிலிருந்துதான் என் பள்ளிப் பருவக் கல்வி தொடங்கியது. எனக்குப் பிடித்த கங்காதேவி டீச்சர் வகுப்பில்தான் உட்காருவேன் என்று அடம்பிடித்து, பையன்கள் வகுப்புக்கு டீச்சராயிருந்த அந்த ஆசிரியையின் வகுப்பில் இருந்தே பாடம் கேட்டேன். பாடம் எழுதுவது எனக்கு அப்போது வேப்பங்காயாயிருந்தது. கரும் பலகையில் எழுதிப்போடும் பாடங்களை நான் எழுத வேண்டும் என்று, இனிப்பு காராச்சேவு, தேன்மிட்டாய் எல்லாம் நிறைய வாங்கித் தந்து, கங்காதேவி டீச்சர் என்னை பாடம் எழுத வைப்பதுண்டு. புளிய மரம், வேம்பு, ஆல், அரசு சூழ்ந்த குளத்துக்கு அருகே, மரத்தடி வகுப்புகள் நடக்கும். பெருமாள் வாத்தியார் நன்றாகத் தமிழ் நடத்துவார். மூன்றாம் வகுப்பில் சுதந்திராதேவி டீச்சர் பயிற்சி தர, ஒரு பள்ளி விழாவில் 'மகிழ்வு கொண்டோம் நாம் பாடியாடுவோம்' என்ற பாடலுக்காக என் வயதொத்த சிறுவர் - சிறுமியரோடு நான் ஆட இருந்தபோது, 'பையன்களோடு சேர்ந்து ஆடக்கூடாது' என்று என் பாட்டி நடனத்திலிருந்து என்னை நிறுத்தி விட்டார்.

ஒரு முறை பள்ளிக்கூடம் விட்டு குளத்தருகே விளையாடச் சென்றபோது குளத்தில் விழுந்துவிட்டேன். கங்காதேவி டீச்சர் என்னை வீட்டுக்கு அழைத்துச் செல்ல, பாட்டி, பயம் ஒருபுறம் கோபம் ஒருபுறம் பொங்கிவர, பளாரென்று என்னை அடித்துவிட்டார். செம்மண் வீதியில் பாண்டியாடியதும், நீர் முகர்ந்து சென்றதும், புளியங்காய்களை அள்ளி ருசி பார்த்ததும், பெருமாள் கோயிலின் படி வாசமும், முத்துமாரியம்மன் கோயிலில் வைத்த பொங்கலின் ருசியும் இன்னும் எனக்குள் வெகு பசுமையாகப் படிந்திருக்கின்றன."

லேனா தமிழ்வாணன்:

"என் பெரியம்மாவுக்கு குழந்தைகள் இல்லாததால், அவர்களது ஊரான தேவகோட்டையில்தான் நான் பிறந்தது முதல் நான்காவது படிப்பு முடியும் வரை வளர்ந்தேன். அந்த ஒன்பது வயது வரை சென்னை பக்கமே எட்டிப் பார்க்காததால், என் சகோதர-சகோதரிகள் எனக்கு நீண்ட நாட்களாக அன்னியமாகவே தெரிந்தனர்.



• பொல்லாத பாபா...



சீதையை அனுமன் கண்டதாக இராமனிடம் விவரித்த இடமான கண்டதேவியில், வருடம் தோறும் திருவிழா நடக்கும். எனக்கு நான்கு வயதிருக்கும் பொழுது, அந்தத் திருவிழாவில் தொலைந்து போய் விட்டேன். அவ்வளவுதான், என் பெற்றோருக்கு எப்படி பதில் சொல்வது என்று என் பெரியம்மாவும் பெரியப்பாவும் பயந்து விட்டிருக்கின்றனர். ஒருவரிடம் அழுது கொண்டே, 'நான் தமிழ்வாணன் மகன்' என்று நான் சொல்லிய பிறகு, அவரே என்னை பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார். அப்பொழுதெல்லாம்

வருதே...

எல்.கே.ஜி, ப்ரீகேஜி கிடையாது. இரண்டாவதில் எனக்கு வகுப்பாசிரியராக இருந்த கோபாலகிருஷ்ணன், மற்றும் தமிழாசிரியர் பசுபதி வாத்தியார், நண்பன் அப்பு போன்றோர் இன்னமும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றனர். சிறு வயதில் களத்து மேடுகளில், குப்பை மேடுகளில் வளர்கின்ற செடிகளை வீட்டுக்குக் கொண்டு வந்து நட்டு, எனக்குள் ஆர்வத்தை வளர்த்து, இன்றைக்கு செங்கல்பட்டுக்கு அருகில் 'கருங்குழி' எனும் இடத்தில், 'தமிழ் வாணன் விவசாயப் பண்ணை' அமைத்திருக்கிறேன். ஆனால், சிறு வயதில் என்னுடன் உயிராய்ப் பழகிய நண்பன் அப்புனுவை தொலைத்துவிட்டு, மிகப்பெரிய ஆதங்கத்தோடு இன்று வரை தேடிக் கொண்டிருக்கிறேன்.

நான் நான்காவது படிக்கும்போது என்னை 'ஸ்வீகாரம்' பண்ண என் பெரியம்மா முடிவெடுக்க, பதறிப்போன என் அன்னை உடனடியாக என்னை சென்னைக்குத் தரதரவென்று இழுத்து வந்ததும், என் பெரியம்மாவையும், அந்த வீட்டையும், என் கிராமத்து வாழ்க்கையையும் விட்டுப் பிரியும் பொழுது அடக்க முடியாமல் கண்ணீரில் மூழ்கியதும் என்றென்றைக்கும் மறக்கவியலாதது."

சுகுமாரன் நம்பியார்:

"எனக்கு பேர் வச்சதே எம்.ஜி.ஆர். தான். அவர்கிட்ட அன்பும், கண்டிப்பும் 50-50 கிடைக்கும். சின்ன வயசுல நான் ரொம்பவும் குறும்பு பண்ணுவேன். அப்படிச் செய்தால் உடனே என்னைத் தட்டிக் கேட்டு, முதுகுல ரெண்டு போடு போடறது அவராத்தான் இருக்கும். அதனால அவரை நான் 'பொல்லாத மாமா'ன்னுதான் சொல்லுவேன். அவர் ஃபோன் பண்ணினா 'அப்பா! பொல்லாத மாமா போன் பண்றார்'னு சொல்லுவேன். அப்போ எனக்கு நான்வெஜ் சாப்பிட விருப்பம் ஜாஸ்தி. ஆனா எங்க வீட்ல அது கிடைக்காது. அதனால எம்.ஜி.ஆர். வீட்லதான் சாப்பிடுவேன். குதிரைச் சவாரின்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஒருமுறை அப்பாவுக்கு ஒகேனக்கல்ல ஷூட்டிங். அங்க இருந்த குதிரையை யாருக்கும் தெரியாம எடுத்துக்கிட்டு, காட்டுக்குள் போயிட்டேன். அப்போ 'மம்பட்டியான்' அந்தப் பகுதியில ரொம்பவும் பாப்புலர். அதனால நேரம் ஆக ஆக, எல்லாரும் ரொம்பவும் பயந்துட்டாங்க போல... நான் ஆடி அசைஞ்சி திரும்பி வந்ததுதான் தாமதம்... அப்பா விட்ட டோஸ் இன்னைக்கும் என் காதுல கேட்டுட்டே இருக்கு."



• பாடியாடுவோம்!



• எங்கே என் அப்பு?

• எழில், ஸ்வரா

படம்: ராஜன்

அப்போதுதான் ஷூட்டிங் முடிந்து வீட்டுக்கு வந்திருந்த சூர்யா, பார்க்க நாற்பதுகளின் ஹீரோபோல் இருந்தார். 'மாயாவி' படத்துக்காக கோடிழுத்தது போன்ற மீசையுடன், யாரும் சிரித்துவிடும் தோற்றம். காக்க காக்க, பேரழகன் என்று படங்களின் தொடர் வெற்றி ஆர்ப்பாட்டப்படுத்தாமல் அவரை நிதானப்படுத்தியிருப்பது ஆச்சர்யமாக இருந்தது. கல்கிக்காக அவருடன் பேசினோம்.

தங்களின் லேட்டஸ்ட் புராஜெக்ட் மாயாவி. படத்தில் யார் மாயாவி? நீங்களா?

"ஆம்... நான்தான். ஆனால் மாயாஜாலம் செய்து காட்டும் மந்திரவித்தைக் கலைஞர் அல்ல. சில காரியங்களைத் துணிச்சலாகச் செய்து விட்டு, அசத்தலாக நழுவி விடுவான். அதனால்தான் மாயாவி. எல்லோருக்கும் பிடிக்கக் கூடிய ஒரு லவ்லியான ஆள். எல்லோரும் சந்தித்திருக்கக் கூடிய சாதாரண மனிதன். ஒரு ரியல் லைஃப் கேரக்டர்."

தாங்கள் ஒவ்வொரு படத்திலும் தோற்றத்தை மாற்றிக் கொள்வது, போட்டியை சமாளிக்கும் உத்தியா?

"தோற்றத்தை மாற்றி விட்டால் ஐம்பது சதவிகிதம் நடிக்கிற வேலை இல்லை என்பது சிலரின் மேலோட்டமான விமர்சனம். என்னைப் பொறுத்தவரை பாத்திரத்துக்காக தோற்றத்தை அடியோடு மாற்றிக் கொள்ளுதல் என்பது, அந்தப் பாத்திரமாகவே மாறிவிட உதவும் பாதுகாப்புக்

" எங்கள் ஜோடியை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள்! "





"என் வழி



கவசம். அந்தப் பாத்திரத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்க வைக்கிற கடிவாளம். ஒவ்வொரு படத்திலும் தோற்றத்தை மாற்றிக் கொள்ளும்போது, சூர்யாவாகவும் இல்லாமல்,



எனது பழைய பாத்திரங்களின் நினைவோ, பாதிப்போ இல்லாமல், அவற்றை மறந்துவிட்டு, இதற்காக மட்டும் யோசிக்க வேண்டிய கட்டாயமும், ஈடுபாடும் வந்துவிடுகிறது. புதிய பாத்திரத்துக்கான உடல்மொழி, வசன உச்சரிப்பு என்று உழைத்தே ஆக வேண்டும். நமது உழைப்பு படத்தில் தெரிந்தால், ரசிகர்கள் கைவிட மாட்டார்கள்.''

ஆட்டம், பாட்டம், அடிதடி, காதல் என ஒரே மாதிரியான பாத்திரங்களில் நடிக்கும் விஜய் போன்றவர்களின் படங்களையும் ரசிகர்கள் தொடர்ந்து ரசிக்கிறார்கள்... நீங்கள் மட்டும் ஏன் ரிஸ்க் எடுக்கிறீர்கள்?

''ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று பிடித்திருக்கிறது. விஜய் நல்ல என்டெர்டெய்னர். அற்புதமான டான்ஸரும்கூட. ஒவ்வொரு படத்திலும் ஒரு ஹிட் சாங் கொடுப்பது சாதாரண விஷயமல்ல. திரும்பத் திரும்ப, ஒரே மாதிரி டான்ஸ், சாங் வந்தாலும் விஜய் படங்கள் வெற்றி பெறுகின்றன. அவரும் 'இதைத்தான் மக்கள் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு மேல் நாம் எதுவும் செய்யத் தேவையில்லை' என்று தெளிவாக இருக்கிறார். எனக்கோ, செய்ததையே திரும்பத் திரும்பச் செய்வதில் ஈடுபாடு சுத்தமாக இல்லை. ஒரு பாத்திரத்தை ஏற்கும்போது புது ரத்தம் உள்ளே பாய்ந்ததுபோல் இருக்க வேண்டும், என்று மனசு அடம் பிடிக்கிறது. புதிய புதிய பாத்திரங்களில் நடிக்கும்போது, மறுபடி மறுபடி பிறக்கிற புத்துணர்ச்சி கிடைக்கிறது. இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது. என் வழி தனி வழி! இதே வழியில் செல்லும்படி எல்லோரும் உற்சாகப் படுத்துகிறார்கள்.''


இன்று பல இளம் நடிகர்கள், ஆக்ஷனுக்கு அர்னால்டு, நடிப்புக்கு அல்பாச்சினோ என்று ஹாலிவுட் முன்னுதாரணங்களைப் பின்பற்றுவதாகச் சொல்கிறார்கள். தினசரி ஹாலிவுட் படங்

தனி வழி!''

–சூர்யா

களைப் பார்ப்பதாகவும், ஆக்ஷன் இமேஜ் பற்றி அதிகம் கவலைப்படுவதாகவும் சொல்கிறார்கள். உங்களுக்கு இதிலெல்லாம் ஆர்வமில்லையா?

"ஹாலிவுட் படங்களைப் பார்த்துவிட்டு, நாம் எப்போது இதுமாதிரியான படங்களை எடுக்கப் போகிறோம் என்று பேசுகிறோம். அதற்கு அவசியமே இல்லை. அதை எடுக்க அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கலாசாரமே வேறு. அது வேறு உலகம். நமது பின்புலம், நமது கலாசாரம், நமது ரசிகர்கள் வேறு. நமக்கான படங்களை, நமது கலாசார அடையாளத்தோடு எடுக்க வேண்டும். அதே நேரம் எல்லாத் தரப்பு ரசிகர்களையும் சென்று சேர்வதுபோல ஜனரஞ்சகமாக இருக்க வேண்டும். வெறும் அறிவு ஜீவிகளுக்கான படமாக இருக்கக் கூடாது. ஆனால் அவர்



களையும் திருப்திப்படுத்த வேண்டும். நான் ஹாலிவுட் படங்களைப் பார்ப்பதையே குறைத்துக் கொண்டிருக்கிறேன். குறிப்பிட்ட இமேஜ் வட்டத்துக்குள் சிக்கிக் கொள்வதிலும் விருப்பமில்லை. எல்லோருக்கும் பிடிக்கிற படங்களில் நடிக்க வேண்டும். சிவாஜி சாரும், கமல்சாரும் எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் எப்படி ஈடுபாட்டுடன் செய்வார்களோ, அதுபோல் செய்ய வேண்டும். சூர்யா எதைச் செய்தாலும் இயல்பாக, வித்தியாசமாகச் செய்வான் என்று சொல்ல வேண்டும். ஒரு காலகட்டத்தோடு போய் விடுவதில் எனக்கு விருப்பமில்லை."

இயக்குனர் பாலா முதன்முதலில் தயாரிக்கும் படத்தில் நடிக்கிறீர்கள். இது என்ன நன்றிக் கடனா?

"அப்படிச் சொல்ல முடியாது. அதை விட, எனக்குப் பெருமையான விஷயமாக நினைக்கிறேன். பாலா அண்ணன் எல்லோரும் கவனிக்கிற, திரும்பிப்பார்க்கிற ஒரு இயக்குனராகிவிட்டார். தேசிய விருது வாங்கும் நடிகர்களை உருவாக்குகிற ஒரு இயக்குனராக இருக்கிறார். ஒரு சிறந்த தயாரிப்பாளராகவும் வெற்றி பெறுவார். அவரது தயாரிப்பில் எனக்கு முக்கியத்துவம் கொடுப்பதை பெருமையாக நினைக்கிறேன்."

படத்தின் இயக்குனர் சிங்கப்புலி. பெயரே வித்தியாசமாக இருக்கிறது. இயக்குனர் எப்படி? அவரும் வித்தியாசமான ஆள்தானா?

"பிதாமகனில் அந்த அளவு மாறுபட்ட உடல் மொழியோடு நடிக்க முடிந்தது என்றால், சிங்கப்புலிதான் காரணம். சிங்கப்புலி ஒரு லைவ்லியான இயக்குனர். பேசிக் கொண்டே இருக்கும் ஒரு சேஷ்டையான மனிதர். செட்டில் குறும்பான ஆள். எனக்கு நீண்ட நாட்களாக அவரது இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்று ஆசை. இப்போது நிறைவேறுகிறது."

மாயாவியின் சிறப்பம்சம் நகைச்சுவையா?

"ஆமாம்! ஆனால் கதைக்களமே புதியது. யதார்த்தமான சம்பவங்கள் நிறைந்த விறுவிறுப்பான கதையோட்டம். படத்தை இப்படியும் நகர்த்த முடியுமா என்று ரசிகர்கள் வாய் பிளந்து விடுவார்கள்."

சென்னையில் பருவ மழை இந்த ஆண்டு கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. ஆனால் உங்களது 'சென்னையில் ஒரு மழைக்காலம்' ஏன் நின்று போனது?

"எல்லாம் சின்னச் சின்ன காரணங்கள்தான். கௌதம் ஒரு துல்லியமான இயக்குனர். அவரது ஸ்டைலும் அப்ரோச்சும் முற்றிலும் மாறுபட்டவை. இந்தக் காட்சி இரண்டரை நிமிஷம் என்றால், அதில் ஒரு

நொடி கூட அதிகம் எடுக்கமாட்டார். அப்படியொரு பர்ஃபெக்ஷனிஸ்ட். காக்க காக்க எத்தனை பெரிய வெற்றியடைந்தாலும், அடுத்து ஒரு இளமையான காதல் கதை பண்ணலாம் என்றார். படப்பிடிப்பின் போது நிஜ வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களை என்னிடம் சொல்லியிருக்கிறார். அதில் ஒரு சம்பவம் அற்புதமாக இருந்தது. அதைத்தான் ரெடி பண்ணினார். ஆனால் அதேபோன்ற சம்பவங்களோடு ஹிந்தி, தெலுங்கில் தலா ஒரு படம் ரிலீஸ் ஆகிவிட, கதையைச் சீரமைக்க வேண்டிய கட்டாயம். இதற்கிடையில் அடுத்து எனக்காக இயக்குனர், தயாரிப்பாளர்கள், காத்திருப்பதை கௌதமே விரும்பவில்லை. அடுத்த படத்தில் இறங்கு என்றார். விரைவில் கௌதம் இயக்கத்தில் மீண்டும் நடிப்பேன்."

உங்கள் சகோதரர் ஆர்யாவும் ஹீரோவாகக் களமிறங்கப் போகிறார் என்று கேள்வி?

"இல்லை! அவருக்கு சினிமா இயக்கம் மீது அதிக விருப்பம். இப்போது மணிரத்னம் சாரிடம் உதவி இயக்குனராக இருக்கிறார். விரைவில் எங்கள் வீட்டிலிருந்து ஒரு இயக்குனரை எதிர்பார்க்கலாம்."

தனுஷ் - ஐஸ்வர்யா காதல் கல்யாணத்தில் முடிந்துவிட்டது. இந்த மாயாவியின் காதல் மர்மம் மட்டும் இன்னமும் நீடிப்பதேன்?

"இதில் மர்மமே இல்லை. நான் திறந்த மனதுடன் இருக்கிறேன். ஜோ. என் ப்ரியத்துக்குரிய தோழி, அவ்வளவுதான். இதில் தற்போதைக்கு எந்த மாற்றமும் இல்லை. துறுதுறுப்பான அவரின் வேகம், குழந்தைத்தனம் எல்லாம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஒரு சக்சஸ்ஃபுல் ஹீரோயின் என்கிற பந்தா அவரிடம் துளிக்கூட கிடையாது. எங்கள் ஜோடியை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டதால், தொடர்ந்து இணைந்து நடிக்கிறோம். பேரழகனில் பார்வையற்ற பெண்ணாக அவர் நடித்திருந்தது, என்னை நெகிழ வைத்தது. மாயாவியிலும் அவரது திறமைக்கு நிறைய தீனி போட்டிருக்கிறார்கள். இப்போதெல்லாம் தனக்கு நடிக்க ஸ்கோப் உள்ள கதாபாத்திரங்களை மட்டும் தான் அவர் ஒப்புக் கொள்கிறார். என்னைக் கேட்டால், தமிழ் சினிமாவின் புதிய வரவுகள் ஜோ.வைப் பின்பற்றலாம் என்று சொல்வேன்."

- ஜெயந்தன்

படங்கள் : **ஸ்ரீஹரி**

3 ஏழாம் பாகம்

குறையொன்றுமில்லை

சுமத்யானி : என்றால் லக்ஷ்மியோடு. தினையளவும் திருமகளைப் பிரியாதவன் அவன்.

'அலர்மேல் மங்கை மார்பன்'
'திருமகள்சேர் மார்பனே'
'மாமலர் மன்னிய மங்கை
மகிழ்ந்துரை மார்பன்'
'பூமன்னு மாது பொருந்திய மார்பன்'

- இப்படி மகான்களான ஆழ்வார்களெல்லாருமே வேதத்தில் சொல்லப்பட்ட கருத்தைத் தமிழ்ப்படுத்திக் காட்டினார்கள்.

சுமத்யானி : - தினையளவும் திருமகளைப் பிரியாதவன் - என்று வேதம் ஸ்ரீமந் நாராயணனைச் சொல்கிறது.

எப்பொழுதும் சேர்ந்தே இருக்கிறார்கள் இந்த திவ்ய தம்பதி. திவ்ய சம்யோகம் என்று பெயர்.

'ஸ்ரீமதே நாராயணாய நம :
ஸ்ரீமந் நாராயண சரணம்
சரணம் ப்ரபத்யே'

ஸ்ரீமதே நாராயணாய நம : என்கிற மந்திரத்துக்கு த்வய மந்திரம் என்றே பெயர் - மஹாலக்ஷ்மி மந்திரம்; சரணாகதி மந்திரம் அது.

லக்ஷ்மியோடு சேர்ந்தே அவன் இருக்கிறான். ஆசார்யர்கள் இதைக் காட்டிக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட லக்ஷ்மியோடு சேர்ந்து அங்கும் இருக்கிறான்; பூலோகத்திலேயும் அவளுடனேயே அவதாரம் பண்ணுகிறான்.

அவன் ராகவனாக வருகிறபோது, சீதையாய் லக்ஷ்மி தோன்றினாள்.

அதே மாதிரி, கிருஷ்ணனாக வருகிறபோது, ருக்மிணியாக வந்து பிறந்தாள்.

'இப்படிக்கெல்லாம் தப்படியேற்று நின்னுடன் சேர்ந்து நிற்கும் நின் திருவே!' என்றார் ஆழ்வார்.

அவன் எப்படி எப்படியெல்லாம் மாறுகிறானோ, அதற்கேற்ப மஹாலக்ஷ்மியும் அவதாரம் பண்ணி, சகதர்மிணியானதனாலே,

'புகலொன்றில்லா அடியேன் நின் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'

என்று 'வேறு சுத்யந்தமற்ற அடியேன் உன் திருவடியைப் பற்றுகிறேன்' என்று பற்றுகிறபோது, லக்ஷ்மியை முன்னிட்டு அந்த எம்பெருமான் திருவடியைப் பற்ற வேண்டும்.

ஏனென்றால் நாராயணனைச் சொன்ன விடத்திலெல்லாம் லக்ஷ்மியையும் சொல்லிற்றாம்.

நாராயணனைச் சொன்னால் தனித்து வரமாட்டான் அவன்... லக்ஷ்மியோடு சேர்ந்துதான் வருவான்.

ஆக்னா வைஷ்ணவம் என்றொரு யக்ஞம். அந்த யக்ஞத்திலே அக்னியும் விஷ்ணுவும் தேவதைகள். 'விஷ்ணவே ஸ்வாஹா', 'அக்னயே ஸ்வாஹா' என்று



யக்ஞும் பண்ணினால், அது விஷ்ணுவுக்கோ அக்னிக்கோ மட்டும் போவதில்லை, இரண்டு பேரும் சேர்ந்துதான் அந்த ஹவிஸை ஸ்வீகரிப்பார்கள்.

அதுபோன்றுதான் 'விஷ்ணவே ஸ்வாஹா' என்றால், லக்ஷ்மியும் சேர்ந்து அதை அங்கீகரிக்கிறாள்.

அதேபோல், லக்ஷ்மி ஸூக்தத்தைச் சொல்லி ஹோமம் பண்ணினால், மஹாலக்ஷ்மிக்கு மாத்திரம்தான் அது போகிறது என்று நினைக்கக் கூடாது. மஹாவிஷ்ணுவுடன் சேர்ந்தே அவள் அதை ஏற்கிறாள்.

ஸ்ரீ ஸூக்தம் பற்றி நிறைய சொல்லியிருக்கிறேன்.

'ஹிரண்ய வர்ணாம் லக்ஷ்மீம்...' என்று பிரார்த்தனை பண்ணுகிறபோது யாரிடத்திலே பண்ணுகிறோம்?

'ஹே ஜாதவேதோ! நாராயண!' என்று மஹாவிஷ்ணுவை அழைத்துத்தான்



''டி.வி. மெக்கானிக் ரொம்ப நல்லவர்!''
''எப்படி?''
''டி.வி.யை ரிப்பேரும் செய்துட்டு மூணு நாள் மெகா சீரியல் கதைகளையும் சொல்லிட்டுப் போறார்!''
- பம்மல் நாகராஜன்

பிரார்த்திக்கிறோம்.

முதல் ரிக்கிலேயே 'ஜாதவேதோ!' என்று அவன் பெயர்தான் வருகிறது.

ஸ்ரீ ஸூக்தம் என்று பெயர் அதற்கு... ஆனால் பிரார்த்தனை நாராயணனிடத்திலே! ஆகவே இரண்டு பேரும் எப்போதும் சேர்ந்தே இருக்கிறார்கள்.

அப்படி லக்ஷ்மியோடு கூடியிருக்கும்படியான விஷ்ணுவை ஹவிஸினால் யார் ஆராதிக்கிறார்களோ, அவர்கள் உயர்ந்து விளங்கி, அந்தத் தம்பதியின் பரிபூர்ண கடாக்ஷத்துக்குப் பாத்திரமாகிறார்கள்.

ஆனால்... யக்ஞம் பண்ணுவதானால் அதற்குப் பலவித நியமங்கள் உண்டு... இந்தக் கலியுகத்தில், அவசர யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும்படியான நமக்குப் பலவித கஷ்டங்கள்.

யக்ஞம் பண்ண முடியாது. சந்தியா வந்தனமே சிரமப்படுகிறது. அரை மணி நேரத்தில் பண்ணக் கூடிய சந்தியா வந்தனத்துக்கே நாம் அவகாசமில்லாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

பெரிய பெரிய மஹா யக்ஞங்களுக்கெல்லாம் சங்கல்பம் பண்ணிக் கொண்டால், நல்ல இடம், உயர்ந்த திரவியங்கள், பலபேருடைய சகாயம் இத்தனையும் அமைய வேண்டும். அப்படிப்பட்ட யக்ஞத்தில், யக்ஞம் பண்ணும்படியான அதிகாரிக்குத் தலை நரைத்திருக்கக் கூடாது - ஒரு கேசம்கூட நரைத்திருக்கக் கூடாது. அத்தனை இளமையிலேயே யக்ஞம் பண்ணவேண்டும். அது மாத்திரமல்ல... பற்களெல்லாம் விழாமல் இருக்க வேண்டும்; மந்திரத்தை நல்ல முறையிலே உச்சாரணம் பண்ண வேண்டும் அவர். அவருக்கு சந் சந்தான சௌபாக்கியம் இருக்க வேண்டும். இதெல்லாம் இருந்து, பூரண அத்யயனமும் பண்ணியிருக்க வேண்டும். மந்திரங்களையெல்லாம் நல்ல முறையிலே திருத்தமாய் உச்சரிக்க வேண்டும் அவர்.

அப்படி உச்சரித்து, தேவதைகளையெல்லாம் ஆஹ்வாஹனம் பண்ணி, சிறந்த முறையிலே, சிரமப்பட்டு உபவாஸ க்ருசத்துடன் சரீரத்தை வருந்தி பல காலம் பண்ண வேண்டும். ரொம்ப தாகமெடுத்தால் தடாலென்று தீர்த்தத்தை எடுத்துப் பருகக் கூடாது. 'பால்தானே... பரவாயில்லை' என்று பாலைச் சாப்பிடக் கூடாது! 'தயிர்தானே... கொஞ்சம் சாப்பிடுங்கள்...' என்பார்கள். ஆனால், அப்படியெல்லாம் சாப்பிடக்கூடாது. ரொம்ப தொண்டை வறண்டு போனால், கொஞ்சம் தீர்த்தத்தை எடுத்து தயிரில் சேர்த்து, ஒரு உத்தரிணி உள் நாக்கில் விழும்படியாகப் பண்ணலாம் - ஈரப் பசை ஏற்படுவதற்காக.

- இப்படியெல்லாம் சிரமப்பட்டு மந்திர லோபமில்லாமல், நியம லோபமில்லாமல், திரவிய லோபமில்லாமல், நல்ல முறையிலே பண்ண வேண்டும். இப்படியே பல காலம் சிரமப்பட்டுப் பண்ண வேண்டியிருக்கும்.

அசுவமேத யாகத்தை ஆரம்பிக்கிறபோதே, யக்ஞ நியமத்தைத்தான் சொல்லியிருக்கிறது.

நகத்தைக் கிள்ளக் கூடாது; எப்போதும் கிள்ளக் கூடாது. யக்ஞத்தில் உட்கார்ந்த பிற்பாடு நிச்சயமாகக் கூடாது. உடம்பைச் சொறியக் கூடாது. நல்ல பத்மாஸனத்திலே அமர்ந்து ஹோமம் பண்ண வேண்டும். இஷ்டப் பிரகாரம் காலைத் திருப்பி வைத்துக் கொண்டு, வேறு விதமாக உட்கார்ந்து கொண்டு, கொட்டாவி விட்டுக் கொண்டு, மந்திரம் சொல்பவர்களைத் துச்சமாகப் பேசக் கூடாது. யாரும் யாரையும் கடுவான வார்த்தை பேசக் கூடாது. ஏக தாரையாக

(ஓரே சீரான சிந்தனையுடன்) இருந்து அந்த ஹோமத்தை ரொம்ப ஜாக்கிரதையாகப் பண்ண வேண்டும்.

இப்படிச் செய்தால், யக்ஞத்தைக் காட்டிலும் சிறந்த கர்மா கிடையவே கிடையாது என்கிறது வேதம். எல்லா இந்த்ரியங்களும் ஹோமத்தைச் சுற்றியே ஈடுபடுகின்றன. பஞ்ச இந்த்ரியங்களும் சரி, விசேஷமான கர்ம இந்த்ரியங்களும் ஞான இந்த்ரியங்களும் சரி... எல்லாமே இந்தக் காரியத்திலே ஈடுபட்டு எம்பெருமானை தியானம் பண்ணுவதாலே, யக்ஞத்தை அவ்வளவு சிறந்த கர்மா என்று கொண்டாடுகிறது வேதம்.

அப்படிப்பட்ட மஹா யக்ஞத்தில் சிரமப்பட்டுப் பண்ண வேண்டிய யக்ஞங்களை பூர்வ காலத்தில் விச்வாமித்ர, ஜமதக்னி, வசிஷ்டாதி மஹரிஷிகள் எல்லாம் ரொம்ப சிரமப்பட்டுப் பண்ணினார்கள்.

ரிஷிகளெல்லாம் மந்திரத்தை நேரில் பார்த்தவர்கள் என்று பெயர். பாணினி சூத்திரத்தில் இதை எழுதியிருக்கிறார் : ரிஷியோ மந்த்ர த்ருஷ்டார :

நாமெல்லாம் மந்திரங்களைப் பார்க்கவில்லையே என்று கேட்டால், நாமெல்லாம் வெறும் வஸ்துக்களைத்தான் பார்க்கிறோம். ரிஷிகளோ வஸ்துக்களுக்குள்ளே இருக்கும்படியான அந்தர்யாமியான பகவானைப் பார்க்கக் கூடியவர்கள். ஒவ்வொரு மந்திரத்துக்கும் உள்ளே இருக்கும்படியான தேவதையைப் பார்க்கக் கூடியவர்கள். அப்படிப்பட்ட மஹரிஷிகள், சிரமப்பட்டு, கஷ்டப்பட்டு மஹா யக்ஞங்களைப் பண்ணினார்கள்.

சாமானியர்களாக இந்தக் கலியுகத்திலே வாசம் பண்ணிக் கொண்டிருக்கும்படியான நம்மைப் போன்றவர்களின் கதி என்ன..? அப்படிப்பட்ட மஹா யக்ஞங்களையெல்லாம் நம்மைப் போன்றவர்களால் பண்ண முடியுமா..? நமக்கு என்ன கதி? என்று வேதம் கேட்கிறது. கேட்டுவிட்டு பதிலும் சொல்கிறது.

'கவலைப்படாதே! யக்ஞம் பண்ணுகிறவர்கள் பண்ணட்டும். பண்ண முடியாவிட்டால், சாமானியர்கள் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. அந்த சந்திருப்தியைச் சுலபமான முறையிலே நாம் சம்பாதித்துக் கொள்ளலாம். பெரிய யக்ஞம் பண்ணினால் என்ன பயனோ, அந்தப் பயனை எம்பெருமான் திருநாமங்களை, அவன் கீர்த்தியைக் காட்டக் கூடிய உயர்ந்த தான திருநாமங்களை எவன் சொல்லக் கற்றுக் கொண்டிருக்கிறானோ, அப்படிப்பட்டவனுக்கு யக்ஞ பலன் கிடைத்துவிடுகிறது.


கலியுகத்தில் நாம் எவ்வளவு சுலபமாகப் பயனடைந்துவிடுகிறோம் பாருங்கள்! யக்ஞமே பண்ண வேண்டாம் என்கிறது வேதம்! 'பண்ணுகிறவர்கள் பண்ணட்டும், நீங்கள் எல்லாம் எம்பெருமான் திருநாமத்தை வாய்விட்டு உரத்துச் சொல்லுங்கள்... போதும்' என்கிறது.

ஆண்டாளும் இதைத்தான் சொன்னாள் : கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ, தேசமுடையாய் திறவேலோர் எம்பாவாய்...

மாமாயன் மாதவன் வைகுந்தன் என்னென்னு நாமம் பலவும் நவின்றோலோர் எம்பாவாய்!

ஒவ்வொரு பாசுரத்திலேயும், 'அவன் திருநாமத்தைச் சொல்லுங்கள்; சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்; சுலபமான முறையிலே திருப்பயனை அடையலாம் என்கிறாள்.

(வளரும்)



அந்த நாள் ஞாபகம் 3

திரையுலக நினைவுகள்

மாணவப் பருவத்திலேயே நான் பிஸினஸும் செய்தவன் என்ற உண்மை பலருக்குத் தெரியாது. சந்தானகிருஷ்ணன் சாரும், எங்கள் பள்ளியில் பி.டி. மாஸ்டராக இருந்த வெங்கடராம ஐயர் (இப்போது பிரபல சங்கீத வித்வான்களுக்கு தம்புரா சுருதி போடுகிறார்) என்பவரும் சேர்ந்து, தீபாவளி சமயத்தில் பட்டாசு விற்பனை செய்வார்கள். நானும் ஒரு பார்ட்னராகச் சேர்ந்தேன். பள்ளிக்கூடம் விட்டதும், நேரே மயிலாப்பூரில் ராஜாஜி சிவல் ஸ்டோர்ஸ் அருகில் எங்கள் பட்டாசு கடைக்குப் போய் உட்கார்ந்து கொண்டு பிஸினஸ் பார்ப்பேன். பங்குதாரராக நான் போட்ட முதல் வெறும் அறுபது ரூபாய்தான். தீபாவளி முடிந்ததும் கணக்குப் பார்த்து லாபத்தில் பங்கு என்று, சுமார் ஐந்நூறு ரூபாய் மதிப்புள்ள பட்டாசுகளை எனக்குக் கொடுத்தார்கள். இப்படி எனக்குப் பலவித அனுபவங்கள் ஏற்பட துணையாக இருந்த எங்கள் சந்தான கிருஷ்ணன் மாஸ்டர், இப்போது தமது மூன்று பையன்களுடன் ஓய்வாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

எது குற்றம்? யார் குற்றம்?

• சந்தான கிருஷ்ணன்



பள்ளிப் பருவத்தில் நான் ஒரு பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றதும் மறக்க முடியாத அனுபவம்.

பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் ஏழாவது படித்துக் கொண்டிருந்தேன். நானும் சுரேந்திரனும் அரட்டை குருப் லீடர்கள். எங்கள் வகுப்பாசிரியர் லட்சுமி நாராயணய்யர் அறைக்குள் நுழையும்வரை, சக மாணவர்களிடையே ஏதேனும் கதை விட்டுக் கொண்டிருப்பேன். எனக்குப் போட்டியாக தன் பங்குக்குக் கதை விடுவதில் சாரதி திறமைசாலி. நாங்கள் இருவரும் பாடம் படிப்பதில் போட்டி போடுவதில்லை. இதுபோல கதை விடுவதில் போட்டி போடுவோம். ஒருநாள் பள்ளியில் பேச்சுப் போட்டிக்கு பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருந்தார் ஆசிரியர்.

"ஏண்டா, அரட்டைன்னா ரெடியா ஆஜர் ஆயிடறியே... பேச்சுப் போட்டியில் கலந்துண்டு பேசு'' என்று என் பெயரையும், சாமுவேல் சத்தியநாதன் என்ற என் வகுப்புத் தோழனின் பெயரையும் ஆசிரியர் குறித்துக் கொண்டார்.

பேச்சுப் போட்டி தினத்தன்று அந்த ஹாலில் இருபதுக்கும் மேலான பேச்சாளர்கள். 'விஞ்ஞானத்தினால் நன்மையா? தீமையா?' என்பது தலைப்பு. இதுபற்றி சிந்தித்து சில குறிப்புகளை மனத்தில் திரட்டியிருந்தேன். நான் அந்தப் போட்டியில் பங்கேற்றுப் பேச, என் மூத்த சகோதரர் முருகன் பெரிதும் உதவியாக இருந்தார். முதலிலேயே நம்மை அழைத்தால் பாயிண்டுகளை விடாமல் பேசலாம் என்று காத்திருந்தேன். ஆனால் விதி என் பெயர் வடிவில் விளையாடியது. பேச்சாளர்களை ஆங்கில 'அகர' வரிசையில் பேச அழைத்தார்கள். முதலில் 'ஏ'யில் தொடங்கும் பெயர், அடுத்து 'பி'யில் என்று வரிசை போனது. நான் பேச நினைத்ததையெல்லாம் ஒருவர் பின் ஒருவராகப் பேசிக் கொண்டு போனார்கள்.



நான் 'திவாலாகி' விட்டது போன்ற உணர்வு.

அப்பச்சியின் மீது எனக்கு அப்போது கொஞ்சம் கோபம்கூட வந்தது. முருக பக்தர் என்பதால், எங்கள் குடும்பத்தில் எல்லோருக்கும் முருகன் பெயராக வைத்தது சரி. எனக்கு வைத்த பெயரை 'ஏ' ஆங்கில எழுத்தில் ஆரம்பிக்கும் முருகர் பெயராக 'ஆறுமுகம்' என்று வைத்திருக்கக் கூடாதா? முதலிலேயே பேசக் கூப்பிட்டிருப்பார்களே! சரவணன் என்று 'எஸ்'ஸில் ஆரம்பிக்கிறது. என் முறை வருவதற்குள் எனக்கு பாயிண்ட்டே இருக்காது என்று தோன்றியது.

நானும், சாமுவேல் சத்தியநாதனும் ஓர் அவசரத் தீர்மானம் நிறைவேற்றினோம். தலைப்பை ஒட்டியோ வெட்டியோ பேசாமல், தலைப்பையே எதிர்த்துப் பேசுவது என்று தீர்மானித்தோம். அப்போதெல்லாம் பராசக்தியில் கலைஞர் எழுதி, அதேபோல 'அந்த நாள்' படத்தில் ஜாவர் சீதாராமன் எழுதி 'நடிகர் திலகம்' சிவாஜி பேசிய வசனங்களை பேசிப் பார்ப்பது இளைஞர்களிடம் கிரேஸாக இருந்தது.

அந்த கிரேஸ் எங்களுக்கும் கை




ஏவி.எம்.சரவணன்

கொடுத்தது.

என் பெயர் அழைக்கப்பட்டதும் மேடையேறினேன். கால்கள் நடுங்கின. வியர்வை கொட்டியது. வெலவெலத்துப் போனேன். சமாளித்துக் கொண்டு கலைஞரின் வசன ஸ்டைலைக் கைப்பிடித்தேன்.

''மிருகங்களைச் சுடுவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கியைக் கொண்டு ஒரு மனிதன் மற்றவனைத் தாக்கினால் அது துப்பாக்கியின் குற்றமா? அல்லது துப்பாக்கியைக் கண்டு பிடித்தவனின் குற்றமா? துப்பாக்கியைப் பயன்படுத்தியவன் குற்றமா? எது குற்றம்? யார் மீது குற்றம்? எப்படிக் குற்றம்? பயணத்துக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட விமானத்தைப் பயன்படுத்தி, ஒரு நாட்டின்மீது இன்னொரு நாடு குண்டு போட்டால் அது விமானத்தின் குற்றமா? அதைக் கண்டுபிடித்தவனின் குற்றமா? அதைப் பயன்படுத்தியவனின் குற்றமா? எது குற்றம்? யார் குற்றம்? எப்படிக் குற்றம்?



* அப்பச்சி

அறியாமையைப் போக்குவதற்குத் தேவையானது அறிவு வளர்ச்சி. அதற்குத் தேவையானது விஞ்ஞானம். விஞ்ஞானத்தினால் நன்மையா, தீமையா என்று தலைப்புத் தந்திருக்கிறார்கள். எத்தகைய தவறான தலைப்பு இது. அறிவு வளர்ச்சியே குற்றம் என்றால், பள்ளிக்கு வருவதே குற்றம்தான்'' என்று வெளுத்து வாங்கினேன்.

அடுத்தடுத்து அப்ளாஸ் கிடைத்துக் கொண்டேயிருந்தது. கிட்டத்தட்ட எல்லா பாயிண்டுகளையும் வைத்து வெளுத்து வாங்கினேன். அப்படியும் நான் விட்டு விட்ட சில பாயிண்டுகளை சாமுவேல் சத்தியநாதன் பேசினான்.

நான் பேசியது சினிமா டயலாக் ஸ்டைல் என்ற உண்மை, சினிமா பார்க்கும் பழக்கமில்லாத எங்கள் ஆசிரியர்களுக்குத் தெரியாது. (அந்தக் கால ஆசிரியர்களுக்கு)

போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. 'முதல் பரிசு : சரவணன்' என்றதும் எனக்கு ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது. முதன்முதலான என் மேடைப் பேச்சுக்கு முதல் பரிசு.

அது எனக்குக் கிடைத்த பரிசல்ல என்றும், கலைஞர், சிவாஜி, ஜாவர் போன்றவர்களின் திறமைக்குக் கிடைத்த பரிசு என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். மானசீகமாக அவர்களுக்கு நன்றி சொன்னேன்.

சரவணன் என்று எனக்குப் பெயர் வைத்ததற்காக அப்பச்சிக்கும் கூடவே நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

தொடர்ந்து பல பரிசுகளை நான் பேச்சுப் போட்டிகளில் பெற்றேன். பள்ளிக் கூடத்தில் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்வதும், பரிசுகள் பெறுவதும் எனக்கு வாடிக்கையாகிப் போனது.

இப்படி நான் பள்ளி நாட்களில் கலை நிகழ்ச்சிகளின்பால் கொண்ட அதீத ஆர்வம், படிப்பு விஷயத்தில் பெரிய இடியாக வந்து இறங்கியது.

(கூறுவேன்)



• அறுவடைக்கு...



• உகப்பேற்ற...



• அதிக வாய்ப்பு

கூட்டணிக்குள் உரசல்?



• மறைமுக அழைப்பு

தமிழக காங்கிரசுக்கான தலைமை மாற்ற விவகாரம் தற்போது உச்சகட்டத்தை எட்டியுள்ளதாம். இந்த முறை தலைமைப் பதவிக்கு சுதர்சன நாச்சியப்பனுக்குத்தான் அதிக வாய்ப்பு இருக்கிறதாம். சிவகங்கையை சிதம்பரத்துக்கு விட்டுக் கொடுத்து மே(லி)டத்தின் நன்மதிப்பை சம்பாதித்து வைத்திருந்தது தான், இப்போது அவருக்குக் கை கொடுத்துள்ளதாக அவரது ஆதரவாளர்கள் பெருமை பொங்கப் பேசுகிறார்கள். ஆனால் எதிர்த்தரப்போ 'மனித உரிமை பிரிவு' சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தகவல் திரட்டும் பணியில் மும்முரம் காட்டி வருகிறது.

உமாபாரதி பற்றிய பரபரப்பான செய்திகளை மீடியாக்கள் மூலமாக தொடர்ந்து பரவச் செய்து, அதன் பலனை எதிர்வரும் பீகார், ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தல்களில் அறுவடை செய்யக் காத்திருக்கிறதாம் சங்பரிவார் தரப்பு. அதன் எதிரொலிதான் 'உமாபாரதி திடீர் நீக்க' நாடகமென்று பலமாக பேச்சு அடிபடுகிறதாம். எதுவாக இருந்தாலும் அதனை எதிர்கொள்ளத் திட்டங்கள் தீட்டுமாறு, மத்திய அமைச்சர் சுபோத் காந்த் சகாயை முடுக்கி விட்டுள்ளதாம் காங்கிரஸ் தலைமை.

திடீரென தி.மு.க. தரப்பால் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸுக்கு விடுக்கப்பட்டுள்ள மறைமுக அழைப்பு, காங்கிரஸ் தலைமையை கடுமையாக யோசிக்க வைத்துள்ளதாம். இந்த அழைப்பை, பெட்ரோல் - டீசல் விலை உயர்வை எதிர்த்து தி.மு.க. குரலெழுப்பியது, தமிழகத்தில் தி.மு.க. தலைவர்-பிரதமர் சந்திப்பு நடைபெறாமல் போனது ஆகிய சம்பவங்களுடன் முடிச்சுப் போட்டுப் பார்த்து ரொம்பவும் குழம்பிப் போயிருக்கிறாராம் அன்னை.

தி.மு.க. தனது தொண்டர்களை உகப்பேற்றும் விதமாக, கலைஞரின் கேள்வி - பதில், செம்மொழி, சேது சமுத்திரத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து, சிறு புத்தகங்களைத் தயாரித்து குறைந்த விலையில் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளதாம். இந்தப் பணியில் தி.மு.க. இளைஞரணி மிகவும் மும்முரமாக உள்ளதாம். இத்திட்டம் தங்களை உரசிப் பார்க்கும் முயற்சியோ என, கூட்டணிக் கட்சிகள் சந்தேகப் பார்வை வீசுகின்றனவாம்.

\- கலை

மா நகரப் பேருந்தில் ஏறினேன். நல்ல கூட்டம். இன்றைக்கு வசூல் எப்படியோ என்று எண்ணிக்கொண்டே வேட்டையில் இறங்கினேன். நல்ல அறுவடை. சிக்னலில் குதித்து, வழக்கமாக நான் பர்ஸ்களை ஆராயும் பிள்ளையார் கோவிலின் பின்புறம் சென்றேன். நல்ல வேளை யாருமில்லை. இடுப்பில் செருகியிருந்த பர்ஸ்களை எடுத்து, விரித்த கர்ச்சீப்பில் போட்டேன். மொத்தம் ஐந்து பர்சுகள். ஒவ்வொன்றாய் ஆராய்ந்தேன். முதலிரண்டில் ஒன்றுமில்லை. எரிச்சல் மண்டியது. அடுத்ததில் ஐம்பது காசு மட்டும்.

"ச்சே என்ன இது?" நான்காவதைப் பிரிக்க... வாரே வாவ்! இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுகள்! "தேங்க்ஸ் கணபதியாரே."

அட! இதென்ன கூடவே ஒரு கடிதம்! எடுத்துப் பிரித்தேன்.

'அன்புள்ள அம்மா...

உன் கண் ஆபரேஷனுக்காக இரண்டாயிரம் ரூபாய் சிறுகச் சிறுகச் சேர்த்து விட்டேன். கமிஷன் பணம் நூறு ரூபாய் சேர்த்ததும் உடனே மணியார்டர் செய்கிறேன். அதுவரை பொறுத்திரு!

அன்புடன்
மாடசாமி'

கடிதத்தைப் படித்ததும் எனக்கு என்னமோ போல் ஆகிவிட்டது. என் அம்மா நினைவில் வந்தாள். நான் சென்னைக்கு வேலை தேடி வந்த புதிதில் இப்படித்தான், ஊரிலுள்ள எனது அம்மாவின் வைத்தியச் செலவுக்குப் பணம் அனுப்ப மிகவும் கஷ்டப்பட்டேன். கடைசிவரை அனுப்ப முடியாமல் போக, அம்மா இறந்து விட்டாள். கடைசியாக அவள் முகத்தைப் பார்க்க ஊருக்குப் போகக் கூட கையில் பணமில்லை. அப்போதுதான் தீர்மானித்தேன், திருடனாவதென்று. இன்று நான் பிரபல பிக்பாக்கெட் கேடி ராமசாமி.

சரி, நாமே அனுப்பினால் என்ன?

யோசனையைச் செயல்படுத்த கையில் பணத்தை எடுத்தேன் சரி, கமிஷன் நூறு ரூபாய்? அடுத்த பர்ஸைப் பிரிக்க தெய்வாதீனமாக அதில் நூறு ரூபாய் இருந்தது. எடுத்துக் கொண்டு தபால் நிலையம் நோக்கி விரைந்தேன்.



பர்ஸில் இருந்த கடிதம்!

ஆ.முத்துராமலிங்கம்

பணத்தை மணியார்டர் செய்து விட்டு வெளியே வரவும், போலீஸ்காரர் ஒருவர் என்னை கையும் களவுமாகப் பிடிக்கவும் சரியாக இருந்தது.

''நடடா ஸ்டேஷனுக்கு'' என்றார். நெடு நாட்களுக்குப் பிறகு சந்தோஷமாகப் புறப்பட்டேன். ○





ஆல் - இன் - ஆல் களஞ்சியம்

உங்களுக்கு எதற்காவது உடனடி விளக்கம் தேவைப்படுகிறதா? யாரைப் பற்றியாவது அவசரத் தகவல் தெரியணுமா? யோசிக்காம free-definition.com-க்குப் போங்க. கடச்கட கிடைக்குது எல்லாம். வீரப்பன் முதல் கெர்ரி வரை எல்லாரையும் தெரிஞ்சு வைச்சிருக்கு இந்தத் தளம். தேதி வாரியா செய்திகளைத் தேடவும் வசதி பண்ணியிருக்காங்க! ஏதாவது ஒரு வருடத்தை டைப் செய்தால் போதும். அந்த வருடத்தில் நடந்த நிகழ்வுகள் எல்லாம், தேதி வாரியாக 'க்யூ'கட்டி நிற்கின்றன. மொத்தமாச் சொல்லணும்னா இது ஒரு ஆல்-இன்-ஆல் களஞ்சியம்!

ஒரு புகைப்படமோ, ஓர் ஓவியமோ கண்டிப்பாக, ஏதாவது 'ஆட்டோகிராஃப்' நினைவுகளைச் சுமந்து கொண்டுதானிருக்கும். இப்படி பலரின் நினைவுகளை ஓவியமாகச் சுமந்து கொண்டிருக்கிறது www.artnbeyond.com. சபரினா சோ என்ற பெண் ஓவியரின் வலைத்தளம். பலரின் குழந்தைகளை, செல்லப் பிராணிகளை, வாகனங்களை, வீடுகளை, தன் தூரிகையால் பதிவு செய்திருக்கிறார் உயிர்ப்புடன். ஆன்லைனில் வாங்கலாம். ஓவியம் வரைய ஆர்டரும் செய்யலாம்.

(போட்டோ இல்லாம, அங்க அடையாளம் சொன்னா வரைஞ்சு கொடுப்பீங்களா?)


உலகத் தமிழர்கள் 'முதுசொம் சாளரம்' என்ற பெயரில் ஒரு முக்கியமான பணியைச் செய்து வருகின்றனர். அது அழியும் நிலையிலுள்ள ஓலைச்சுவடிகளை எல்லாம் மின் பதிவுகளாக (இ-சுவடி) மாற்றி வருவதுதான். அது, மட்டுமின்றி, ஒலி, ஒளி மற்றும் வரி வடிவிலுள்ள நாட்டிய கர்நாடக இசை வடிவங்களையும் மின்பதிவுகளாக்கி வருகின்றனர். இவர்களின் வலைத்தளம் tamil-heritage.org. சிதிலமடைந்துள்ள பழைய நூல்களை, ஸ்கேன் செய்து, பதிவுகளாக்கி பாதுகாத்து வருகின்றனர். உள்ளே புகுந்தால் விழிகளை விரிய வைக்கும் விஷயங்கள் கொட்டிக் கிடைக்கின்றன. தேவையான முயற்சி!



- ப்ரௌசர்

சர்ச்சைகள்...

கடந்த 1954ல் பிரதமர் நேருவின் முயற்சியினால் தொடங்கப்பட்ட சாகித்ய அகாடமி, பொன் விழாவை அண்மையில் கொண்டாடியுள்ளது. அகாடமியின் செயல்பாடுகள், நிலவி வரும் சர்ச்சைகள் குறித்து மூத்த எழுத்தாளர்களான இந்திரா பார்த்த சாரதி மற்றும் ஜெயகாந்தனிடம் கருத்து கேட்டோம்.



ஜெயகாந்தன் :

"இந்தியாவிலுள்ள வளர்ந்த மொழிகளையும், வளர்ந்து வரும் மொழிகளையும் இலக்கிய ரீதியாக அங்கீகரித்து, இந்திய மொழிகளுக்கிடையே படைப்பாற்றல்களைப் பரிமாறிக் கொள்வது, அதற்காக உதவுவது சாகித்ய அகாடமியின் தலையாய இலட்சியம். இந்திய மொழி களில் வெளியான படைப்புகளை இந்நிறுவனம் கௌரவிக்கிறது. அது மட்டுமின்றி, அனைத்து மொழி எழுத்தாளர்களையும் அழைத்துக் கருத்தரங்குகள் மூலமாக பரஸ்பரத் தொடர்புகொள்வதற்கு களம் அமைத்துத் தருகிற சிறந்த பணியையும் இந்த நிறுவனம் ஆற்றி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாக இதன் பொதுக் குழு / ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்து வந்த நான், 1995ல் சாகித்ய அகாடமியின் ஃபெலோ ஆக முன் மொழியப்பட்டேன். இந்த ஃபெலோஷிப் என்பது, இந்திய இலக்கியங்களில் தலைசிறந்த மூத்த எழுத் தாளர்களுக்குத் தரப்படுவது. எனக்கு முன்னால் ராஜ கோபாலாச்சாரியும், தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும் இந்தப் பதவியை வகித்தவர்களாவர்.

'சாகித்ய அகாடமி பிரபலமானவர்களுக்குத்தான் விருது வழங்கி வருகிறது' என்ற விமர்சனம் அந்தக் காலத்திலேயே இருந்தது. அந்த விமர்சனத்தின் விளை வாகவோ அல்லது அதற்கு பதிலாகவோ இந்நிறு வனம் இளம் எழுத்தாளர்கள் வரிசையில் அமரர் நா.பார்த்தசாரதிக்கு இந்தப் பரிசையும் விருதையும் 1971ல் அளித்து கௌரவித்தது. அதற்கு அடுத்த ஆண் டிற்கான விருது எனக்கு வழங்கப்பட்டது.

எனக்குப் பின்னால் மூத்த எழுத்தாளர்களுக்கும், முற்போக்கு எழுத்தாளர்களுக்கும், இந்த விருது தொடர்ந்து வழங்கப்பட்டும் வருகிறது."

இந்திரா பார்த்தசாரதி :

"விருது வழங்குவது என்பது அகாடமியின் முக்கியப் பணிகளில் ஒன்றுதான். ஆனால் இப் போதைய நிலைமையை வைத்துப் பார்த்தால், விருது வழங்குவது மட்டும்தான் வேலை என்பதுபோல ஆகிவிட்டது. மேலும் குறும் படங்கள் எடுப்பதில் அகாடமியில் பல குளறுபடிகள் நடந்து வருகின்றன. 'இவர்கள் முக்கிய எழுத்தாளர்கள்... இவர்களது வாழ்வை சுருக்கமாகப் பதிவு செய்து தாருங்கள்'

என்று அகாடமி ஓர் இயக்குநரை நாடிச் செல்ல வேண்டும். இதுதானே சரியான முறை! ஆனால் இப்போது நடப்பது என்ன தெரியுமா? ஓர் இயக்குநரே இந்நிறுவனத்திற்கு வலியச் சென்று 'இவரைப் பற்றி ஒரு குறும்படம் எடுக்கலாமா?' என்று கேட்டால், அவர்கள் பரிசீலித்து, குறிப்பிட்ட ஒரு தொகையை ஒதுக்குவார்கள். அதை வைத்து அந்த இயக்குநர் படங்கள் தயாரிக்க வேண்டும். இப்படியா ஒரு அகாடமி இயங்கும்?

போகட்டும். எப்படியோ படங்கள் எடுத்து விடுகிறார்கள். இதிலாவது ஓர் ஒழுங்கு முறை இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. ஓர் எழுத்தாளருக்கு ஒரு மணி நேரம் தருவார்கள். மற்றொருவருக்கு அரை மணி நேரம் அல்லது பதினைந்து நிமிடம். இதிலும் ஏற்றத்தாழ்வுகள். தனிப்பட்ட எழுத்தாளர்களின் செல்வாக்குதான் இங்கு முக்கியம். இதற்குத்தான் மதிப்பு அளிக்கப்படுகிறது.

அதேபோல்தான் மொழிபெயர்ப்பு முயற்சிகளில் காணப்படும் பிரச்னைகளும். எந்தெந்தப் படைப்புகளை மொழிபெயர்க்க வேண்டும், எவையெவை அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதைப் பற்றி அகாடமி எந்த வழிமுறையையும் வகுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. எந்த எழுத்தாளருக்கு அதிக செல்வாக்கு இருக்கிறதோ அவர்களது படைப்புகளே அதிகமாக மொழிபெயர்க்கப்படுகின்றன. இதனால் 'செல்வாக்கில்லாத' பல படைப்புகள் கண்டு கொள்ளப்படாமலேயே இருந்து வருகின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளிவந்த படைப்புகள்தான் கமிட்டியின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஓர் எழுத்தாளர் ஐந்து ஆண்டுகளில் எதுவும் எழுதவில்லை என்றால் அவர் நிராகரிக்கப்படுவார்! அவர் எவ்வளவு சிறந்த படைப்புகளை உருவாக்கியிருந்தாலும் இந்த கால வரம்பு தான் முக்கியம் என்ற நிலை இருந்து வருகிறது.

தேர்வுக் கமிட்டியின் தேர்வு முறையும் விசித்திரமானதுதான். தங்களுக்கு வேண்டியவர்களின் புத்தகங்கள் எல்லாம் இதில் எப்படியோ சேர்ந்துவிடும். சிறந்த படைப்புகள் பல, பரிசீலனை நிலைக்குக் கூட போகாமல் இருந்துவிட வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.


1988-90ல் சாகித்ய அகாடமியால் அக்சர் கமிட்டி தோற்றுவிக்கப்பட்டது. அகாடமியின் செயல்பாடுகளை பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட இக்குழுவில் நானும் அங்கம் வகித்தேன். அப்பொழுது பல்வேறு பகுதிகளுக்குச் சென்று, பலரைச் சந்தித்து ஒரு நீண்ட அறிக்கையைச் சமர்ப்பித்தோம். அதில் பல விஷயங்களைப் பரிந்துரை செய்தேன். சிலவற்றை ஏற்றுக் கொண்டார்கள். சிலவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. அவற்றுள் ஒன்று முக்கியமானது. ஓர் இலக்கியப் படைப்புக்கு விருது வழங்கப்படுவதைப்போல ஓர் எழுத்தாளருக்கும் அவரது நீண்டகால சாதனையைக் கருதி தனியாக ஒரு விருது வழங்க வேண்டும் என்பதே அது. இவ்வகையில் இளம் எழுத்தாளர்களுக்கும் மூத்த



சாதனைகள்!

எழுத்தாளர்களுக்கும் அங்கீகாரம் கிடைக்கும். ஆர்.சூடாமணி போன்ற எழுத்தாளர்களுக்கு இன்னமும் இந்த விருது வழங்கப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது அல்லவா?"

- மருதன்



• கடைவீதியில்...

பூஜை பண்ணும் முன் குருமார்கள் பால், மது போன்றவைகளால் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்வார்களாம்!

காம் ஓம்போவிலிருந்து கடைத்தெரு வழியாகக் கப்பலை நோக்கிச் சென்றபோது, "இன்றிரவு கப்பலின் மேல்தளத்தில் எல்லோருக்கும் விருந்து தரப் போகிறார்கள். அதற்கு அனைவரும் 'கலபையா' (Galabiyya) உடையைத்தான் அணிந்து வரவேண்டும் என்பதால், கடையில் ஒன்றை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று பாப் கூறிவிட, ஷாப்பிங்கில் ஈடுபட்டோம்.

'கலபையா' என்பது நூபியர்கள் அணியும் ஒருவகை அங்கி. இது கிட்டத்தட்ட கஃப்தான் மாதிரிதான்... தலையிலிருந்து கால் வரை தொங்குகிறது. ஸ்ஃபிங்ஸ் முகமும், ஹோரஸின் கண்களும் பெரிது பெரிதாய் வரையப்பட்ட 'மண்வாசனைமிக்க' கலபையாவைத் தலா நாற்பது பவுண்டு கொடுத்து பிரியாவும் நானும் வாங்கிக்கொண்டு கப்பலுக்குத் திரும்பி, விருந்துக்குத் தயாரானோம். தொளதொள வென்று அங்கியும், அசட்டுச் சிரிப்புமாய் நாங்கள் வித்தியாசமான தோற்றத்தில் மேல் தளத்திற்குச் சென்றபோது, இரவு மணி ஒன்பது. உள்ளூர் பாட்டு, வாத்தியங்கள், நடனம் என்று அமர்க்களப்பட்டதில் ஒரு மணி நேரம் போல உட்கார்ந்துவிட்டு, அந்தச் சத்தம் களைத்திருந்த எங்களுக்குத் தலைவலியை உண்டுபண்ண, சாப்பிட்டு, விடைபெற்றுக் கொண்டு, அறைக்கு வந்து படுத்துவிட்டோம்! ஒரு மணி நேரக் கூத்துக்காக வாங்கின 'கலபையா'வை இனி வேறு

அழகான


பிரமிட் தேசம் – 11

சிவசங்கரி

எங்கும் அணிய சாத்தியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 'ஸூவ்னீர்' என்று வைத்துக்கொள்ள வேண்டியது தான்!

மறுநாள் எட்ஃபூ (Edfu), எஸ்னா (Esna) என்ற இடங்களிலுள்ள கோவில்களைக் கண்டு ரசித்தோம். அதற்கும் மறுநாள், பாலை வனத்தின் நடுவில் அரசர்கள், ராணிகளின் பள்ளத்தாக்குகளிலுள்ள (Valley of Kings & Valley of Queens) சமாதிகளையும், ஹட்ஷெப்சுட் (Hatshepsut) என்ற ராணியின் சமாதியையும், அலபாஸ்டர் (Alabaster) என்ற சலவைக்கல்லால் மண்பாண்டங் கள் செய்யும் தொழிற்சாலையையும், மண்டையை ஓட்டை போடும் வெயிலில் பிசாசுகள் மாதிரி அலைந்து பார்த்ததில், அந்த இரண்டு நாட்களும் பொழுது விடிந்து, பொழுது போனது எப்படி என்று புரியாத மயக்கத்தில் கழிந்ததை உங்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

அஸ்வானுக்கும் லுக்சருக்கும் சரியான இடை வெளியில் அமைந்திருக்கும் எட்ஃபூ, அங்குள்ள ராஜாளி முகம் கொண்ட ஹோரஸின் கோவிலால் பிரபலமானது. கூரைவரை மணலில் புதைந்துவிட்ட இக்கோவிலை வெளியுலகின் பார்வைக்கு 1860-ல் கொண்டு வந்தவர் அகஸ்தே மாரியட் (Agaste Mariette) என்ற சரித்திர ஆய்வாளர். முகப்பில் இரண்டு ராட்சதக் கருங்கல் ராஜாளிப் பறவை களைக் கொண்ட இக்கோவிலில், பிரதான கடவு ளாக ஹோரஸ் வழிபடப்பட்டிருக்கிறது. எல்லாக் கோவில்களிலும் இருப்பது போன்று இங்கும் ஹைப் போஸ்டைல் கூடம் (Hypostyle Hall), விழாக்கூடம் (Festival Hall), நிவேதனக்கூடம் (Hall of offerings) என்றிருப்பவைகளைத் தாண்டிக் கொண்டு போனால், சன்னிதானம் வருகிறது. ஆதிநாட்களில் தங்கம் இழைக்கப்பட்டு வழிபாட்டிலிருந்த சிலையை இப்போது காணோம்; அதை வைத்திருந்த கருங்கல் பீடம் மட்டும் காட்சிப் பொருளாக இருக் கிறது. பல கூடங்களைக் கொண்ட இக்கோவிலைப் பல மன்னர்கள் இறுநூறு ஆண்டுகாலம் ஒருவர் ஒரு பகுதியைக் கட்ட, மற்றவர் இன்னொன்றைக் கட்டி பிரும்மாண்டமாய் உருவாக்கியுள்ளனர். எல்லாக் கோவில்களிலும் காணப்படும் சுத்தம் செய்து கொள்ளும் அறையும் (purification room), பூஜை விவரங்கள் கொண்ட பபைரஸ் தாள்களை வைத்த சாமான் அறையும் ஓரளவுக்கு முழுமையாக இருப் பதில், இக்கோவிலை ஆலயங் களின் நூலகம் (Library of Temples) என்றும் குறிப்பிடு கிறார்கள். குருமார்கள் பூஜை பண்ணும் முன் பால், மது போன்றவைகளால் சுத்தம் செய்து கொள்ளும் அறையில் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வார்களாம்! இன்ன தினத்திற்கு உகந்த பூஜை இது - என்ற விவரங்கள் பபைரஸ் தாள்களில் உள்ளனவாம்! ஆதி நாட்களில் கடைப்பிடிக்கப் பட்ட ஒரு சடங்கு இன்னும் இங்கு வருஷத்திற்கொருமுறை திருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. நம்மூரில் ஸ்வாமியை முக்கிய நாட்களில் பல்லக்கில் உலாவரச் செய்து அம்மனிடம் எடுத்துச் செல்வது போன்று,



• எஸ்னா கோவில் கற்சித்திரங்கள்...

சந்திப்பு!

இந்தக் கோவிலின் பிரதான தெய்வமான ஹோரஸைப் படகில் ஊர்வலமாய் அழைத்துச் சென்று, அவருடைய மனைவியான ஹத்தோரைச் சந்திக்கச் செய்வதை 'அழகான சந்திப்பு' (Feast of Beautiful Meeting) என்று கொண்டாடுகிறார்கள்.

அன்று பிற்பகல் மதிய உணவைக் கப்பலில் உட்கொண்ட நாழிகையில், நதியில் பயணித்து, எஸ்னா என்ற இடத்தில் இறங்கி, எகிப்தியக் கோவில்களிலேயே பெரியதாகக் கருதப்படும் 'கர்னக்' (Karnak) கோவிலைக் காணச் சென்றோம். பண்டைய ஃபெரோக்களால் கட்டப்பட்ட கோவில்களில் இது பெரியது மட்டுமல்ல, 'அமுன்' என்ற புதிய வம்ச அரசினரால் வழிபடப்பட்ட கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டதும்கூட. மூன்றாவது ராம்ஸெஸ் காலத்தில் 65 கிராமங்கள், 433 தோட்டங்கள், 4 1/2 லட்சம் மாடுகள், 2400 சதுர கி.மீ. விளைச்சல் நிலம், 46 கட்டடங்கள், 83 கப்பல்கள், 81,000 அடிமைகள் இக் கோவிலுக்குச் சொந்தமாய் இருந்ததில், பணக்காரக் கோவிலாகவும் திகழ்ந்திருக்கிறது. ஒரு காலத்தில் நூறு ஏக்கராவில் பரந்துகிடந்ததில், தற்சமயம் அமுன் சன்னதி உள்ள பகுதி மட்டும் சிதிலமடையாமல் காணக் கிடைக்கிறது. இங்கு நுழைந்ததும் நம்மை வரவேற்பது, வரிசையாய் அமர்ந்திருக்கும் ஸ்ஃபிங்ஸ் உருவங்கள்தாம். பத்தடி, இருபதடி விட்டம் கொண்ட உயரமான கல்தூண்களும், நீண்ட - பலநூறு டன் எடை கொண்ட - கல் உத்திரங்களும், அவற்றில் தென்படும் வேலைப்பாடுகளும், நீளமான பிராகாரம் போன்ற பிரும்மாண்டமான கூடங்களும், சுவரில் தென்படும் ஓவிய, சிற்பங்களும், அவை சொல்லும் வரலாறும் பிரமிக்க வைக்கின்றன! சன்னிதானத்தில் உள்ள பெரிய தூணில் தாமரை, பபைரஸ் பூக்களையும், அமுன் தெய்வம், மூன்றாவது துட்மோஸிஸ் (Thuthmosis) அரசரை அணைத்தவாறு நிற்கும் வரைபடங்களையும் காண முடிகிறது. இடது பக்கத்தில் அமுன், அவரது மனைவி அமுனெட் ஆகியோரின் பெரிய அளவுச் சிலைகள் உள்ளன. ஏழெட்டுக் கட்டுகளைக் கொண்டதாக இருந்தபோதும், நுழைவாயிலிலிருந்தே சன்னதியிலுள்ள



• இருபது லட்சம்...

தெய்வத்தைக் காணும்படியான கட்டட அமைப்பு இருக்கிறது.

அந்த நாட்களில் அரச குடும்பத்தினருக்கும், பூசாரிகளுக்கும் மட்டுமே சன்னிதானத்திற்குள்ளும், அதை ஒட்டிய அறைகளுக்கும் செல்ல அனுமதி உண்டு என்பதால், பூஜை செய்ய தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டு உள்ளே நுழையும் குரு, காலில் ஒரு நீண்ட இரும்புச் சங்கிலியைக் கட்டிக் கொண்டு போவது தான் வழக்கமாம்! பூஜை செய்யும் போதோ, உள்ளறைகளில் இருக்கும் போதோ, அவர் மயக்கமடைந்தோ அல்லது இறந்தோ கீழே விழுந்துவிட்டால், உள்ளே யாரும் நுழையாமல் சங்கிலியைக் கொண்டு அவரை வெளியே இழுத்து விடத்தான் இந்த ஏற்பாடாம்! சாதாரணக் குடிமக்கள் தெய்வ தரிசனம் செய்ய வேண்டுமென்றால், கோவிலுக்குப் பின்பக்கமாய் சென்று தூரத்தில் நின்று ஜன்னல் வழியேதான் தரிசனம் பண்ணுவதற்கு அனுமதிக்கப்பட்டார்களாம்!

அபு ஸிம்பல் கோவிலைத் தவிர, நாங்கள் பார்த்த அனைத்துக் கோவில்களிலும் பல சிற்பங்கள் உளியால் கொத்தப்பட்டு சிதிலமடைந்திருந்ததற்கு, "பேகன் வழிபாட்டை ஏற்க மறுத்த கிறிஸ்தவர்கள், தாங்கள் ஆளுமையின் கீழ் எகிப்து இருந்தபோது, பேகன் கடவுள், அரசர்களை மறுக்கும் விதமாய் இப்படிப் பாழ்பண்ணிவிட்டார்கள்" என்று பாப் விளக்கம் கொடுத்தார்.

எந்தக் கோவிலில் பார்த்தாலும் அரசர்களின் உருவச்சிலைகள்,


மன்மதன்' படத்துக்கு மேலும் ஜிகினா சேர்க்க மல்லிகா ஷெராவத்தை அழைத்திருந்தாராம் சிம்பு. ஆனால் இருபது லட்சத்துக்கு ஒரு பைசா குறைக்க முடியாது என்று மல்லி கூறிவிட்டதால், ரசிகர்களால் அவரை மன்மதனில் தரிசிக்க முடியாமல் போய்விட்டது.

விஜய் டீ.வி.யில் ஆள் மாற்றி ஆள் தமிழ் சினிமாவை கிண்டலடிப்பதற்கு, கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. நடிகர் சங்கம் மூலமாக திரையுலகினரின் குமுறல்கள் விஜய் டீ.வி. நிர்வாகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, பாஸ்கியின் நிகழ்ச்சியிலுள்ள காரம், கிண்டல் அளவுகளை சற்றே குறைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாம்.

மணிரத்னம் அடுத்த தமிழ்ப் படத்தை அநேகமாக அடுத்த ஏப்ரல்-மேயில் துவங்கலாம் என்கிறது மெட்ராஸ் டாக்கீஸ் வட்டாரம்.

- கண்

சித்திரங்கள் ஒரே மாதிரியாகவே கண்களுக்குத் தெரிந்ததில், நைல் நதி உலாவின் துவக்கத்திலேயே எங்கள் சந்தேகத்தை பாப்-இடம் வெளிப்படுத்தவே செய்தோம். "ஆஜானுபாகுவான மனிதர், நீண்ட நாசி, ஒரே மாதிரியான உடையலங்காரம், தலைக்கிரீடம் என்று தென்படும் சிலைகளை, 'இது ராம்ஸெஸ், அது அவர்' என்று எப்படி இனம் பிரிக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு, "அந்தந்தச் சிலை, சித்திரங்களில் காணப்படும் அரச இலைச்சினையை (கார்டுஷ் - Cartouch) வைத்துதான்" என்று பதில் கூறிய பாப், அடுத்து வந்த நாட்களில் அந்தந்த கார்டுஷ்களை எங்களுக்கு விளக்கியதில், ஹீரோகிளைஃபிக் மொழியில், வெவ்வேறு படங்களைக் கொண்ட இலச்சினைகளை ஓரளவுக்கு எங்களாலும் இனம்காண முடிந்தது. இங்கு ராணி நெஃபர்டாரியின் கார்டுஷை உங்கள் பார்வைக்காகத் தந்திருக்கிறேன்.



• கார்டுஷ்

பண்டைய அரச குடும்பத்தினர் மட்டுமின்றி, தெய்வங்கள்கூடப் பொதுவாக வெறுங்கையோடு நிற்காமல், கைகளில் சில முக்கியப் பொருட்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றில் மிக முக்கியமானவையாகக் கருதப்படும் நான்கு சின்னங்களின் படங்களை வரைந்து, அவற்றின் விளக்கங்களையும் தருகிறேன்.

வஸிர் -WSR - அசப்பில் ஒரு மானின் முகம் வைத்த கைத்தடி போலத் தோற்றமளிக்கும் இது வளமையைக் குறிக்கும். (prosperity)



• வஸிர்




•அங்க்

அங்க் - Ankh - நைல்நதி பூமிக்கு மேலும் கீழும் செல்வதின் அடிப்படையில் அமைந்த இச்சின்னம், ஆயுட்காலம் / வாழ்க்கையைக் (life) குறிக்கிறது.

கொக்கி போல வளைந்திருப்பது ஹெகா (Heka) - இது பலத்தைக் (strength) குறிப்பது.



• ஹெகா



• மாட்

மாட் (Maat)- (இதை விவரிக்க எனக்குத் தெரியவில்லை!) நீதியைக் குறிக்கும் சின்னம்.

(தொடரும்)



நீண்ட நாட்களுக்குப் பின் ரஜினி நடிக்கும் 'சந்திரமுகி' யின் இசையமைப்பாளராகியிருக்கிறார் வித்யாசாகர். 'வாழ்த்து'ச் சொல்லிவிட்டு அவரிடம் பேசினோம்.

"என் பொறுப்புகளை உணர்ந்திருக்கிறேன்!"

'சந்திரமுகி'க்கு இசையமைப்பதை எப்படி உணர்கிறீர்கள்?

''ரொம்ப சந்தோஷமா இருக்கு. வளர்ச்சியை உறுதி செய்கிற படமா இது அமைஞ்சிருக்கு. உழைப்புக்குக் கிடைத்த வெற்றி.''

இந்த வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?

''தெரியலை. உண்மை இதுதான். தயாரிப்பாளரும் இயக்குனரும் என் மீதும், என் இசை மீதும் கொண்டுள்ள நம்பிக்கையில் கிடைத்ததாகத்தான் சொல்லணும். வாசு சார்தான் முதல்ல என்கிட்ட பேசினார். அவர் எனக்குப் பல வருஷப் பழக்கம். நான்னா அவருக்கு ரொம்ப இஷ்டம். 'ஒரு சந்தோஷமான நியூஸ். அடுத்த வாரம் நேர்ல வந்து சொல்றேன்'னு போன்ல பூடகமா சொன்னார். நேர்ல வந்து சொன்னப்போ, எனக்கு பயங்கர ஷாக். இன்ப அதிர்ச்சியா இருந்துச்சு. பிரபு சாரும் எனக்கு நல்ல நண்பர். என் வளர்ச்சியில அக்கறை உள்ள மனிதர். இவங்க ரெண்டு பேருக்கும் எத்தனையோ நண்பர்கள் இருக்காங்க. ஆனா எனக்கு இந்தப் பட வாய்ப்புக் கொடுத்திருக்கறது அவங்க என் மேல வச்சிருக்கற நம்பிக்கையைத்தான் காட்டுது. அதைக் காப்பாத்தணும்னு விரும்புகிறேன்.

'சந்திரமுகி' பாடல்கள் குறித்து ரஜினி உங்களிடம் ஆலோசனை செய்தாரா?

''ரஜினி சாரை நான் முதன் முதல்ல நேர்ல சந்திச்சதே பட பூஜை அன்னைக்குத்தான். ரெண்டே வார்த்தைதான் என்கிட்ட பேசினார். 'இந்தப் படத்துல உங்களுக்குத்தான் நிறைய வேலையிருக்கு'ன்னு சொன்னார். 'செய்வோம் சார்'னேன். சந்திரமுகி ஒரு மியூசிக்கல் சப்ஜெக்ட். பாடல்கள் படத்தின் கதையோடு ஒட்டி வருது. கம்போசிங் போயிட்டிருக்கு.''

–வித்யாசாகர்

ரஜினி படத்துக்கு வழக்கமா பாடல் எழுதுபவர் வைரமுத்து. சந்திரமுகியில் எப்படி?

"சந்திரமுகியில் வைரமுத்து சார் பாடல் எழுதலை. எந்த ஒரு படத்துக்கும் யார் பாடல் எழுதறதுங்கறது, நான் மட்டும் எடுக்கற முடிவில்லை. இது பலபேரால் ஆலோசிக்கப்பட்டு எடுக்கப் படற முடிவு. குறிப்பா, தயாரிப்பாளர் மற்றும் இயக்குனர் இதுல முக்கியப் பங்கு வகிக்கறாங்க.

உங்களை எந்த விதத்தில் அடையாளப்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள்?

மக்கள் விரும்புற ஒரு இசையமைப்பாளரா, அவங்களோட ரசனையை மேம்படுத்துற ஒரு கலைஞனா, இன்னைக்கு மட்டும் புகழடைஞ்சா போதும்னு பாட்டு தராம, என்னைக்கும் நீடித்து நிற்கும் பாடல்களைத் தரும் இசையமைப்பாளராத்தான் என்னை அடையாளப்படுத்திக்க விரும்புறேன்!

மக்கள் விரும்புகிறார்கள் என்று கூறிக்கொண்டு இன்றைக்கு இசையமைப்பாளர்கள் டப்பாங்குத்துப் பாடல்களை அதிகமாக உலவவிடுகிறார்களே..?

"மக்கள் விரும்புறாங்கன்னு நான் என்னைக்கும் சொன்னதேயில்லை. நல்லதைக் கொடுத்தா, அவங்க கட்டாயம் ஏத்துக்கறாங்க. அதே நேரத்துல பொழுது போக்கு அம்சம் நிறைந்த பாடல்களும் சினிமாக்கள்ல தேவைங்கிறத மறுக்கறதில்ல. நல்ல இசையைத் தரணும்னு தொடர்ந்து மெலோடியே போட்டுக்கிட்டிருந்தா, சினிமாவ மறந்துட்டு கச்சேரி நடத்த வேண்டியதுதான்."



தற்காலத்தில் ஆபாசப் பாடல்கள் மலிந்து விட்டதே... இதற்கு முழு முதற் காரணம் இசையமைப்பாளர்கள்தானே?

"நான் என்னைக்கும் கொச்சையான பாடல்களைக் கொடுத்ததில்லை. அதில் மிகவும் சிரத்தை எடுத்துக்கறேன். என் பாடல்கள் ரசனைக்குரியதா மட்டுமில்லாம, பத்துப் பேர் நடுவுல பாடக்கூடியதாகவும் இருக்கும். என் பொறுப்புகளை நான் உணர்ந்தே இருக்கிறேன்!"

இசையமைப்பாளர்களுக்குள் ஆரோக்கியமான சூழல் நிலவுகிறதா?

"ஈகோதான் ஒரு மனிதனோட வீழ்ச்சிக்கு அடிப்படைன்னு நெனைக்கறவன் நான். எங்களுக்குள்ள ஆரோக்ய சூழல்தான் நிலவுது."

தற்போதைய தமிழ் சினிமாவில் நீங்கள்தான் காஸ்ட்லி இசையமைப்பாளரா?

"அது எனக்குத் தெரியல. எனக்குத் தெரிஞ்சது ஒண்ணுதான். நல்லதுன்னா நிச்சயம் காஸ்ட்லியாத்தான் இருக்கணும். சும்மா கிடைச்சுடக் கூடாதில்லையா? மேலும் நல்லது எளிமையாக் கிடைச்சா அதனோட அருமை புரியாதில்லையா?"

எந்த அடிப்படையில் புதுக் கவிஞர்களுக்கு வாய்ப்புத் தருகிறீர்கள்?

"கவிதைகளில் நல்ல கற்பனை வளம் இருக்கணும், சிந்தனை புதுசா இருக்கணும், சொல்லாட்சி, ஆளுமை இருக்கணும், எல்லாத்துக்கும் மேல எளிமை இருக்கணும், புரியணும், மற்றவர்களால் ரசிக்கப்படாதது எவ்வளவு பெரிசா இருந்தாலும் அதனால சிறப்பு இல்லை. தமிழ் மேல எனக்கு மிகப்பெரிய காதலே இருக்கறதால, இதெல்லாத்தையும் நான் எதிர்பார்க்கறேன்."

- மு. மாறன்

படங்கள்: **ஸ்ரீஹரி**

சேலம் டு ஷார்ஜா...

சுய உதவிக் குழுக்கள் என்றாலே நமக்கு சட்டென்று நினைவுக்கு வருவது மகளிர் சுய உதவிக் குழுக்கள்தாம். ஆனால், ஆண்கள் சுய உதவிக் குழுக்களும் நடைமுறையில் இருப்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? சேலம் பனைமரத்துப்பட்டி மற்றும் கம்மாளப் பட்டியில் சுமார் அறுபத்தைந்து ஆண்கள் சுய உதவிக் குழுக்கள் வெற்றிகரமாய் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழுவிலும் இருபது நபர்கள் விதம் முந்நூறு இளைஞர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றனர். இவர்களின் முக்கிய வேலை, அரளிப் பூக்களைப் பயிரிடுவது தான்.

நீர் அதிகம் தேவையில்லாத மணற் பாங்கான செம்மண் அல்லது கரிசல் மண்ணில் விளையும் அரளிச் செடிகள், சற்றேறக்குறைய கறவை மாடுகளுக்கு நிகரான லாபம் ஈட்டித் தருகின்றன.

அரளிப் பூக்களின் விளைச்சல் பூமி இதுவரை திண்டுக்கல் மாவட்டமாகவே இருந்து வந்தது. இரவில் மொட்டுகளாய் இருந்து பகலில் மலரும் பூக்களைப் பறித்து சுற்று வட்டாரங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்து வந்தனர் திண்டுக்கல் வாசிகள். ஆனால் சேலம் கம்மாளப்பட்டி இளைஞர்கள், தங்களின் சுய முயற்சியால், இரவு 12 மணியிலிருந்து காலை ஐந்து மணி வரை சுமார் இரண்டு அங்குலம் வளர்ந்த மொட்டுகளைப் பறித்து வைத்தால், நான்கு நாட்கள் வரை அழுகாமல் இருக்கிறது என்பதைக் கண்டனர். அதன் பிறகுதான் அந்த மாயம் நிகழ்ந்தது. இளைஞர்கள் குழுக்களாய்ச் சேர்ந்து அரளியைப் பயிரிடத் தொடங்க, அசந்து போன தமிழக அரசின் தோட்டக் கலைத் துறை, தன்னால் முடிந்த மானியங்களும், நிலமும் தந்து உதவியிருக்கிறது.



• அரளி பறிப்பு...

இந்த இளைஞர்களின் அயராத உழைப்பினால் தமிழகம் முழுக்க அரளிப் பூக்கள் சப்ளை செய்யப்படும் மையமாக மாறியிருக்கிறது கம்மாளப்பட்டி. மேலும் ஷார்ஜா, துபாய் போன்ற வெளிநாடுகளுக்கும் இங்கிருந்து ஏற்றுமதி செய்கிறார்கள். எப்படி இதெல்லாம் சாத்தியமானது? சுய உதவிக் குழுவின் ஒருங்கிணைப்பாளரான பொன்னுசாமியிடம் பேசினோம்.

“மே 2003-ல் சி.எம். ஆத்தூருக்கு வந்திருந்த பொழுது ‘பெண்களுக்கு மட்டுமில்லை ஆண்களுக்கும் சுய உதவிக் குழுக்கள் அமைத்துக் கொள்ள அனுமதி உண்டு’ன்னாங்க. நாங்க அதை கப்புன்னு பிடிச்சிக்கிட்டோம்.

நாங்க அரளி விவசாயம் நல்லா செய்யறதைக் கேள்விப்பட்டு, சேலத்திலிருந்த தோட்டக் கலைத் துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளான செல்வராஜ் மற்றும் வெங்கடராமன் இருவரும் உதவி செய்ய வந்தாங்க.


சுய உதவிக் குழுவிற்கான அரசு ஒதுக்கீடு ஒரு லட்சமும், அரசு மான்யமாக ஒரு லட்சமும் வாங்கித் தந்தாங்க. விவசாயத்துக்கு ஆத்தூர் பாரத ஸ்டேட் வங்கிக் கிளையிலிருந்து விவசாயக் கடன் வாங்கித் தந்தாங்க. சுய உதவிக்

குழுவுக்குன்னு சொந்தமா மலர் ஏல மையம்ங்கிற பெயரில் ஒரு லட்சம் செலவில் கட்டடம் கட்டிக் கொடுத்தாங்க. தொண்டு நிறுவனமான 'EAM' (Environmental Agri Management) பல ஆலோசனைகளை இலவசமா வழங்கி வருது. ஒரு மினி வேனையும் இலவசமா இயக்கிக் கொள்ள அனுமதித்துள்ளது'' என்றார்.

சுய உதவிக் குழுவில் உள்ள நடராஜன், லக்ஷ்மணன் இருவரிடமும், அரளிப் பயிர் செய்யும் விதம் குறித்து கேட்டோம்.

"அரளியில் மொத்தம் மூன்று வகை உண்டுங்க. ஒற்றை ரோஸ், ஒற்றை வெள்ளை, ஒற்றை சிவப்பு. மலர்கள் ஆண்டு முழுக்க மலரும் தன்மையுடையன. நடவு செஞ்ச நான்காவது மாதத்திலிருந்து பூக்க ஆரம்பிச்சுடும். தினமும் 100 முதல் 125 கிலோ மலர்கள் ஒரு ஹெக்டேரிலிருந்து கிடைக்கும். நாலு நாலு பேரா வாகனங்களில் அரளிக் காட்டுக்குப் போவோம். சுரங்கத் தொழிலாளிங்க மாதிரி நெத்தியில் ஒரு டார்ச் விளக்கை வெச்சுக்கிட்டு, பறிச்ச மொட்டுகளை அள்ளிப் போட ஒரு கோணிப் பையை இடுப்பில் கட்டிக்கிட்டு, நள்ளிரவு காட்டுக்குள்ள இறங்கினா, விடிய விடிய அரளி மொட்டுகளைப் பறிப்போம்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பெரிய ஊர்களின் அரளி மார்க்கெட்டையும் நாங்க பிடிச்சிட்டோம். சேலத்தில் உள்ள வ.உ.சி. பூ மார்க்கெட்டுக்கு மட்டும் தினமும் ஆயிரம் கிலோ பூக்கள் அனுப்பப்படுது. இரண்டு நாள் சேலத்திலிருந்து தாமதம் ஏற்பட்டாக் கூட, சென்னை பூ வியாபாரிகள் அலறுறாங்க. கோவையிலிருந்து ஏஜண்டுகள் மூலம் ஷார்ஜா, துபாய் போன்ற இடங்களுக்கெல்லாம் கூட அரளிப் பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுது. இதுக்கெல்லாம் மகுடம் வைத்தது போல, எங்களோட உழைப்பைப் பார்த்து வியந்து போன தமிழ்நாடு தோட்டக் கலைத் துறை இயக்குனர் சிவசூரியன் ஐ.ஏ.எஸ், ரூபாய் ஐந்து லட்சம் மான்யம் தொகையும், மாதிரி நாற்றங்கால்களும் வழங்கியிருக்கார்'' என்றவர்கள் "சில சிரமமும் இருக்கத்தான் செய்யுதுங்க'' என்று தொடர்ந்தனர்...



• பொன்னுசாமி



• ஜி. வெங்கடராமன்

''மலர் பறிக்கிறவுங்களுக்கு ஓர் இரவுக்கு முப்பது ரூபாய்தான் கூலி கிடைக்குது. அதே மாதிரி பாம்புப் பிரச்னை. அரளியின் கசப்புத் தன்மை காரணமா, பாம்பு அரளிக் காட்டுக்கு வராதுன்னாலும், வரப்போரம் பாம்புகள் இருக்கும். பாம்புக்கடியினால் ஏற்கெனவே ஒரு கூலித் தொழிலாளி மரணம் அடைந்துள்ளார். ஆரம்ப சுகாதார மையம் இருந்தாலும் பாம்புக்கடி முறிவு மருந்தும், அதைப் பாதுகாப்பா வைக்க ஒரு குளிர் சாதனப் பெட்டியும் அரசு வெச்சுக் கொடுத்தா ரொம்ப நல்லா இருக்கும்'' என்றனர்.

சரி, தமிழ்நாடு அரசு தோட்டக் கலைத் துறையின் உதவி இயக்குனர் ஜி. வெங்கடராமன் என்ன சொல்கிறார்?

"சுய உதவிக் குழுக்கள் மூலம் தோட்டப்பயிர் செய்பவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்ய இந்தத் துறை காத்துக் கொண்டிருக்கிறது.

கம்மாளப்பட்டி சுய உதவிக் குழுக்கள் ஷார்ஜா, துபாயோடு நிறுத்திக் கொள்ளாமல், இந்தியர்கள் வாழும் உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் அரளி ஏற்றுமதி செய்ய வேண்டும். வேறென்ன சொல்ல'' என்று முடித்துக் கொண்டார்.

- சாந்தி சர்மா

— ஓர் அரளி அதிசயம்!

கண்ணுக்குள் கனவு

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

சேலம் ராஜ்பாரதி

ஒப்பாரம்பட்டி கிராமம். காலை மணி ஆறரை. கோனாரின் டீக் கடைக்கு முன்னால் கிடந்த பெஞ்சில் நான்கைந்து பேர் உட்கார்ந்திருந்தார்கள். இந்த கிராமத்துக்கே இந்த ஒரு டீக்கடை தான். பெரியதாக வியாபாரம் இல்லை என்றாலும், வரும் வருமானம் வயிற்றைக் கழுவிக் கொள்ளப் போதுமானதாக இருந்தது கோனாருக்கு.

ஐந்து மணியிலிருந்து ஏழு மணி வரை 'டீ' வியாபாரம் கொஞ்சம் சூடு பிடிக்கும். ஏழு மணிக்கு மேல் ஒன்றிரண்டு பேர் வந்து போவார்கள். அவ்வளவுதான் வியாபாரம்.

பத்து நிமிடம் கழித்து 'செம்புடன்' வந்து நின்றார் தங்கப்ப வாத்தியார். வாத்தியார் என்றால் பள்ளிக்கூட வாத்தியார் இல்லை. கூத்து வாத்தியார். போர்வைக்குள் ஒளிந்திருந்த 'செம்பை' எடுக்க, சில விநாடிகள் தயக்கத்துடன் நின்றார்.



ஏற்கெனவே கொஞ்சம் கடன் பாக்கி நிலுவையில் இருக்கிறது. இப்போதும் கடன் கேட்கத்தான் வந்திருக்கிறார். கோனார் 'தருவாரோ மாட்டாரோ' என்று யோசித்தபடி நின்றார்.

"என்ன வாத்தியாரே... டீ போடட்டுமா?" கோனார் கேட்டு யோசனையைக் கலைத்தார்.

"ம்... போடுங்க கோனாரே.. ஆனால்..." என்று இழுக்கும்போதே கோனார் புரிந்து கொண்டார்.

"இன்னிக்கும் கடன்தானா..?" டீயை ஆற்றியபடி கேட்டார்.

"ம்... ஆமாம் கோனாரே... தப்பா நெனச்சிக்காதீங்க... ஒரு ரெண்டு மூணு நாள்ல காசு வந்திடும்.. குடுத்துடறேன்..." சங்கடமாய் நெளிந்தபடி சொன்னார் அவர்.

"எங்கேருந்து வரும்...?" கோனார் கேட்டார்.

சட்டென பதில் சொல்ல முடியாமல் தடுமாறி நின்றார் வாத்தியார்.

கோனார் போட்டுக் கொடுத்த பார்சல் டீயுடன் கூத்துப் பட்டறைக்குள் நுழைந்தார் வாத்தியார். அவருடைய சகாக்கள் ஆறு பேரும் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வாங்கி வந்திருந்த டீயை தம்ளர்களில் ஊற்றி ஆறாய் பிரித்தார்.

அவர்களை எழுப்பி டீயைக்



"ரெட்டையாப் பொறந்த பெண் குழந்தைகளுக்கு, தலைவரை பேர் வைக்கச் சொன்னது வம்பாப் போயிடுச்சுங்க..."

"எப்படி?"

"'ஜெயலட்சுமி-முத்துலட்சுமி'ன்னு பேர் வச்சுத் தொலைச்சிட்டார்!"

- நாமக்கல் பாலு

குடிக்கக் கொடுத்தார்.

ஒரு காலத்தில் இந்தக் கூத்துப்பட்டறை கூத்தும் கும்மாளமுமாய் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. அது ஒரு காலம். தொடர்ச்சியாய் கூத்துக் கட்டும் வாய்ப்புகள் கிடைத்துக் கொண்டிருந்த நேரம் அது. எப்போதும் ஒத்திகை நடந்து கொண்டே இருக்கும். அண்டா அண்டாவாய் சோறு பொங்கிப் போட்டு தொழில் கற்றுக் கொண்ட காலம் அது.

வருடத்துக்கு அறுபது நாள், எழுபது நாள் என்று கூத்து கட்டுவார். ஒரு கூத்துக்கு இரண்டாயிரம் வருமானம் வரும்.

இப்போது எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. கிடைத்த இரண்டு படி கஞ்சியைக் கொண்டுதான் நேற்றைய பொழுதைக் கழித்தார்கள்.

இன்று?

தங்கப்ப வாத்தியார் மோட்டு வளையை உற்றுப் பார்த்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''அண்ணே!'' கூத்து கோஷ்டியில் இருந்த கந்தப்பன் கூப்பிட்ட குரல் கேட்டு சிந்தனைக் கலைந்தார்.

எதுவும் பேசாமல் பார்வையில் 'என்ன?' என்பதுபோல் பார்த்தார்.

"இல்லண்ணே... மத்தவங்க மாதிரி நாமளும் டவுன் பக்கம் போயி, ஏதாவது வேலை வெட்டி பார்த்து..."

"கந்தப்பா! அரிதாரம் பூசிப் பூசி அலுத்துப் போன முகம்டா... பாடத்தை படிச்சுப் படிச்சு மரத்துப் போன மனசுடா! இனி மேல் போய் வேற வேலை பாக்கறதுன்னா..."

''அதுக்காக... இப்படியே கெடந்து சாகலாம்ங்கறீங்களா?''

"என்னால முடியாது கந்தப்பா... இந்த உயிர் போறதுன்னாகூட, அரிதாரம் பூசின முகத்தோட... கூத்து மேடையிலேயே போகணும்னுதான் நான் சாமிகிட்டே வேண்டிகிட்டிருக்கேன். நீங்க வேணுமின்னா... டவுன் பக்கம் போய் வேற வேலையைத் தேடிக்கிங்க..." என்றவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''அண்ணே! உங்களை விட்டுட்டு நான் மட்டும்... நாங்க மட்டும்... எப்படிண்ணே...?'' கந்தப்பன் முடிக்கவில்லை...

''என்னங்க... இங்க கூத்து வாத்தியார் தங்கப்பன்னு...'' கூத்துப் பட்டறைக்கு வெளியே யாரோ விசாரிக்கும் குரல் கேட்டு, பேசுவதை நிறுத்திவிட்டு வெளியில் வந்தார் கந்தப்பன்.

"நீங்க யாரு?" கேட்டார்.

"நான் சேலத்தாம்பட்டியிலிருந்து வர்றேனுங்க. பிரசிடெண்ட் அனுப்பிவச்சாரு... கூத்து வாத்தியாரைப் பாக்கணும்..." என்றார் வந்தவர்.

"ம்.. வாங்க..." என்று பட்டறைக்குள் அழைத்துப் போனார்.

"நான் சேலத்தாம்பட்டியிலிருந்து வர்றேனுங்க... பேரு கருப்புசாமிங்க... பிரசிடெண்ட்டையா அனுப்பிச்சாரு..."

"யாரு? பிரசிடெண்ட் சுப்பையா அம்பலமா..?" என்றார் தங்கப்ப வாத்தியார்.

"ஆமாங்க..."

"என்ன விஷயமா அனுப்பினாரு...?"

"அதுங்க... நாலு வருஷமா ஊருக்குள்ள மழை இல்லீங்க. மழை மாரி வரணுமின்னு ஊருக்குள்ள மூணு ராவிக்கி கூத்துக் கட்டணுமின்னு சொல்லிட்டு வரச் சொன்னாங்க" என்றான். வாத்தியாருக்கு அம்பலம் அறிமுகமானவர்.

"என்ன...? கூத்து... கூத்து கட்டணுமா?" இதைக் கேட்டதும் வானம் பார்த்து கண்கள் பூத்துப் போன உழவன், ஊற்றுத் தண்ணீர் கண்டதுபோல் மனசுக்குள் வியப்பும் மகிழ்ச்சியும் வந்து நலம் விசாரித்தன.

"இந்தாங்க. அட்வான்ஸுக்கும் வழிச்செலவுக்கும் ஐந்நூறு ரூபா குடுத்து உட்டுருக்காங்க..." கொஞ்சம் கை நடுக்கலுடன் வாங்கிக் கொண்டார் வாத்தியார்.

பல மாதங்களுக்குப் பிறகு மொத்தமாய் கொஞ்சம் பணத்தைப் பார்த்த கண்கள், மலர்ந்து போயின. சுற்றிலும் இருந்தவர்களை இறுமாப்புடன் பார்த்தார் தங்கப்ப வாத்தியார்.

"சரி! நாங்க வந்து சேர்ந்திடுவோம்னு சொல்லுங்க... தேதி சொன்னாங்களா...?" கேட்டார்.

"வர்ற எட்டாம் நான்னு சொல்லச் சொன்னாங்க..."

"சரி!" அவர் புறப்பட்டுப் போகும்வரை காத்திருந்த கண்கள் இப்போதும் கலங்கின, இது ஆனந்தத்தில்.

வாத்தியாரின் நம்பிக்கையைப் பார்த்து கந்தப்பன் வாயடங்கிப் போனார். இதுவரை தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த செத்துப் போயிருந்த நம்பிக்கை, மீண்டும் உயிர்பெற்று எழுந்தது. புதிய உத்வேகத்துடன் ஒத்திகையை ஆரம்பித்தார் தங்கப்ப வாத்தியார்.

எட்டாம் நாள் காலையிலேயே சேலத்தாம்பட்டிக்குப் போய்ச் சேர்ந்த கூத்து கோஷ்டியை வரவேற்றார் சுப்பையா அம்பலம். அவர் ஒரு பழைமை விரும்பி. இருபது வருடங்களாக அவர்தான் பிரசிடெண்ட். பஞ்சாயத்து இல்லாத காலங்களில்கூட.

கோவிலை ஒட்டியிருந்த பெரிய மைதானத்தில், சின்னதாய் மேடை அமைத்துக் கொடுத்திருந்தார்கள்.

எட்டு மணிக்கெல்லாம் கூத்தை ஆரம்பித்து விட வேண்டும் என்பதில் முனைப்புடன் செயல்பட்டார்கள். ஏழு மணிக்கெலாம் அரிதாரம் பூசி, அத்தனை பேரும் கூத்துக் கட்டத் தயாராக இருந்த நேரம்...

கருக்கல் கட்டியிருந்த வானம், சொட்டுச் சொட்டாய் தூறல் போட ஆரம்பித்தது. சொட்டுச் சொட்டாய் வந்த தூறல், ஊசித் தூறலாய் மாறி அரைமணியில் பெருமழையாய்ப் பொழிந்தது.

தங்கப்ப வாத்தியாரின் கூத்து கோஷ்டி தலைமேல் கை வைத்தபடி இடிந்து போய் உட்கார்ந்திருந்தார்கள். இதுவரை இருந்த உற்சாகமும் உத்வேகமும், மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டன. ஊர் ஜனம் மொத்தமும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மகிழ்ந்து நனைந்தார்கள். விடிய விடிய மழை நிற்காமல் பெய்தது. இடியும் மின்னலும் வானத்தில் மட்டுமல்ல, கூத்து கோஷ்டியின் மனதிலும் தான் இடித்தது, அடித்தது.

அடுத்த நாள், அடுத்த நாள் என்று மூன்று நாட்களும் தொடர்ச்சியாய் பெய்த மழையில், கூத்துக் கோஷ்டியின் நம்பிக்கை செத்துப் போனது.

மூன்றாவது நாள் காலை மழை நின்றிருந்தது.

"தங்கப்பா! ஏதோ ஆத்தா கருணையினால வேண்டுதல் நிறைவேறிடுச்சு... நீங்க கூத்து கட்ட முடியல. கூத்துக் கட்டியிருந்தா கோயில் பணத்திலே எடுத்து குடுக்கலாம்... இப்போ முடியாதில்ல. இந்தா இதை வழிச் செலவுக்கு வச்சிக்கிட்டு புறப்படுங்க... அடுத்த வருஷம் உங்க கூத்துதான்.. இது என்னோட சொந்தப் பணம்..." இருநூறு ரூபாயை கையில் கொடுத்து விட்டு போனார் சுப்பையா அம்பலம்.

சேலத்தாம்பட்டி பஸ் நிறுத்தத்தில் காத்திருந்த கூத்து கோஷ்டி, பஸ் வருகிறதா என்று தலை நீட்டிப் பார்த்தார்கள். பஸ் இன்னும் வரவில்லை. எப்போதாவது வரும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தார்கள். 'பஸ் மட்டுமல்ல.. கூத்து கட்டும் வாய்ப்பும்தான்...' ●



மணிரத்னத்தின் ஷாக்!

நுனி நாக்கு ஆங்கிலம் போல் இன்றைய இளைஞர்கள் மத்தியில் நவநாகரிக படிப்பாகத் தோன்றி கலக்கிக் கொண்டிருக்கிறது விஷுவல் கம்யூனிகேஷன்.

சென்னையின் மாடர்ன் மாளிகைகளில் ஒன்றான ஸ்பென்சர் ஃப்ளாசாவில், விஸ்காம் படிப்பின் விஸ்தீரணம் குறித்து நம்மிடம் ஆசைதீர சிராட்டினார்கள், எஸ்.ஆர்.எம். ஆர்ட்ஸ் கல்லூரியில் படிக்கும் வேணி, ஸ்ரீஜா புவனேஸ்வரி,





காயத்திரி, அபர்ணா ஆகிய நால்வரும்.

ஹைய்யா... கணக்கு இல்லையே!

"விஸ்காம் படிக்க வர்றவங்க எல்லோரும் கலர் கலரான கனவுகளோடதான் வருவாங்க. சினிமா, டீவி, விளம்பரம், பத்திரிகை, கம்ப்யூட்டர், வெப் டிசைனர், சவுண்டு இன்ஜினியர்னு இந்த படிப்புக்கு கவர்ச்சியான வேலைவாய்ப்புகள் எக்கச்சக்கமா இருக்கு.

மத்த டிகிரி படிப்புகளில் இருக்கிற மாதிரி கணிதம், அறிவியல், ஹிஸ்ட்ரியெல்லாம் இல்லாதது, ஏதோ இத்தனையாண்டு காலமா +2 வரைக்கும் சுமந்த பாரத்தை ஒரேயடியா இறக்கி வைச்ச மாதிரி இருக்கு. முதல் இரண்டு வருஷம் எல்லோரும் மேலே சொன்ன அத்தனை மீடியா சம்பந்தமான படிப்புகளையும் படிப்போம். கடைசி வருஷம், எங்களுக்குப் பிடிச்ச டீவியோ, அட்வர்டைசிங்கோ, அந்த மனசுக்குப் பிடிச்ச ராஜகுமாரனை மாலை போட்டு



செலக்ட் பண்ணி, அதுல தனிக்கவனம் செலுத்துவோம்.''

தினம் ஒரு படம்...!

''அடுத்தவங்களுடைய பொழுது போக்கு, எங்களுக்குப் படிப்பா, தொழிலா மாறினது ரொம்ப ஜாலியான விஷயம். மூணாவது வருஷம், தினம் அட்லீஸ்ட் ஒரு படமாவது பார்க்கச் சொல்வாங் கன்னா பார்த்துக்கோங்க. அதே மாதிரி நாள் முழுவதும் டி.வி பார்த்தால், நாங்க ஆழமா பாடத்துல கவனம் செலுத்து றோம்னு அர்த்தம். வித்தியாசமான படமோ, பாட்டோ அல்லது டி.வி சீரியலோ எதுவாயிருந்தாலும் எப்படா முடியுங்க, ஜிங்கிள்ஸ் (விளம்பரங்கள்) வரும்னு ஆசையா காத்திட்டிருப்போம். ஆனாலும் கிரியேட்டிவான ஃபாரின் விளம்பரங்கள் எல்லாம் பார்த்துட்டு, நம்மூர் விளம்பரங்களுக்கு நாங்க கொடுக்கும் தீர்ப்பு - 'அப்படிப் போடு'.







சினிமாப் பாட்டுக்கும் பெரும்பாலான விளம்பரங்களுக்கும் நம்மூர்ல கொஞ்சம் கூட வித்தியாசமே இல்லை. அதே மாதிரி செல்ஃபோன் விளம்பரங்களும் அப்படி யொன்னும் பிரமாதம் கிடையாது. ஊருக்கு இளைச்சவன்... பழமொழிதான் ஞாபகத்துக்கு வருது."

திட்றாங்க... திட்றாங்க!

"படங்கள் பார்க்கும் போது முதல்ல தவறுகளைத்தான் உன்னிப்பா கவனிப் போம். எங்களுக்குள்ளே யார் அதிகமா தவறு கண்டுபிடிச்சாங்கன்னு போட்டி யெல்லாம் வைச்சிக்குவோம்.

ஆமா, இயக்குனர் செல்வராகவன் ஏன் லவ்வுக்கும் ஃப்ரெண்ட்ஷிப்புக்கும் இடையில மாட்டிக்கிட்டு தத்தளிக் கிறாருன்னு புரியவே மாட்டேங்குது. 'லேசா லேசா'வுல 'முதன் முதலாய்' கேட்டு, நாங்களே மனசுக்குள்ளே அழகா பிக்சரைஸ் பண்ணி படத்துக்குப் போனா, எங்க உற்சாகக் காத்து 'புஸ்'ன்னு அப் படியே இறங்கிப் போச்சு. 'வசீகரா' பாட்டுல ரீமாசென் பதுங்கியபடி கோழி பிடிக்கும் விஷுவல்ஸ் பார்த்து, ஐய்யோ, நொந்தே போயிட்டோம். 'ஆய்த எழுத்து' பாடல்களைக் கூட மணி ரத்னம் ஏனோதானோன்னு எடுத்தது பெரிய ஷாக்!"

நாங்க சுதந்திரப் பறவைகள்!

"ட்ரெஸ்ல மாடர்ன்னா ஜீன்ஸ், டி-ஷர்ட் மாதிரி அல்ட்ரா மாடர்ன் படிப்புன்னா, அது எங்க விஸ்காம் தான். அதனால காலேஜ்ல எங்களுக்கு மட்டும் ட்ரெஸ்ல எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. 'சுதந்தி ரப் பறவைகள்'னு ஏதோ தமிழ்ல சொல்வாங்களே, அது வேற யாரும் கிடையாதுங்க, நாங்கதான்.

நாங்க அடிக்கடி டீ.வி ஸ்டுடியோ, சினிமா ஷூட்டிங்குன்னு போய் பொறுப்பா வேடிக்கை பார்ப்போம். போன வாரம் எங்க காலேஜூக்கு நடிகர் மாதவன் வந்து லெக்சர் கொடுத்தார். லெனின், தரணின்னு பலர் எங்க க்ளாஸுக்கே வந்து சினிமா, மீடியா பத்தி ப்ராக்டிக்கலா பேசுவாங்க. இதெல்லாம் சும்மா கிடைக்கலைங்க, வருஷமானா ஐம்பதாயிரம் பீஸ் கட்றோம்ல!"

எந்த சேனல் நல்ல சேனல்?

"அரசியலைவிட மீடியாவுல இருக்கிற அரசியலும் குழப்பங்களும் அதிர்ச்சியா இருக்கு. எந்த டீ.வி நியூஸை நம்பறதுன்னு பெரிய குழப்பமே இங்கு இருக்கு. பத்திரி கைகள் நடிகைகளுக்குத் தர்ற முக்கியத் துவம் சாதனையாளர்களுக்குத் தர்றதில்லை. மும்தாஜும் கிரணும் எத்தனை கவர் ஸ்டோரிஸ்ல வந்தாங்க, வாட் அபவுட் விஸ்வநாதன் ஆனந்த், குற்றாலீஸ்வரன் அண்ட் அதர்ஸ்?

முறையில்லாம மீடியாவுல நுழைஞ்சு அதை பாழ்படுத்தறவங்களைத் தாண்டி நாங்க எல்லோரும் கண்டிப்பா புது மாற்றம் கொண்டு வரத்தான் போறோம். அரசியல் கட்சிகளுக்கு சலாம் போடாம, மக்கள் மனசுல என்ன இருக்கோ, அதை தைரியமா வி.ஐ.பிங்ககிட்ட கேட்கிற பி.பி.சி. கரன் தாபர் மாதிரியான மீடியா பிரபலங்கள் எங்களுக்கெல்லாம் பெரிய உத்வேகத்தைக் கொடுக்கறாங்க!"

- கண்

படங்கள் : ஸ்ரீஹரி

145, THIRUNAGAR, ERODE - 638 003.
Ph : 0424 - 24 210796, 214779.
FAX : 0424 - 222379.

Rtn. J. SUDHANANDHEN

PRESIDENT : SOUTH INDIA SENGUNTHA MAHAJANA SANGAM, CHENNAI
VALLAL SABAPATHI MATRICULATION SCHOOL, CHENNAI

CHAIRMAN : RUAL SELF HELP PROJECT (2002 - 2003)
ROTARY DISTRICT CONFERENCE (2003 - 2004)
R.I.DIST, 3200.

CORRESPONDENT : ERODE SENGUNTHA ENGINEERING COLLEGE, Thudupathi,
M.P.NACHIMUTHU M.JAGANATHAN ENGINEERING COLLEGE, CHENNIMALAI
SENGUNTHAR HIGHER SECONDARY SCHOOL, Erode.
SENGUNTHAR MATRICULATION HIGHER SECONDARY SCHOOL, Erode.
SENGUNTHAR GIRLS HIGHER SECONDARY SCHOOL, Erode.
MOTTAYAPPAR MIDDLE SCHOOL, Vallipurathampalayam
SENGUNTHAR KALVI NILAYAM, Erode.



14/07/04

" DIAWIN " பிஸ்கட் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து தொடர்ந்து சாப்பிட்டு வருகின்றேன். நீரிழிவு நோயாளிகள் தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு. இது ஒரு மாற்று மருந்தாக இல்லாமல் தினசரி சிற்றுண்டியாக பயன்படுகிறது. நீரிழிவு நோய் கட்டுப்படுவதுடன். உடம்புக்கு தெம்பும் நாள் முழுவதும் சோர்வின்றி உழைக்கவும் பயனுள்ளதாக உள்ளது.

14.7.04

சர்க்கரை நோயாளிகளுக்கும்! சர்க்கரை நோய் வராமல் காப்பதற்கும்!

டயாவின் பிஸ்கட்



விற்பனையாளர்கள் :

CHENNAI - Akila Agencies, PH : 23770854,
CHENNAI - Mangalam Enterprises, PH : 26215827,
CHENNAI - G.B. Pharma agencies, PH : 9841368195,
DINDIGUL - Vinayaga Agencies, PH : 2431909,
KADAYANALLUR - Raja Marketing, PH: 9842197218,
KARUR - Iswarya Agencies , PH : 230356,
NAGAI - Bharath Agencies, PH : 220063,
PARAMAKUDI - Sri Thirupathi Agencies, PH : 222580,
SALEM - Vignesh Agencies, PH : 2353662,
THIRUVARUR - Manickam Agencies, PH -220123.
TIRUNELVELI - Shree Sunda Traders, PH : 2333091.
CHENNAI - Shelvaa Marketing (P) Ltd, PH : 24845059,
CHENNAI - Sri Balaji Agencies, PH : 3248058,
COIMBATORE - Viswanathan medical stores, PH : 2238273
HOSUR - Alamelu Enterpriese, PH : 265103,
KUMBAI - Mass Marketing, PH : 9843396008,
MADURAI - Angayarkanni Associates, PH : 2624411,
NAGERCOIL - Vanitha diacare shoppie, PH : 221324,
POLLACHI - S.G.M. Enteprises, PH : 221774,
SIVAKASI - Sri Ramji Marketing , PH : 272346,
TANJAVUR - Sri Meenashi Pharma, PH : 230596,
TUTICORIN - Hari Narayanan Agencies, PH : 9443182797.

வியாபார விசாரணைக்கு : **குளோபல் நெட்வொர்க்,**
9, கண்ணதாசன் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 24. போன் : (044) 24804133 , 23722656

SITA / 04 / .15

எங்க ஊர் பிள்ளையார்



• நாகநாத விநாயகர்

தஞ்சாவூர், பில்லுக்காரத் தெருவில் ஸ்ரீ சக்தி முனியாண்டவர் திருக்கோவில் உள்ளது. இங்கே உள்ள அரசு - வேம்பு இணைந்த மரத்தடியில், ஐந்து தலை நாகம் குடை பிடிக்க, நாக அணி பூண்டு வீற்றிருக்கிறார் நாக நாத விநாயகர்.

சகல வித நாக தோஷம், ராகு-கேது தோஷங்களையும் நீக்கி, அருள்பாலிக்கிறார் என்பதால் தினமுமே விழாக் கோலம்தான். விநாயகரின் பன்னிரண்டு அவதாரங்களில் ஒன்றான ஸ்ரீ மயூரேச கணபதி அவதாரத்தில், நாக லோகத்தில் வீரச் செயல் புரிந்தவர் இந்த ஓங்கார ரூப ஸ்ரீ நாகநாத விநாயகர் என்பது புராணம்.

மரண பயம், விஷ ஜந்துக்கள் பயம் நீக்கி, திருமணத்தடை அகற்றி மழலை பாக்கியம் தந்து செல்வம் அளித்து, என்றென்றும் துணை இருக்கிறார் நாகநாத விநாயகர்.

- பா.து.பிரகாஷ், தஞ்சாவூர்

பயம் அகற்றி, திருமணத் தடை நீக்கி, மழலை பாக்கியம் தந்து துணை இருப்பார் நாகநாத விநாயகர்

பில்லுக்காரத் தெரு பிள்ளையார், நாகம் குடை பிடிக்கத் தோற்றமளித்தாலும், உண்மையில், சர்ப்பத்தை விநாயகர் வெயிஸ்ட் பெல்ட் போலத்தான் உபயோகிக்கிறார். அப்படி உபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்ததே சுவாரஸ்யமான கதைதான்.

ஆதிசேஷன் பெல்ட்!

ஒரு சமயம், ஒளிமயமான திருக்கயிலாய மலையில் சிவ-சக்தி வீற்றிருந்தனர்.

திருமால், பிரம்மா, இந்திரன், தேவாதி தேவர்கள், சூரிய சந் திரர்கள், நவக்கிரங்கள், பதினெண் கணங்கள், சித்தர்கள், பக்தர்கள் என அனைவரும் வந்து, சிவபெரு மானை வணங்கி வரங்களைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

பரமசிவனின் திருமுடி மீதிருந்த ஆதிசேஷனுக்குப் பெருமை தாங்க வில்லை.


"ஆ! அத்தனை பேரும் வந்து அரனாரது திருவடியை வணங்கி, வாழ்வும் வரமும் பெறுகிறார்கள். நாம் அவருடைய திருமுடி மீது இருக்கின்றோம். நம்மினும் உயர்ந்தவர் யார்? நம் பெருமையே பெருமை." என்று எண்ணி ஆண வம் கொண்டான்.

சிவபெருமான் ஆதிசேஷ னுடைய ஆணவத்தை அறிந்தார். உடனே தமது திருக்கரத்தால் ஆதிசேஷனைப் பற்றி இழுத்து, நிலத்தின் மீது வீசி எறிந்தார். அவ் வளவுதான். ஆதிசேஷனின் தலை ஆயிரம் பிளவுகளாகப் பிளந்து விட்டது. ஆடாமல், அசையாமல் பெருந்துயருடன் படுத்துக் கிடந்த ஆதிசேஷனை நாரதர் கண்டு இரக்கமுற்றார்.

"அப்பா... ஆதிசேஷா... ஆற்ற லும் அறிவும் கொண்ட உனக்கு, ஆணவத்தால் இக்கதி நேர்ந்து விட்டது. இந்த அவல நிலை தீர, நான் ஒரு வழியைக் கூறுகிறேன். ஐங்கரக் கடவுளை நினைத்து, அவருடைய ஆறெழுத்து மந்தி ரத்தை ஓதி உய்வாயாக" என்று கூறி கணேச மந்திரத்தை உப தேசித்தருளினார்.

ஆதிசேஷனும் மனமுருகி கணேச மந்திரத்தை விடாது ஓத, ஆனைமுகக் கடவுள் திருவுளம் மகிழ்ந்து, காட்சியளித்தார்.

"அன்பனே ஆதிசேஷா..., ஆயிரம் பிளவுகளாக உள்ள உன் தலை ஆயிரம் தலைகளாக விளங்கட் டும். முன் போல நிலத்தைத் தாங்கி, சிவபெரு மான் சடையில் வீற்றிருந்து பெருமை பெறுவாய்.




* பிரசித்தி விநாயகர்

அதுமட்டுமல்ல... இனி எமக்கு உதர பந்தனமாகவும் விளங்கியிருப்பாயாக!" என்று கூறி வரமளித் தருளினார்.

விநாயகர் அண்ட கோடிகளை எல்லாம் கடந்த

விசுவரூபம் எடுத்தார். ஆதிசேஷனை அன்போடு எடுத்து, தமது திருவயிற்றிலே சுற்றிக் கொண்டார். தேவர்கள் பூ மாரி பொழிய, ஆதிசேஷன் நற்பதம் பெற்றான்.



வினை தீர்க்கும் விநாயகப் பெருமானுக்கு ஏராளமான கோயில்கள் இருந்தாலும், திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் முக்கூட்டு மலையடிவாரத்திலுள்ள பிரசித்தி விநாயகர் ஆலயத்துக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. எல்லா விநாயகர் கோயில்களிலும் விநாயகருக்கு அருகில் மூஞ்சூறுதான் இருக்கும். ஆனால் இங்கு மிக வித்தியாசமாக நந்தி உள்ளது. இது குறித்த கதை சுவாரஸ்யமானது.

ஒருமுறை ஈஸ்வரன் தென் நாட்டை நோக்கி வந்து கொண்டு இருந்தபோது, அவருடன் ஏழு கன்னிப் பெண்களும், விநாயகப் பெருமானும் வந்து கொண்டிருந்தனர். முக்கூட்டு மலை கிராமத்தின் அருகில் உள்ள வளமான நீர் நிலைகள் நிறைந்த மலை வழியே இவர்கள் வந்தபோது, மலையின் எழிலும், வற்றாத நீர் ஊற்றையும் கண்டு மனம் மயங்கி, ஏழு கன்னிப் பெண்களும் அங்கேயே தங்கப் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள். உடனே ஈஸ்வரன் அந்த ஏழுவருக்குத் துணையாக விநாயகரையும், அவருக்கு உதவி செய்ய ஒரு நந்தியையும் விட்டுச் சென்றுவிட்டார். அன்று ஈஸ்வரன் விட்டுச் சென்ற நந்திதான், இன்று முக்கூட்டு மலை அடிவாரத்தில் உள்ள பிரசித்தி விநாயகர் கோவிலில் கம்பீரமாக உள்ளது. இந்த மலையின் மேல் பகுதியில் அழிக்க முடியாத ஏழு கோடுகளும், வற்றாத நீரூற்றும் இன்றும் உள்ளன.

ஞாயிறு, வெள்ளிக் கிழமைகளில் வெளியூர்களிலிருந்து நிறைய பக்தர்கள் வந்து, இங்கு விநாயகரின் அருள்பெற்றுச் செல்கிறார்கள். தை மாதம் நடக்கும் விழாவில் கேரளா உட்பட மற்ற மாநில பக்தர்களும் இந்த வித்தியாச விநாயகரை வழிபட்டுச் செல்வது தனிச்சிறப்பு.


- டி.எல். ரெட்டி, வேலிடுபட்டி

அருள்வாக்கு

தன் வேலையை இன்னொருத்தனிடம் விட்டுவிட்டு, தான் 'ஊரானுக்குத் தொண்டு செய்கிறேன்' என்று போனால் அது பரிஹாஸந்தான், Fraud (மோசடி)தான். தாயார், தகப்பனார், ஸஹோதரர், பத்னி, புத்ரர் இருந்தால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய ட்யூட்டிகளைச் செய்யாமல், லோகத்துக்கு உபகாரம் செய்கிறேன் என்றால், அது 'ஹிபாக்ரிஸி' (போலி வேஷம்)தான். இப்படியெல்லாம் பண்ணி, வீட்டு மனுஷ்யாள் எடுத்துக் காட்டினால் கோபம் வருகிறது, எரிச்சல் வருகிறது என்றால், பரோபகாரத்தால் இவனுக்கு எந்த அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்றுதான் அர்த்தம். 'எல்லாரிடமும் அன்பாயிருக்கணும், மதுரமாய்ப் பழகணும்' என்பதுதான் தொண்டு செய்கிறவனுக்கு லக்ஷணம். பொதுத் தொண்டு என்பதற்காகவே வீட்டு மனுஷ்யர்களிடம் அன்பு போய், எரிந்து விழுந்து கொண்டிருக்கிறானென்றால், இவன் தொண்டு செய்து என்ன புண்யம்? இவனுக்கு என்ன சித்த சுத்தி ஏற்பட முடியும்? குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்கிற மாதிரி பண்ணிக் கொள்ளக் கூடாது.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.




நீ...

கேட்கிறாயோ இல்லையோ
வழி நெடுக தலையாட்டி
பேசிக் கொண்டு வரும்
உன் பெண் குழந்தையைப் போல
பாவனைகளினூடாக நீ
மறுதலித்துக் கடந்த போதும்
நேசித்து வந்தேன்.
உன் செல்லக் குழந்தையின்
மகத்துவங்களுக்குச்
செவி சாய்க்காதது போலவே
காண மறுத்தாய்
என் காதலின் வர்ணங்களையும்
நீ இழந்திருப்பது
என்னையோ உன் செல்லத்தின்
மொழி அமிழ்தையோ அல்ல
உனக்கான பரவசங்களைத்தான்.

பா.சங்கரநாராயணன்

எனது...



எனது நியாயம் -
உனது மென் தியானங்களால் ஆனது.
எனது அமைதி -
உனது அரவணைப்பின் இழைகளால் ஆனது.
எனது புறாவுக்கும் -
இருப்பவை உனது இறகுகள்.
வெகுதூரம் வெகு உயரம் பறக்கும் நான்,
என்று காண்பேனோ சொல் உன் கண்களை!

பா.சத்தியமோகன்

ஒரு கணம்...

யாருமற்ற
வீட்டுக்குள்ளிருந்து கேட்கும்
தொலைபேசி அழைப்பு.
பூட்டிய வீட்டின்
கதவிடுக்கில் செருகியிருக்கும்
கடிதங்கள்.
முகந் தெரியாமல்
எங்கோ வீறிட்டழும்
குழந்தையின் குரல்.
மணி ஒலித்தபடியே
வேகமாய் எதிர்த் திசையில்
போகும்
தீயணைப்பு வண்டி.
அலுவலக அவசரத்தில்
விரைகிற என்னை
சட்டென நிறுத்தி
எங்கோ, ஏதோவென
பதறத்தான் வைக்கின்றன...
ஒரு கணமேனும்.

மு.முருகேஷ்





பனிக்காலம்

பின்னிரவு கலையும் விடியற்பொழுதில்
திருவெம்பாவை பாடும்
பண்டாரம்
வெறுமனே பாடிவிட்டுத்தான்
போகிறார்
விபூதி வாங்க கதவு திறப்பதில்லை
அநேக வீடுகளில்
பார்வை நேரத்தை நீளச் செய்யும்
தொலைக்காட்சித் தொடர்களால்
இரவுத் தூக்கம் கலைவது கடினம்
வாசல் தெளிக்கையில்
சூரியக் கதிர்கள் முகத்திலறையும்
அரிசிமாவு ஆகாரமென்றுவரும்
எறும்புகளுக்கு ஏமாற்றம்தான்
வண்ணப் பொடிகளும்
கிரஷர்கல் பவுடரும்
வாசல் நிறைக்கும்
பசுஞ்சாணத்தின் மேல் வைக்கப்பட்ட
பூசணிப் பூவை
எங்கேனும் பார்த்தால்
வண்ணப் படமெடுத்து வைப்பது நன்று
ஊர்கூடி ஒரு நாள் பார்க்கலாம்
அப்போதும் இப்போதும்
மாறாமல் கிடைப்பது
மார்கழிப் பனிதான்
மழைக்காக ஏங்கும் கண்களுக்கு.

சி.சுந்தரபாண்டியன்

பிறருடைய பொறாமைபோல் உலகில் ஒருவனுக்குச் சந்தோஷம் தரக்கூடியது வேறொன்றும் கிடையாது. ஸர், திவான் பகதூர், ராவ்பகதூர் முதலிய பட்டங்களைப் பெரிய மனிதர்கள் ஏன் விரும்புகிறார்கள்? மற்றவர்களின் பொறாமையைக் கிளப்புவதற்காகத்தான். இல்லாவிடில் இந்தப் பட்டங்களில் என்ன இருக்கிறது? ஒத்துழையாமை இயக்கத்தின் போது, பலர் இந்தப் பட்டங்களைச் சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டார்கள். ஏன்? ஜனங்கள் அப்பட்டங்களைக் குறித்துப் பொறாமைப்படுவதற்குப் பதிலாக இரக்கப்பட ஆரம்பித்தார்கள். அதுதான் காரணம்.

நீங்கள் ரயில் பிரயாணம் செய்கிறீர்கள். டிக்கட் பரிசோதகர் வந்து பக்கத்திலுள்ள குடியானவர்களிடம் டிக்கட் கேட்கிறார். உங்களை மாத்திரம் கேட்காமல் போகிறார். அப்போது உங்கள் கர்வம் ஓங்கி வளர்ந்து, ரயில் கூரையைக் கூடப் பெயர்த்து விட்டு மேலே கிளம்புவதில்லையா? ''நம்மையெல்லாம் டிக்கட் கேட்க மாட்டார்கள். ஸார்! ஆசாமியைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்வார்கள்'' என்று எத்தனை சந்தோஷத்துடன் சொல்கிறீர்கள்? நம்முடைய சொந்தப் பெருமை மட்டுமல்ல, பிறருடைய சிறப்பைக்கூட நம்முடையதென நினைத்துக் கொண்டு சில சமயம் சந்தோஷமடைகிறோம். "நான் நேரில் பார்த்திருக்கிறேன்" என்ற பெருமைப் பேச்சைக் கேளாதவர் யார்? பார்த்தது மகாராஜாவின் தர்பாராயிருக்கலாம். காங்கிரஸ் மகாசபையாயிருக்கலாம்; பெருங்கலகம் நடந்த இடமாயிருக்கலாம்; ஆகாய விமானமாயிருக்கலாம்; மோட்டார் விபத்தாயிருக்கலாம்; குதிரைப் பந்தயமாக இருக்கலாம். எதுவாயிருந்தாலும், "நான் நேரில் பார்த்தேன்" என்று நீங்கள் பெருமையடித்துக் கொள்ளும் போது, மற்றவர்களுடைய, பொறாமையைக் கிளப்பவே விரும்புகிறீர்களென்பதை ஒப்புக் கொள்ளுவேன்.



நம்முடைய விஷயந்தான் இப்படியென்றால் நம்முடைய மனைவிமார், சகோதரிகள், குழந்தைகள் எல்லாரும் இதே நிலையில் தான் இருக்கிறார்கள். குழந்தை ராமு பள்ளிக் கூடத்திலிருந்து ஓடி வந்து,'' அப்பா! எனக்கு பன்னிரண்டு



பொறாமைப்படு!

மார்க்கு, சீனுவுக்கு கோழி முட்டை!" என்று உற்சாகம் ததும்பச் சொல்கிறான். தனக்கு பன்னிரண்டு மார்க்குக் கிடைத்ததை விடச் சீனு கோழி முட்டை (பூஜ்யம்) வாங்கியதில் தான் அவனுக்கு அதிக சந்தோஷம்.

வீட்டில் சாதாரணமாயிருக்கும் பெண்கள் எங்கேயாவது வெளியில் போவதென்றால், ஒரு மணங்கு நிறையுள்ள பட்டுப் புடைவையும் (இரவல் வாங்கியாவது) அரை மணங்குக்குக் குறையாத நகைகளும் போட்டுக் கொண்டு கிளம்புவதேன்? மற்றப் பெண்களின் பொறாமையைக் கிளப்புவதற்குத் தான். உங்கள் சகோதரியாவது, மனைவியாவது அடுத்த முறை உங்களிடம் வந்து 'கமலம் அசாத்திய ராங்கிக்காரி. அவளுடன் சகவாசமே உதவாது' என்று சொல்லும்போது அதை அப்படியே நம்பிவிட வேண்டாம். உங்கள் சகோதரி அல்லது மனைவியின் புடைவை நகைகளைப் பற்றியோ, படிப்பு பாட்டுத் திறமைகளை பற்றியோ, ஸ்ரீமதி கமலம் பொறாமைக் காட்டவில்லையென்று தெரிந்து கொள்ளுங்கள். கோபத்திற்குக் காரணம் அதுதான்.

கேவலம் மனிதர்களிடம் மட்டுமல்ல! இன்னும் உயரிய இலட்சியங்களுக்காக பிறந்த மிருகங்களிடத்தில் கூட இந்தக் குணம் காணப்படுகின்றது. ஒரு சமயம் பிராணிக் காட்சிச்சாலை ஒன்றுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு குரங்கும் ஒரு யானையும் மிகவும் சிநேகிதமாயிருந்தன. மற்ற குரங்குகள் யானையின் அருகில் போகவும் துணிவதில்லை. ஆனால், அந்த ஒரு குரங்கு மட்டும் யானையின் மேலேறியும், இன்னும் பலவிதமாகவும் விளையாடிக் கொண்டிருந்தது. இதைப் பற்றி அந்த குரங்குக்கிருந்த கர்வத்தைப் பார்த்து நான் மிகவும் வெட்க மடைந்தேன். ஏன் தெரியுமா? நம்மிடந்தான் இந்தத் துர்க்குணமென்றால், நமது மூதாதைகளான குரங்கு குலத்தினிடமுமா இது காணப்பட வேண்டுமென்ற எண்ணம். அந்தப் பொல்லாத குரங்கு யானையின் முதுகில் நின்று கொண்டு, மற்ற குரங்குகளைப் பார்த்துக் கெக்கிலி கொட்டிச் சிரித்த போது, சாக்ஷாத் மனித அவதாரமே காணப்பட்டது. முதல் வகுப்பில் ரயில் பிரயாணம் செய்பவன் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளை பார்ப்பது போலவும், சொந்த மோட்டாரில் போகிறவன் பாதசாரிகளை நோக்குவது போலவும், புதிதாய் திவான் பகதூர் பட்டம் பெற்றவன் மற்ற சாதாரண ஜனத்திரளைப் பார்ப்பது போலவும், அந்த மானங்கெட்ட குரங்கு தன் இனத்தைச் சேர்ந்த மற்றக் குரங்குகளைப் பார்த்தது. நிற்க.

இதுவரைக்கும் கூறியதிலிருந்து விளங்குவதென்ன? மனிதர்களுக்காகட்டும், மிருகங்களுக்காகட்டும், பிறருடைய பொறாமையைப் போல் மகிழ்ச்சி தருவது வேறொன்றுமில்லை. பிறருடைய பொறாமையைக் கிளப்ப முடியாவிடில், அதைப் போல் துயரத் தருவதும் வேறு கிடையாது! ஆகவே உங்களுக்குச் சிநேகிதர்கள் வேண்டுமானால், பொதுவாக உலகில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால், "பொறாமைப்படுங்கள்" என்று சொல்வேன்.

- 'ஏட்டிக்குப் போட்டி' தொகுப்பிலிருந்து, சாரதா பதிப்பகம்



அமரர் கல்கி

17. வாரணாவதப் படலம்

யானையொன்றில் தலைப்பகுதி போலவும், அடுத்து உயர்ந்து எழும் அதன் முதுகுப் பகுதி போலவும் இயற்கையிலேயே அமைந்திருந்தது அந்த மலைப்பகுதி.

மலைப்பகுதியின் நடுவேயிருந்து அருவியொன்றும் சரிந்து அதிவேகத்துடன் கீழ் நோக்கி இறங்கி பாறைகளைத் தாக்கித் தேங்கி, பின் காட்டாறாக வனத்தினூடே பாய்ந்து கொண்டிருந்தது. நீர்ச் சுழல்கள் ஆக்ரோஷமாக மரங்களின் வேர்ப் பகுதியில் தாக்கித் திரும்பிய இடத்தில் எழுந்து நின்றது ஓர் ஆலயம். ஆலயத்தை அடுத்து சிதிலமடைந்த பெரும் மண்டபமொன்றும், இடிந்த தூண்களுடனும், சரிந்த மேற்கூரையுடனும் தெரிந்தது.

அந்த மண்டபத்தின் வெளிப்புறத்தில் தூணொன்றின்மீது சரிந்து அமர்ந்திருந்தான் ஒருவன். பருத்த உடலும், கழுத்தில் ஊசலாடிய மணிகளும், தலையில் சுற்றப்பட்ட தோற்பட்டையில் செருகியிருந்த இறகுகளும், அருகிலிருந்து சிறு வில்லும் அம்புகளும், அவன் வேடுவனென்பதை அறிவித்தன.

''வாரணாவதத்துப் பாண்டவர்கள் போல காட்டில் அலைய வைத்துவிட்டார்களே என்னை'' என்று உரக்கவே சலித்துக் கொண்டான் அந்த வேடுவன். அவன் முகத்தில் எச்சரிக்கை தெரிந்தது. சட்டென்று திரும்பியவன் மண்டபத்தின் இருளடித்த மூலையொன்றுக்குச் சென்று, சிலையொன்றின் பின்னால் மறைந்து கொண்டான். அவன் பதுங்கிய இடத்தில் காலடியில் வழுவழுத்து ஏதோ ஊர்ந்தது. சட்டென்று ஒரு கையால் அதைப்பற்றியவன், தூக்கி மண்டபத்தின் நடுப்பகுதியை நோக்கி வீசினான். நீண்ட பெரும் மலைச் சர்ப்பமொன்று நகர்ந்து வெளிப்புறத்தை நோக்கிச் சென்றது.

சற்று நேரத்தில் புரவிகள் பல மண்டபத்தின் வாயிலில் வந்து நின்றன. முதலில் வந்து இறங்கினான் ராகுலன். அவன் பின்னால் புரவியில் வந்து இறங்கியவன் சற்றுக் குட்டையாகவும், படோடோப உடையும், கழுத்தில் முத்தாரங்களுடனும் தெரிந்தான். மண்டபத்தின் முகப்பை இலேசாகச் சுத்தம் செய்துவிட்டு, விரிப்பொன்றைப் பரப்பி ராகுலனுடன் அமர்ந்தான் அந்த மனிதன். மற்ற வீரர்கள் நின்றும், இருந்தும், மரங்களில் சாய்ந்தும் ராகுலன் கூறப் போவதைக் கேட்கத் தயாராக இருந்தனர்.

'காங்கேயரே, நமது பணிக்கு சாதாரண வீரர் போதாதென்று தெரியுமல்லவா? எத்தனை வீரர்களை அழைத்து வந்திருக்கிறீர்?'' என்றான் ராகுலன்.

காங்கேயன் என்ற அந்த மனிதன் ஒரு கோணல் சிரிப்புச் சிரித்தான். "ராகுலா, உன் அழைப்பும், மகா ராணியின் ஓலையும் எத்தகைய பணியென்பதைப் புரிய வைத்துவிட்டன. என்னுடன் வந்திருக்கும் ஆயிரம் வீரர்கள் தாம் உதயேந்திரபுரியில் கொள்ளை நடத்தியவர்கள். பல்லவ மன்னரே பின்பு வந்து விசாரித்ததாகச் சொன்னார்கள். போதுமா?''

ராகுலனின் திருப்தி முகத்தில் தெரிந்தது.

''சரி, காங்கேயரே, நம் இலக்கு மேல மங்கலத்து ஆயுத சாலையை அழிப்பது. அருகில் ரணதீரப் பாண்டியனின் உத்தமபாளையம் வேறு இருக்கிறது. என்ன செய்யலாமென்று கூறுங்கள்''

காங்கேயன் முகத்தில் சிந்தனை தெரிந்தது. "ராகுலா,



இது சற்று அபாயமான பணி தான். கொங்கு மன்னர் கெந்த தேவராயர் உங்களுக்கு எப்படியும் உதவக் கட்டளையிட்டிருக்கிறார். ரணதீரனுடன் விளையாடுவதும் காலனைச் சீண்டுவதும் ஒன்று. இருந்தாலும்... ஒரு வழி இருக்கிறது."

"என்ன வழி?"

"இந்த மலைத் தொடரை அடுத்து சரிவில் இறங்கினால், மேற்கில் தோகை மரக் கூட்டம், ஊடே மூங்கிலும் புதர்களும்தான். அதன் முடிவிலிருந்து மூன்று காத தூரம் ஆயுத சாலையான மேலமங்கலக் கோட்டை. ஆயுத சாலையை அழிக்க கோட்டைக்குள் சென்று தான் ஆக வேண்டும். அங்கிருந்து மிக அருகில் உத்தமபாளையம் இருக்கிறது. உத்தம பாளையத்தில் காவலுக்கு நிற்பவையே யானைகள்தாம். ஐந்து காத தூரத்தில் எதிரிகள் வரும்போதே அவை அறியக் கூடியவை."

"என்ன, காவலுக்கு யானைகளா?" - வாயைப் பிளந்தான் ராகுலன்.

"ஆம். மேலமங்கலத்துக் கோட்டை வாயில்கள் முதல் ஜாமத் தொடக்கத்திலேயே மூடப்படும். வடக்கு வாயில் மட்டும் திறந்திருக்கும்."

"காரணம்?"

"உள்ளே வடிக்கப்படும் ஆயுதங்களை தினமும் மாலையில் இந்தச் சரிவிலிறங்கும் ஆற்றில் கொண்டு வந்து போட்டு குளிரவைப்பார்கள். திரும்ப எடுத்துச் செல்ல இரண்டாம் ஜாமம் ஆகிவிடும். ஆயுதங்களுடன் அதிக வீரர்கள் வருவ



"கமலா! ரெண்டு நாளுக்கு முன்னாடி தெரு நாய்க்கு சாப்பாடு வெச்சியா?"

"ஆமாம்..! ஏன் கேட்கறீங்க?"

"ரெண்டு நாளா அந்த நாயை தெருப் பக்கமே காணோமேன்னு பார்த்தேன்...!"

- ஆர். பிரசன்னா

இல்லை. அவர்களைத் தாக்கி அழித்தால், திறந்திருக்கும் வடக்கு வாயில் வழியே நுழைந்துவிடலாம். கோட்டையின் நடுவே ஆயுதசாலை இருக்கிறது. வார்ப்புகளையும் அச்சுகளையும் அழித்துவிட்டு, வலப்புறம் நெற்களஞ்சியம் இருக்கிறது. அதற்கும் தீயிட்டு விட்டால், எதிர்ப்பவர்களைக் கொன்றுவிட்டு உடனே திரும்பலாம். உத்தமபாளையத்துக்குச் செய்தி எட்டுமுன் முடித்தால் நாம் எளிதாகத் தப்பலாம்."

காங்கேயனின் திட்டம் ராகுலனாலும், ராஷ்டிர கூட வீரர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதுவரை மற்றொரு மூலையில் பதுங்கிக் கிடந்த மலைச் சர்ப்பம் மீண்டும் சரசரவென்று மண்டபத்தின் உட்புறத்தை நோக்கி விரைந்தது.

மேலமங்கலத்திலிருந்து நான்கு காத தூரத்திலிருந்த உத்தம பாளையத்துக் கோட்டையில், ரணதீரப் பாண்டியனின் எதிரே நின்றிருந்தான் பராந்தகன். ரணதீரனின் கழுகுக் கண்களில் அவநம்பிக்கையும், அலட்சியமும் தெரிந்தன. அவன் பெருமீசையும் அலட்சியமாக அசைந்தது.

"பராந்தகரே, நீங்கள் கூறுவதில் எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ராஷ்டிர கூட ராகுலனாவது, எல்லையைக் கடந்து இத்தனை தூரம் வருவதாவது" என்றான் ரணதீரன்.

பராந்தகன் நிதானமாக விளக்கினான். "கோட்டைத் தலைவரே, படைத் தலைவர் அநிருத்தர் தாக்கப்பட்டதை அறிவீர்களல்லவா?"

"அறிவேன். உங்களைப் பற்றியும் அப்போதுதான் கேள்விப்பட்டேன்."

"இந்தள தேவருக்கு நேர்ந்ததை..."

"என்ன ஆயிற்று இந்தளதேவனுக்கு? எனக்கு ஓலைகள் வந்து சேரவே நான்கு தினங்களாகின்றன. நானும் தெற்கே சென்றிருந்தேன். அவன் என் உறவினன். என்ன நேர்ந்தது?" ரணதீரன் முகத்தில் கவலை தெரிந்தது.

நடந்தவற்றைக் கூறினான் பராந்தகன்.

அதிர்ந்துபோய் நின்றான் ரணதீரப் பாண்டியன். அவனது பெரு மீசை பயங்கரமாகத் துடிக்க ஆரம்பித்தது. "இப்போது நான் சென்று..." என்று வேகத்துடன் சாளரத்தை அடைந்தவன் "யாரங்கே..." என்று கூவினான் பலமாக. அடுத்து அவன் முகத்தில் இலேசான பதற்றமும் தெரிந்தது. "மன்னரின் பட்டத்துப் புரவி நிற்கிறதே..." என்றான் படபடப்புடன்.

"மன்னர் இந்தப் பணிக்காக எனக்கு அதை அளித்தார் ரணதீரரே. முத்திரை மோதிரமும் அளித்தார்" என்றான் பராந்தகன்.

சட்டென்று திரும்பிய ரணதீரனின் விழிகளில் ஒரு கண நேரமே வியப்பு தெரிந்தது. அடுத்த கணம் உணர்ச்சிகளை கட்டுக்குள் நிறுத்தியவன், பராந்தகன் கரத்தில் ஒளிவிட்ட முத்திரை மோதிரத்தைக் கண்டு, ஏதோ மன்னனையே நேரில் கண்டதுபோல் தலை வணங்கினான். அவன் சொற்களும் திடமாக ஒலித்தன.

"பராந்தகரே, இனி உமது வார்த்தைகள் எனக்கு உத்தரவு. கூறுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்?"

பராந்தகன் பதில் கூறுமுன் வாயிலிருந்து வீரன் ஒருவன் வந்து வணங்கினான். "பிரபு, கோட்டை வாயிலில் வேடுவன் ஒருவன் வந்து தங்களைக் காண நிற்கிறான். இதோ நிற்கும் இவர் பெயரையும், ஏதோ புராணக் கதைகளையும் கூறுகிறான்" என்றான்.

பராந்தகன் முகத்தில் முறுவல் தெரிந்தது. "ரணதீரரே, வந்திருப்பவன் எனது நண்பன். மலைப்பகுதியில் ராகுலனின் நடமாட்டம் பற்றி அறிய அனுப்பி

யிருந்தேன்'' என்றான்.

''அவரை அழைத்து வா'' உத்தர விட்டான் ரணதீரன்.

சற்று நேரத்தில் உள்ளே நுழைந்த பகதத்தன் முகத்தில் ஆயாசம் தெரிந்தது. "பராந்தகா, விருஷபர்வ ராஜகுமாரியால் கிணற்றில் சிக்கிக் கொண்ட தேவயானியைப் போல், ஒரு காட்டு மண்டபத்தில் சிக்கிக் கொண்டேன். மலைச்சர்ப்பமொன்று வேறு தொல்லை கொடுத்தது. இதைக் கேள். ராகுலனும், கொங்கு நாட்டுக் காங்கேயனும் ஆயிரம் வீரர்களுடன் மேல மங்கலத்துக்கு வருகிறார்கள்'' எனறவன் திரும்பி ரணதீரனைப் பார்த்து, "இவரது பெருமீசை ஏன் இப்படித் துடிக்கிறது. கடோத்கஜன் கௌரவரைக் கண்டது போல...?'' என்றான்.

"யார் தேவயானி? எந்த ராஜகுமாரி? காட்டுக்குள் கிணறு எங்கு வந்தது? மலைச் சர்ப்பத்துக்கு மீசை ஏது? இவர் என்ன [illegible]ார்?" ரணதீரப் பாண்டியன் பராந்[illegible]யும். பகதத்தனையும் பார்த்துக் கேட்டான் குழப்பத்துடன்.

பராந்தகன் நகைத்தான். "ரணதீரரே, ராகுலனும் கொங்கு நாட்டுக் காங்கேயனும் மேல மங்கலத்தைத் தாக்கி, ஆயுத சாலையை அழிக்க வந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வளவே'' என்றவன் பகதத்தனை நோக்கி "நீ கண்டு வந்ததைச் சொல் பகதத்தா'' என்றான்.

பகதத்தன் விடுவதாக இல்லை. "ஆயுத சாலை மட்டுமல்ல பராந்தகா. வாரணாவதத்தில் அரக்குமாளிகையை எரித்தது போல் நெற்களஞ்சியத்தை..."

"போதும் பகதத்தா. புராணத்தைப் பிறகு சொல். எப்போது ராகுலன் தாக்கப் போகிறான்?"

அடுத்து பகதத்தன் கூறியவற்றையும், ஆயுத சாலையின் நடைமுறைகளையும் கேட்டுக் கொண்ட பராந்தகன், ராகுலனை எதிர் கொள்ள தனது திட்டத்தை விளக்கினான். அவன் விவரிக்க விவரிக்க, ரணதீரப் பாண்டியன் முகத்தில் வியப்பும், பிரமிப்பும் படரத் தொடங்கின.

தன் உபதலைவர்களை அழைத்து மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பித்த ரணதீரப் பாண்டியன். பராந்தகனும், பகதத்தனும் உடன்வர, உத்தம பாளையத்தின் பிரசித்தி பெற்ற போர்க் களிறுகளுடனும், புரவிப் படையுடனும் மேல மங்கலத்தை நோக்கிப் புறப்பட்டான்.

இரவு இரண்டாவது ஜாமத்தை எட்டிவிட்டதால், சற்றே மேலேறி விட்ட வெண்ணிலவு, தோகை மரக் கூட்டங்களுக்கிடையே தன் கதிர்களைப் பாய்ச்சி, அங்கு பதுங்கிக் கிடந்தவர்கள் யாரென்பதைக் கண்டறிய முயன்று கொண்டிருந்தது. புதர்களுக்கிடையே புரவிகளை நிறுத்தி அதிகம் அரவமின்றி, ராகுலனின் உத்தரவுக்காகக் காத்திருந்தனர் ராஷ்டிரகூட, கொங்கு வீரர்கள்.

முன்னால் நின்று தூரத்தில் தெரிந்த மேல மங்கலக் கோட்டையை வெறித்துக் கொண்டிருந்தான் ராகுலன்.

எதிர்பார்த்தபடி வடக்கு வாயிற் கதவுகள் திறந்தே கிடந்தன. ஆற்றிலிருந்து கோட்டை வரை நீண்டு கிடந்த மணல் வெளியில் நான்கைந்து பாண்டிய வீரர்களும், ஆற்றின் கரையில் திரும்பி நின்றிருந்த ஆயுத வண்டிகளின் அருகில் ஐம்பதுக்கும் குறைவான வீரர்களுமே தென்பட்டனர். கோட்டை வாயிலிலும் மேற்புறத்திலும்கூட, அத்தனை காவலர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. வண்டிகளின் அருகிலும், கோட்டை வாயிலின் அருகிலும் எரிந்த பந்தங்களைத் தவிர வேறு பந்தங்களும் எரியவில்லை. கோட்டையின் கிழக்கும்





“கொன்று விட்டேன்
கர்ணனை நான்”
கூறுகின்றான் அர்ஜுனன்.
கேலியாய்ச் சிரிக்கின்றான்
கிருஷ்ண பரமாத்மா!
“வில் விஜயா! வீண் பெருமை ஏன்?
நீயா கொன்றாய் தீரன் கர்ணனை?
அந்தணன் என்று கூறிய பொய்யால்,
அவன் குரு அன்றே அரைக்
கொலை செய்தான்.
அந்தணன் வேடம் போட்டு வந்த
இந்திரன் கவசத்தைப்
பிடுங்கிக் கொன்றான்.
தந்திர வரங்கள் இரண்டைக் கேட்டு
குந்தித் தாயும் அவனைக் கொன்றாள்.
சேராத இடத்தைச் சேர்ந்துவிட்டதால்
பாதை மாறியே ‘பார்வை கெட்டதால்’
அமரர் வாகனம் அவனும் ஏறினான்.
தேரை விட்டு இறங்கி ஓடிய
சாரதி கூடச் சற்றே கொன்றான்.
மண்ணில் சக்கரம் புதையச் செய்தும்,
புண்ணியமெல்லாம் தானம் பெற்றும்,
கண்ணன் நானும்
கடைசியில் கொன்றேன்.
செத்த பாம்பை அடித்துவிட்டு
ஜெய ஜெய என்றே
விஜய சொன்னாய்!”

இளங்குமரன்

மேற்குமான முனைகளில், நிலவொளி ஓரளவிற்கே கதிர்களைப் பாய்ச்சி, அடுத்துத் தொடர்ந்த தோகை மரங்களினூடே விபரீத நிழல்களைக் காட்டிக் கொண்டிருந்தது. வண்டிகளில் ஆயுதங்களை ஏற்றும் ஓசைகளைத் தவிர்த்து, அதிகமாக வேறு ஒலியேதும் கேட்கவில்லை.

மிகச் சாதகமான சூழ்நிலை கண்ணெதிரே விரிந்து கிடந்தாலும், ராகுலன் சித்தத்தில் ஏதோ அபாயம் காத்து நிற்பதான உள்ளுணர்வு தோன்றிக் கொண்டிருந்தது.

தாக்குதலைத் தொடங்க வேண்டிய தருணம் நெருங்கி விட்டதால், ராகுலனை நெருங்கிய காங்கேயன், “ராகுலா, ஏன் தாமதிக்கிறாய். தாக்கத் துவங்கலாமல்லவா?” என்றான்.

“ஆயுதங்களை வண்டிகளில் ஏற்றி காளைப் பூட்டும்போது நாம் தாக்கத் துவங்கலாம்” என்ற ராகுலனின் குரல் வறண்டு கிடந்தது.

சற்று நேரத்தில் ஆற்றின் கரையிலிருந்த வண்டிகளில் காளைகள் பூட்டப்பட்டன. வண்டிகள் கோட்டையை நோக்கி நகரத் தொடங்கியதும், தன் வாளை உயர்த்தி சைகை செய்த ராகுலன், புரவியைப் பாய விட்டுச் சரிவில் இறங்கினான்.

தொடர்ந்து ஆயிரம் புரவிகள் வீரர்களுடன் கனவேகத்தில் சரிவில் இறங்கி, கோட்டையின் வடக்கு வாயிலை நோக்கிப் பாய்ந்தன. ஆற்றிலிறங்கி மணல் வெளியை அடைந்த புரவி வீரர்கள், சிலர் ஆயுத வண்டிகளைச் சூழ்ந்து கொள்ளவும், மீதி வீரர்கள் கோட்டை வாயிலை நோக்கியும் கூச்சல்களுடன் புரவிகளைப் பாய விட்டனர்.

ஆயுத வண்டிகளை நடத்திச் சென்ற பாண்டிய வீரர்கள் நின்று, திரும்பி, புரவிகளில் பெருங் கூச்சலுடன் வருபவர்களைப் பார்த்தனர்.

(தொடரும்)

“இந்தியாவின் தேசிய உணர்ச்சி அழுகை!”

மக்களை முட்டாளாக்கி வருவதாக சின்னத்திரை மீது எப்போதும் ஒரு குற்றச்சாட்டு உண்டு. இந்த விஷயத்தில் மெகா தொடர் இயக்குநர்களுக்குப் பெரும் பங்கு இருக்கிறதா? இல்லையா? என்பது குறித்து, 'கோலங்கள்' தொடரின் இயக்குனர் திருச்செல்வமுடன், மனநல மருத்துவர் ஜெயந்தினி மற்றும் குடும்பத் தலைவி விஜயப்ரியா பேசியதிலிருந்து...



டாக்டர்: ஒரு மனிதனுக்கு பல்வேறு வகையான உணர்ச்சிகள் இருக்கும் பொழுது, அழுகையை மையப்படுத்தியே சீரியல்கள் எடுக்கிறீர்களே... ஏன்?

திருச்செல்வம்: அழுகை என்பது நம் இந்தியாவின் தேசிய உணர்ச்சி. உலகிலேயே இந்தியாவில்தான் பெண்களுக்கான பிரச்னைகள் அதிகம். அதேபோல என்னதான் மெத்தப் படித்தவர்களாக இருந்தாலும் கணவர், குழந்தைகள், மாமியார், மாமனார்... என குடும்ப உறவுகள் மீது பாசமும் மதிப்பும் நிறையவே இருக்கும். இந்த ஃபேமிலி வேல்யூதான் டி.வி. சீரியல்களின் ஆணிவேராக இருக்கிறது.

விஜயப்ரியா: சினிமாவில் சென்டிமெண்ட் காட்சிகள் வைப்பதே பெண்களுக்காகத் தான். இதனால் கணவரை விட, டீ.வி சீரியல்களோடு அதிகமாக குடித்தனம் நடத்தும் பெண்களின் ரசனையை மனத்தில் கொண்டு அழுகைக் காட்சிகள் வருவது தவறில்லைதான். ஆனால் என்ன, சில சமயங்களில் ஓவர் டோஸாகப் போய் வெங்காயத்தை விட டீ.வி சீரியல்களால்தான் அதிகமாக கண்ணீர் வடிக்கிறோம்.



• டாக்டர் ஜெயந்தினி

டாக்டர்: இந்தக் கருத்து உண்மையானது. என்னிடம் கவுன்செலிங்கிற்கு வரும் நோயாளிகள் தங்களது குழந்தைகள் தாமதமாகத் தூங்குகிறார்கள் என்பார்கள். ஏன் என்றால், 'டீ.வி சீரியல்கள் பார்த்து விட்டு இரவு பதினொரு மணிக்குத்தான் படுக்கிறோம்' அதனால்தான், என்பார்கள். ஒரு நாளைக்கு, குறைந்தது முப்பது சீரியல்களாவது ஒளிபரப்புவதால், குடும்பங்களில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை நீங்களெல்லாம் உணர்கிறீர்களா?

திரு: சேனல்கள் நூறுக்கும் அதிகமாக இருக்கின்றன. பத்திரிகைகள் எண்ணிக்கை எண்ணிலடங்காதது. ஆனால் டீ.வி. சீரியல்கள் அதிகமாக இருந்தால் மட்டும் கை நீட்டிக் குற்றம் சாட்டுகிறீர்கள். உண்மையைச் சொல்லப் போனால், தமிழில் பத்து சேனல்கள், முப்பதுக்கும் மேற்பட்ட சீரியல்கள் இருந்தும் மக்களிடம் எடுபட்டது மிகக் குறைவான மெகா தொடர்கள்தான். சரி, கடந்த ஏழு வருடங்களாகத்தானே டீ.வி சீரியல்கள் மீதான மோகம் நம்மிடம் இருக்கிறது? இதனால் அப்படியென்ன சமூகத்தில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது?


டாக்டர்: என்ன, இப்படிச் சொல்றீங்க... இன்றைக்கு உறவினர் வீடுகளுக்குச் செல்லும்பொழுது அவர்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை கவனிப்பதை விட, டீ.வியில்தான் மூழ்கிக்கிடக்கிறார்கள். பண்டிகை தினங்களில் உறவினர்கள் ஒன்று கூடி குதூகலிப்பது என்பது அறவே அற்றுப் போய் அன்றும் டீ.வி முன்பு தவம் கிடக்கிறார்களே...

திரு: உங்கள் கம்ப்ளெயிண்ட் எல்லாம் நகரங்களில் மட்டும்தான் உண்டு. நாங்கள் பழனி பக்கமுள்ள கிராமத்திற்குச் சென்றபோது, யாரிடமிருந்தும் இது போன்ற கம்ப்ளெயிண்ட்கள் வரவேயில்லை. நீங்கள் ஏன் ஒரு நொடியில் சேனலை மாற்றவோ அல்லது டீ.வியை ஆஃப் செய்யவோ கூடாது? நானே என் வீட்டிற்குள் நுழையும் பொழுது என் சீரியலே ஓடிக் கொண்டிருந்தாலும் எனக்கு வேறு வேலை இருந்தால் ஆஃப் செய்து விடுவேன். டீ.வி சீரியல்களால் கிராம மக்கள் எந்த பாதிப்பும் அடைவதில்லை என்பதுதான் நிஜம்.

விஜயப்ரியா: வீட்டில் வேலை இருந்தாலும் டீ.வியை ஆஃப் பண்ணாமல் சமையற்கட்டிற்குள்ளேயே இருந்து அதன் வசனங்களை காதில் வாங்கிக்குவோம். சரி, புது மாதிரியான கதைகளை உங்களால் அமைக்க முடியாதா?

திரு: கிருபானந்த வாரியாரின் கருத்துக்களை விட உலகத்திற்கு வேறு எந்த அறிவுரைகளும் தேவையிருக்காது. அதை சீரியலாகவோ அல்லது வேறு வடிவிலோ சொன்னால், நீங்கள் பார்ப்பீர்களா? பாலு மகேந்திராவின் 'கதை நேரம்' தொடரில், சிறந்த எழுத்தாளர்களின் கதைகளை வைத்து, எவ்வளவு அற்புதமான நாடகங்களை கொடுத்தார்கள்... ஆனால் அது டி.ஆர்.பியில் முதலிடத்திற்கு வரவேயில்லையே... மெகா தொடர்களில் காமெடி சீரியல்கள் பண்ணினால் 'சும்மா கூத்தடிக்கிறார்கள்' என்றுதான் கமெண்ட் அடிப்பார்கள்.

• திருச்செல்வம்



சினிமா மாதிரி டீவியில் பரீட்சார்த்த மான முயற்சிகளுக்கு வெற்றி கிடைப்பதில்லை.

விஜயப்ரியா: குடும்பத்தோடு உட்கார்ந்துதான் சீரியல்கள் பார்க்கிறோம். ஆனால் இதிலும் சினிமாவைப் போல முறைகேடான உறவுகளைக் காண்பிக்கிறீர்கள். ஏன் இப்படி?

திரு: சீரியல்களுக்கு மட்டுமல்ல, டீவிக்கே சென்சார் என்பதே கிடையாது. என் நாடகத்தில் அப்படிச் செய்யவில்லை. குடும்பத்தோடு பார்க்கிறேன் என்று சொல்கிறீர்கள்... தர்ம சங்கடமாக இருக்கும்போது, அந்த சீரியலைத் தொடர்ந்து பார்ப்பதைத் தவிர்ப்பதே நல்லது.

டாக்டர்: மீடியாவின் தாக்கம் அதிகமாக உள்ள சமூகம் நம்முடையது. நீங்கள் சொல்வது போல் தர்மசங்கடமான கணத்தில் டீவியை அணைக்கும் அல்லது சேனலை மாற்றும் மனோபலம் எல்லோருக்கும் இராது. இந்த பலவீனத்தைத் தானே சீரியல்கள் குறிவைக்கின்றன! அழுகிற கதாபாத்திரத்தில் தன்னையே பொருத்திப் பார்த்துச் சுயபச்சாதாபத்தில் உழலும் பெண் இயல்பைப் பயன்படுத்திக் கொள்கின்றன... முறைகேடான உறவுகளும், நெகடிவ்வான கேரக்டர்களும் சரி, டீவி வழியாகக் காண்பிக்கப்படுவது தறிகெட்டு ஓடும் மன ஓட்டங்களுக்கு வழிவகுக்கும்.

விஜயப்ரியா: ஆமாம் டாக்டர் மாமியார் மீது நல்ல மதிப்பு இருந்தாலும், டீவி சீரியல்கள் பார்த்து, 'ஓ... இப்படி கூட ஒரு மாமியார் நடந்து கொள்வாரா?' என்று சிறு சந்தேகத்தை வரவழைத்து விடுகிறார்கள்.

திரு: உலகத்தில் பின்லேடன், சதாம் உசேன், வீரப்பன் போன்ற நெகடிவ் கேரக்டர்களுக்குத்தானே தாக்கம் அதிகம்? அதுபோலத்தான் பிரச்னைகள் இல்லாமல் படங்களே இல்லை. ஹாலிவுட்டில் உளவியல் ரீதியான கதைகளை அற்புதமாகக் கையாள்கிறார்கள். ஆனால் இங்கு அப்படிப் பண்ண முடியாது. மக்கள் அன்றாடம் சந்தித்த பிரச்னைகளை, நெகடிவ் கேரக்டர்களை சீரியல்களில் நாங்கள் காண்பித்து தான் ஆக வேண்டும்.



• விஜயப்ரியா

டாக்டர்: அரை மணி நேரத்தைச் சாதாரணமாகக் கருதி விட முடியாது. எப்பொழுது தான் நீங்கள் நல்ல கதைகளோடு வந்து அந்த அரைமணி நேரத்தையும் மூளையை மழுங்கடிக்காத வாறு பார்த்துக் கொள்ளப் போகிறீர்கள்?

திரு: சரியாகக் கேட்டீர்கள். எனக்கு மட்டுமல்ல, எந்த டீவி. சீரியல் டைரக்டர்களுக்கும் கண்ணீரும் கம்பலையுமான டீவி சீரியல்கள் எடுக்கப் பிடிக்கவில்லை தான். என்ன செய்யச் சொல்கிறீர்கள்? சென்னையில் ஒரு ரசனை, செங்கல்பட்டு தாண்டினால் பல விஷயங்கள் அப்படியே மாறுபடுகின்றன.

ஈரானில் குழந்தைகளை மையமாக வைத்து அபாரமாகப் படம் எடுக்கிறார்கள். கேரளாவிலும் எம்.டி. வாசுதேவன் நாயர் போன்ற சிறந்த எழுத்தாளர்களின் கதைகள் படங்களாக உருமாறுகின்றன. ஏன் இங்கு கூட இருபெரும் நிறுவனங்கள் 'பொன்னியின் செல்வனை' சீரியலாக எடுக்க முனைந்தார்கள். ஆனால் ஐந்து கோடி பட்ஜெட்டில் எடுக்கும் பொழுது, மக்களின் ரசனையைக் கண்டு பயந்து ஒதுங்கியே விட்டார்கள்.

சினிமா, டீவி போன்ற ஊடகங்களின் தாக்கம் அதிகம் உள்ள நம் சமூகத்தில், பள்ளிகளில் சினிமா, டீவி பற்றிய அறிவு கிடைத்தால் நாளடைவில் சிந்தனை, ரசனைகள் உயர்ந்து, புதிய முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். பழையன கழியும்.

மக்களின் ரசனைகள் இப்படி மேம்பட்டால் தான், கதைகளிலும் எங்களால் தைரியமாக மாற்றம் கொண்டு வர முடியும். அதுவரை அழுகை சீரியல்கள் தொடரும்!

• ச.ந.கண்ணன்

படங்கள் : ஸ்ரீஹரி

"உளழலுக்குக் காரணம் முழுநேர அரசியல்வாதிகள்!"

அண்மையில் நடந்த அமெரிக்கத் தேர்தலுக்கான பார்வையாளராக, இந்தியாவின் சார்பில் அமெரிக்காவுக்குச் சென்று வந்திருக்கிறார் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம். அது குறித்தும், காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையின் இன்றைய நிலை குறித்தும் அவரிடம் பேசினோம்.

அமெரிக்காவுக்கு, தேர்தல் பார்வையாளராகச் சென்று வந்துள்ளீர்கள். என்ன உணர்ந்தீர்கள்? அதனை இங்கு பயன்படுத்த வாய்ப்புண்டா?

"அந்நாட்டு அரசின் வெளியுறவுத் துறையின் கீழ் இயங்கும் ACYPL என்ற நிறுவனம் சார்பாக, இந்தியாவிலிருந்து நான் உட்பட மூவர் அழைக்கப்பட்டோம். நான் காங்கிரஸ் சார்பில் சென்றேன். வளரும் இளம் அரசியல் தலைவர்களுக்கு, உலக அரசியல் பற்றி விளக்குவதற்காகச் செயல்படுவதுதான் அந்நிறுவனத்தின் நோக்கம். அங்கு பத்து நாட்கள் தங்கி, சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தல் முறை, பிரசார முறை, வாக்களிக்கும் முறை, வாக்கு எண்ணும் முறை உள்ளிட்ட அனைத்தையும் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிட்டியது. அதற்காக நான் தெரிந்து கொண்டவற்றையெல்லாம் இங்கு பயன்படுத்த முடியாது. காரணம், அவை இங்கு பொருந்தாது."

நமக்கும் அமெரிக்காவுக்கும் தேர்தல் முறையில் என்ன வித்தியாசம்?

"இருவருக்குமிடையே வேறுபாடுகளைத் தாண்டி அதிக அளவில் ஒற்றுமை உள்ளது. குறிப்பாக காரசார பிரசாரம், காழ்ப்புணர்வு அரசியல், உணர்ச்சியைத் தூண்டும் பேச்சு, அவதூறு நோட்டீஸ், ஜெயிப்பதற்கு எந்த யுக்தியையும் கையாளத் துணிவது என்று நிறைய உண்டு. என்ன! அங்கு அடிதடி நடப்பதில்லை. ஆனால் தேர்தல் நடத்தப்படும் முறையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. அதை வைத்துப் பார்க்கும் போது அமெரிக்காவைக் காட்டிலும் நமது முறையே சிறந்தது."

காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை காங்கிரஸுடன் இணைவது இழுத்துக் கொண்டே போகிறதே...?

"எங்கள் பேரவை காங்கிரஸுடன் முழுமனதுடன் இணைவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதன்படி நாங்கள் மனரீதியாக காங்கிரஸுடன் இணைந்து விட்டோம். ஆனால், அதற்கான விழா இன்னும் நடைபெறவில்லை. சோனியா காந்தி பிஸியாக இருப்பதால், அதற்கான தேதி இன்னும் கிடைக்கவில்லை."

அப்படிச் சொல்லப்பட்டாலும் உண்மையில் இளைஞர் காங்கிரஸில் உங்களுக்காகப் பதவி கோரப்பட்டது. அதற்கு சமிக்ஞை கிடைக்காததுதான் இந்தத் தாமதத்துக்குக் காரணம் என்கிறார்களே...?

"தவறு. எந்தவொரு தனி மனிதனுக்காகவும் எங்கள் சார்பில் எவ்வித இட ஒதுக்கீடோ, முன் எதிர்பார்ப்போ, கோரிக்கையோ முன் வைக்கப்படவில்லை. இதைத்தான் நாங்கள் நிபந்

தனையற்று இணைகிறோம் என்கிறோம். கோஷ்டியாக இணைவது - பின்னர் கோட்டா கேட்பது என்பதில் எங்களுக்கு உடன்பாடு கிடையாது. ஆகவே நாங்கள் இணைவதில் எவ்விதத் தடையோ, கருத்து வேறுபாடோ இல்லை.''

மனரீதியாக இணைந்துவிட்டீர்கள். சரி, காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை செயல்படுகிறதா இல்லையா?

''நிச்சயமாக நன்றாகவே செயல்படுகிறது. தொண்டர்களுக்குக் கடிதம் எழுதப்படுகிறது. பொதுக் கூட்டங்கள், விழாக்கள் நடத்தப்படுகின்றன. அவ்விழாவில் காங்கிரஸ்காரர்களும் கலந்து கொள்கிறார்கள். நாங்களும் அவர்கள் நடத்தும் விழாக்களில் கலந்து கொள்கிறோம். கட்சியின் வளர்ச்சிப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றனவே.''



அப்படியானால் நீங்கள் காங்கிரஸின் கூட்டணிக் கட்சி என்றுதானே சொல்ல முடியும். எப்படி காங்கிரஸ் என்று சொல்ல முடியும்?

''இணைப்பு நடைபெறும் வரை அப்படித்தான் சொல்ல முடியும். அதுவரை கட்சியின் வளர்ச்சிப் பணிகள் தொடரும்.''

உங்கள் பொதுச் செயலாளர் இன்னொரு இயக்கத்தில் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினராகி விட்டார். ஆனாலும் உங்கள் கட்சி இயங்குகிறது என்கிறீர்கள். அப்படியானால் கட்சியை இயக்குவது யார்?

''பொதுச் செயலாளர் இல்லைதான். ஆனால் கட்சிக்குச் செயற்குழு இருக்கிறதே... அதில் வள்ளல் பெருமாள் உள்ளிட்ட பலர் அங்கம் வகிக்கிறார்கள். அவர்களை உள்ளடக்கிய குழுதான் தற்போது கட்சியை இயக்கி வருகிறது.

இதில் உங்களுடைய பங்கு என்ன?

''நான் செயற்குழு உறுப்பினர். கட்சிக் கூட்டங்களில் பேசுகிறேன். தொண்டர்களுக்கு ஊக்கமூட்டுகிறேன். அவர்களது சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொள்கிறேன்.

–கார்த்தி சிதம்பரம்

நீங்கள் ஏன் முழு வீச்சில் ஈடுபடாமல், பார்ட்-டைமாக அரசியலில் பங்கெடுக்கிறீர்கள்?

"முழு நேர அரசியல்வாதி எப்படி தனது குடும்பத்தை நடத்த முடியும்? அடிக்கடி டெல்லி செல்கிறார்களே - அதற்கான பணத்தை யார் ஏற்றுக் கொள்வது? நாம்தானே செய்து கொள்ள வேண்டும். அப்போது தொழில் செய்யாமல் சும்மா இருந்தால் எப்படி பணம் வரும்? இந்நிலையில் தான் ஊழல் செய்ய எண்ணம் வரும். ஆகவே எனக்கு முழுநேர அரசியல்வாதி என்ற கான்செப்டில் உடன்பாடே கிடையாது. இன்னும் சொல்லப் போனால் கட்டப் பஞ்சாயத்து, அடிதடி, ஊழல் இவற்றுக் கெல்லாம் காரணமே முழுநேர அரசியல்வாதிகள்தாம். நான் பகுதி நேர அரசியல்வாதி - முழுநேர தொழில் நிறுவனம் நடத்துபவன். அவ்வளவு தான்."



அடுத்தது உங்களுடைய நோக்கம் என்ன?

"எதிர்காலத்தில் பொதுத் துறையில் திட்டங்கள் வகுக்கவும், அவற்றை அமல் படுத்தவும் விருப்பம் உண்டு. அதற்குத் தகுந்த வாய்ப்புகள் கௌரவ பதவி மூலமாகவோ, தேர்தலில் வென்றோ, அல்லது இயக்க ரீதியாகவோ கிடைத்தால் ஏற்றுக்கொள்ளத் தயார்."

இதை மக்களுக்கு வைக்கும் கோரிக்கையாக எடுத்துக்கொள்ளலாமா, அல்லது கட்சித் தலைமைக்கு வைக்கும் கோரிக்கையாக எடுத்துக் கொள்ளலாமா?

(பெரிதாய் யோசித்துவிட்டு) "எதிர் காலத்துக்கு வைக்கும் கோரிக்கை!"

வாரிசு அரசியல் பற்றி...

"ரோஹன் கவாஸ்கர், கவாஸ்கரின் மகன் என்பதற்காக அவருக்கு யாரும் எளிதாகப் பந்து வீசப் போவதில்லை. அவுட் ஆக்காமல் விடப் போவதில்லை அவருடைய திறமையை வெளிப்படுத்தினால் மட்டுமே வெற்றி. அதற்கு கவாஸ்கர் பெயர் ஒரு அறிமுகம், அவ்வளவே. அதைப் போல ப.சிதம்பரத்தின் மகன் என்பது எனக்கு அறிமுகம். அது மட்டுமே வெற்றிக்கு உதவாது. எனது அணுகுமுறையும், செயல்பாடுகளும்தான் என்னை உயர்த்தும். அதே சமயம் சிதம்பரத்தின் மகன் என்பதால், எனக்குப் பலன்கள் கிடைத்தால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்ப்பு வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். ஆகவே வாரிசு அரசியல் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று தான்."

தனது தந்தைக்கோ, குடும்பத்தினருக்கோ இருக்கும் செல்வாக்கைக் கொண்டு சிலர் ஓவர் நைட்டில் உச்சத்துக்கு சென்று விடுகிறார்களே...?

"எனது தந்தை என்னை ஊக்கப் படுத்தவுமில்லை, தடுக்கவுமில்லை. நான் ஓவர் நைட்டில் சக்ஸஸ் ஆக மாட்டேன். எனக்கு அந்த நம்பிக்கையே சுத்தமாகக் கிடையாது. நிதானமாகவே வந்தேன் - நிதானமாகவே முன்னேறுவேன்."

ரஜினிகாந்த் சென்ற தேர்தலில் உங்களுக்கு எதிரான நிலையெடுத்தது வருத்தமளித்ததா?

இல்லவே இல்லை. அது அன்றைய சூழ்நிலை. இருந்தாலும், அவரது தோல்வியும் நிரந்தரமல்ல! எங்களது வெற்றியும் நிரந்தரமல்ல!

- இரா. முத்துக்குமார்

படங்கள் : **ராஜன்**



• ஜெயந்தி


உதவிக்கு வாங்க!

சேலம் அழகாபுரம் பகுதியில் டூ வீலர் ஓட்டும் பெண்களுக்கு யாரைத் தெரிகிறதோ இல்லையோ... ஜெயந்தியைத் தெரிந்திருக்கும். ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு டூ வீலர் ஓட்டக் கற்றுத் தரும் இவருக்கு, இன்னொரு முகம் உண்டு. அது சேவை செய்வது. 'டூ வீலர் ஜெயந்தி'யாய் அறிமுகமாகி, இன்று சத்தமில்லாமல் பல சாதனைகளைச் செய்து உயரத்தை எட்டிப்பிடித்திருக்கிறார் இந்தப் பெண்மணி. ஏழை மாணவர்களுக்கு படிப்புக்கு உதவுவது, விதவைகள் அரசுப் பணம் பெறப் பாடுபடுவது, கண் பார்வைக் கோளாறால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு மருத்துவ உதவி அளிப்பது, என்று பலதரப்பட்ட பணிகளைச் செய்து வருகிறார். எப்படி இதெல்லாம் சாத்தியமாயிற்று?

"சின்ன வயசுல என்னால கல்லூரிப் படிப்பை முடிக்க முடியாமப் போயிடுச்சு. அந்த ஏக்கமோ என்னமோ, மெல்ல மெல்ல என்னாலான உதவிகளை கஷ்டப்படறவங்களுக்குச் செய்ய ஆரம்பிச்சுட்டேன்' என்று சிரிக்கிறார் ஜெயந்தி.

தனியொரு நபராக டூ வீலர் ஓட்ட சொல்லித் தரும் பணியையும், சேவையையும் எப்படிச் செய்ய முடிகிறது?

"எனக்குப் பக்கபலமா என் கணவர் இருக்கிறார். எல்லா ஆண்களின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பார். ஆனால் என் விஷயத்தில் ஒரு மாறுதலாக, என் கணவர் இருக்கிறார். அவர் இல்லாவிட்டால் சேவைகளில் நான் சோபித்திருக்க முடியாது. எனக்கு எல்லா விதத்திலும் அவர் அனுசரணையாக இருக்கிறார். அவர் வித்தியாசமான சிந்தனையுடையவர். உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன்... தற்போது சென்னையில் படித்து வரும் என் மகனுக்கு சமைத்துப் போடும் பெண்மணியின் பிள்ளையின் படிப்புச் செலவை, என் மகன் வேலைக்குப் போனதும் ஏத்துக்கணும்னு என் கணவர் சொல்லியிருக்கார்னா, அவர் மனதைப் புரிந்து கொள்ளலாம்."



• தனஞ்செயன்

ஜெயந்தி சொல்லச் சொல்ல, அதற்கும் தனக்கும் சம்பந்தமில்லாதவர் போல் அடக்கமாக நிற்கிறார் கணவர் தனஞ்செயன்.

ஜெயந்தியின் சேவையைப் பாராட்டி சென்னையில் இயங்கும் 'பாலம்' அமைப்பு, 2003ம் ஆண்டு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்திருக்கிறது.

"கால் ஊனமுற்றதைக் காரணம் காட்டி, நல்ல மதிப்பெண் இருந்தும் ஒரு பெண்ணுக்கு மகளிர் கல்லூரி ஒன்றில் சீட் கொடுக்க மறுத்து விட்டனர். நேரே சென்று, மூன்று நாட்கள் போராடின பிறகே அந்தப் பெண்ணுக்கு சீட் கொடுத்தார்கள். இப்படி மகளிருக்கும் மற்றவர்களுக்கும் இழைக்கப்படும் அநீதிகள், இந்த நாட்டில் அதிகம். அவற்றில் சிலவற்றையாவது களைய வேண்டும். அப்போதுதான் நான் மனுஷியாகப் பிறந்ததன் அர்த்தம்."

உணர்ச்சிகரமாக ஜெயந்தி பேசப் பேசவே, அவரின் வீட்டு வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது.

"யாரோ உதவிக்குத்தான் வந்திருக்காங்கன்னு நினைக்கிறேன்..." என்றபடி ஓடோடுகிறார்.

ம்... அதுதான் ஜெயந்தி!

- சாந்தி சர்மா

நந்தினி நந்தினி எந்தன் சரிகமபதநி...



நந்தினிக்கு எழுதியிருந்த கடிதத்தை, மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்தேன். இன்னும் இரண்டு மணி நேரத்தில், இந்த ஊரிலிருந்து புறப்படப் போகிறேன். அதற்குள் நந்தினியிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்து, அவள் பதிலையும் பெற்றாக வேண்டும். "கடவுளே..." என்று நாற்காலியில் நன்கு சாய்ந்து அமர்ந்தேன்.

என் வாழ்க்கையை, ஏதாவது ஒரு கணத்தில், அப்படியே நிறுத்தி வைத்துக் கொள்ளும் சக்தி எனக்கு இருந்திருந்தால், நந்தினியை முதன் முதலாகப் பார்த்த... அந்த அழகான நிமிடங்களில் நிறுத்தியிருப்பேன்.

தமிழ்நாட்டில் எம்.எஸ்ஸி. அக்ரிகல்ச்சர் படித்து முடித்த ஆறு மாதங்கள் கழித்து மத்திய அரசுப் பணி கிடைத்தது. திருவனந்தபுரத்தில் போஸ்டிங்.

தம்பானூரில் அறையெடுத்துத் தங்கினேன். மலையாளிகள், தமிழர்களை 'பாண்டி ஆள்' என்று குறிப்பிட்டார்கள். பிடிவாதமாக ராதாவையும், சீதாவையும் ராதே... சீதே... என்று விளித்தார்கள். ஒரு வருட காலத்தில், காங்கிரஸின் 'ஐ' குரூப், 'ஏ' குரூப் தகராறுகள், திடீர் திடீரென்று வெடிக்கும் கம்யூனிஸ்ட் போராட்டங்கள், அடிக்கடி 'அய்யே...' என்று கூறும் சேர நன்னாட்டிளம் பெண்கள்... எல்லாம் பழக்கமானது.

மலையாளம் பேசவும், எழுதப் படிக்கவும் கற்றுக் கொண்டு, திருவனந்தபுரத்தில் ஒரு மாதிரியாக செட்டிலான சமயத்தில், கேரளாவிலேயே இந்த சிறிய ஊரிலிருந்த ஆராய்ச்சி நிலையத்துக்கு மாற்றினார்கள். தங்குவதற்கு லாட்ஜ் வசதி கூட இல்லாத சிறிய ஊர். எனது திருவனந்தபுரம் நிலைய டைரக்டர் அச்சுதன் நாயர், நான் தங்கிக் கொள்ள, இந்த ஊரிலிருந்த தமது உறவினர் கிருஷ்ணன் நாயருக்கு கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார்.


இரண்டு சூட்கேஸ்களுடன் நான் கிருஷ்ணன் நாயர் வீட்டுக்கு வந்த பொழுது, மாலை இருட்டிக் கொண்டிருந்தது.

அந்த காலத்துப் பெரிய கேரள பாணி வீடு. முல்லைப் பூ பந்தலிட்டிருந்த முன் முற்றத்தைக் கடந்து, நான் படியேறிய நிமிடத்தில், "தீபம்" என்று ஒரு பெண் குரல் கேட்க, நிமிர்ந்த நான் அசந்து போனேன்.

இருட்டுக்கு நடுவே, ஏற்றி வைத்திருந்த விளக்கைக் கையில் பிடித்தபடி, அந்த விளக்கின் மஞ்சள் ஒளி முகத்தில் பிரகாசிக்க... ஒரு தேவதை போல் நின்று கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

எனது காலடிச் சத்தம் கேட்டு நிமிர்ந்தவள், இருட்டில் திடீரென்று என்னைப் பார்த்தவுடன் பயந்து போனாள்.

"என் பேரு சந்திரசேகர். திருவனந்த





புரத்துலயிருந்து அச்சுதன் நாயர் லெட்டர் கொடுத்துவிட்டிருக்காரு" என்றேன் மலையாளத்தில்.

விளக்கைக் கீழே வைத்துவிட்டு, "அச்சா..." என்று அழைத்தபடி உள்ளே சென்றாள்.

அச்சுதன் நாயரின் கடிதத்துக்கு நல்ல மரியாதை. கடிதத்தைப் படித்தவுடனேயே, கிருஷ்ணன் நாயர் மாடி அறையை ஒழித்துக் கொடுத்து, தங்கிகொள்ளச் சொன்னார். கிருஷ்ணன் நாயர் அழைத்ததிலிருந்து, அந்தப் பெண்ணின் பெயர் நந்தினி என்று தெரிந்து கொண்டேன்.

இரண்டு நாட்கள் கழித்து, நந்தினியை பகவதி கோயிலில் பார்த்தேன்.

கண்களை மூடிக் கொண்டு, உதடுகளை இலேசாக அசைத்து, ஏதோ தீவிரமாக வேண்டிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று நான் அருகில் போனவுடன், நந்தினியின் முகத்தில் பதற்றம், பயம், வெட்கம், தயக்கம்... என்று எல்லாம் சேர்ந்து கலவையாக ஒரு உணர்ச்சி. தயக்கத்துடன் "என்ன?" என்றாள்.

"ரொம்ப நேரம் முணுமுணுன்னு வேண்டிக்கிட்டிருந்தீங்க..." என்றேன்.

"அய்யே... சார் பாத்தீங்களா?" என்று அழகாக வெட்கப்பட்டாள் நந்தினி.

"ம்... அப்படி என்ன வேண்டுதல்?"

பேசியபடி இருவரும் கோயிலை விட்டு வெளியே வந்தோம். கோயிலுக்கு இடது பக்கம், கேரளாவின் தனி அழகான காயல், காயலில் சென்று கொண்டிருந்த படகுகள். வலது பக்கம் தென்னந் தோப்புகள். நடுவே சென்ற பாதையில் இருவரும் நடந்தோம்.

ஜி.ஆர்.சுரேந்தர்நாத்



"எங்கப்பாவுக்கு ஆஸ்துமா சரியா கணும்னு வேண்டிக்கிட்டேன்" என்றாள்.

"அப்புறம்..."

"அம்மாவுக்கு முழங்கால் வலி சரியா கணும்."

"ம்... அப்புறம்."

"நம்ம தெருவுல இருக்குற பாலாமணி சேச்சிக்கு நல்லபடியா குழந்தை பிறக் கணும்னு வேண்டிக்கிட்டேன்."

"உங்களுக்கொண்ணும் வேண்டிக் கலையா?" என்றேன்.

"எனக்கென்ன வேண்டிக்கணும்?" என்று கேட்ட வினாடியில், சட்டென்று எனக்கு நந்தினியைப் பிடித்துப் போனது.

இரண்டு வாரங்கள் கழித்து, வீட்டுக்குப் பின்னாலிருந்த, இல்லத்துக் குளத்தில் குளித்துவிட்டு, நான் தலை துவட்டிக் கொண்டிருந்தபோது நந்தினி எதிர்ப்பட்டாள்.

கேட்க வேண்டுமென்று காத்திருந்தது போல், "நீங்க கவிதையெல்லாம் எழுது வீங்களா?" என்றாள் சட்டென்று.

"அய்யே... உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றேன்.

"தோட்டத்துல, அரைகுறையா எழுதி ஒரு கவிதை பேப்பர் கெடந்தது."

"நானே இப்பதான் மலையாளம் கத்துகிட்டேன். முன்னாடி தமிழ்ல எழுதுவேன். சரி மலையாளத்துல எழுதிப் பார்க்கலாமேன்னு தோணிச்சு. சரியா வரல. கசக்கிப் போட்டுட்டேன்."

"நல்லா எழுதியிருந்தீங்க. நான் எர்ணாகுளம் விக்டோரியா காலேஜ்ல தான் படிச்சேன். எங்க மாமா வீட்டுல தான் தங்கிப் படிச்சேன். அப்ப நான் ஃபீல் பண்ணினதெல்லாம், அப்படியே உங்க கவிதைல இருந்துச்சு. ஏன் முழுசா முடிக்கல?" என்றாள் நந்தினி.

"என்னமோ தெரியல. சரியா முடிக்க முடியல" என்றேன் உற்சாகத்துடன்.

"முடிச்சு 'கலாகௌமுதி'க்கு அனுப்புங்க. நிச்சயமா பிரசுரிப்பாங்க."

"பாக்கலாம். காலேஜ்ல என்ன டிகிரி படிச்சீங்க?" என்றேன்.

"பி.காம்.," என்றாள்.

"பி.காம். படிச்சுட்டு வேலைக்கு ஏதும் போகலையா?"என்றேன்.

"போகணும்னுதான் ஆசை. அப்பாவும் சரின்னுட்டாரு. எங்க மாமா வீட்டுல நான் வேலைக்குப் போகக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க."

"அவங்க ஏன் வேண்டாம்னு சொல்லணும்?"

நந்தினி தலையைக் குனிந்து கொண்டு, "அவங்க பையனுக்குத்தான் என்ன கல்யாணம் பண்ணி வைக்கிறதா பெரியவங்க முடிவு பண்ணியிருக்காங்க" என்று கூறியவுடன், ஏனோ தெரியவில்லை, மனதிற்குள் இலேசான அதிர்ச்சி, ஏமாற்றம்.

அந்த குளத்தங்கரை சந்திப்பிற்கு பிறகு, நந்தினியின் நடவடிக்கைகளில் வித்தியாசம் தெரிய ஆரம்பித்தது. என்னைக் கடந்து செல்லும் பொழுதெல்லாம், ஒரு பிரியமான பார்வையை வீசிவிட்டுச் சென்றாள்.

மாமா பையனை திருமணம் செய்யப் போவதாகச் சொல்லிவிட்டு, என்னை ஏன் இப்படிப் பார்க்க வேண்டும்? ஒரு வேளை அவனைப் பிடிக்காதோ? ஒரு நாள் கேட்டுவிட வேண்டும்.

கேட்டேன்.

"உங்க மாமா பையனைப் பிடிக்குமா நந்தினி?"

"பிடிக்காது."

"ஏன்?" என்றேன் மெலிதான சந்தோஷத்துடன்.

"ரொம்ப திமிர் பிடிச்சவன். முரட்டுத்தனம் அதிகம். என்னை வேலைக்கு அனுப்பக் கூடாதுன்னு அவன்தான் சொல்லி வச்சுருக்கான்."

"பிடிக்கலன்னு வீட்டுல சொல்ல

வேண்டியதுதானே?"

"அதெப்படி சொல்ல முடியும்? ஒரே பொண்ணுன்னு என் மேல உயிரையே வச்சுருக்காங்க. அவங்கள மீறி எதையும் செய்யமாட்டேன்னு பயங்கர நம்பிக்கை."

நந்தினிக்கு தனது மாமா பையனைப் பிடிக்காது என்று தெரிந்தவுடன், என் மனதினுள் அடங்கிக்கிடந்த ஆசை, மீண்டும் துளிர்க்க ஆரம்பித்தது.

நந்தினியிடம் எனது காதலைச் சொல்லி விடுவது என்று முடிவெடுத்தேன். ஆனால் எனது சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டிய கடமையும், நந்தினியின் மாமா பையன் விவகாரமும், சொல்ல விடாமல் தடுத்துக் கொண்டிருந்தன.

நாளாக, நாளாக எங்களிடையே நெருக்கம் வளர்ந்தது.

பச்சை நெல் வாசனையடிக்கும் வயல் வரப்பில் நடந்தபடி... நந்தினியின் வியர்த்துப் போயிருக்கும் உள்ளங்கையிலிருந்து, பகவதி கோயில் குங்குமத்தை எடுத்தபடி... பளபளவென்று சிவப்புத் தரையிட்டிருக்கும் வராந்தாவில் ஒருவர் நிழலை ஒருவர் பார்த்தபடி... என்று நிறையப் பேசினோம்.

பேசிப் பேசி, இருவரும் ஏறத்தாழ ஒரு விளிம்பு நிலையிலிருந்தோம்.

இந்தச் சூழ்நிலையில் தான் இடி போல அந்தச் செய்தி வந்து சேர்ந்தது. வேலைக்குச் சேர்ந்த புதிதில், தமிழ் நாட்டுக்கு மாற்றல் கேட்டு விண்ணப்பித்திருந்தேன். அந்த டிரான்ஸ்ஃபர் இப்பொழுது வந்தது. அதுவும் என் சொந்த ஊரான தஞ்சாவூருக்கே மாற்றலாகியிருந்தது.

ரிலீவிங் ஆர்டரை வாங்கிக் கொண்டு நான் வீட்டுக்குத் திரும்பியபொழுது, நந்தினி வராந்தாவில் விளக்கேற்றிக் கொண்டிருந்தாள்.

சிரிப்புடன் என்னை வரவேற்ற நந்தினியிடம், "என்னை டிரான்ஸ்ஃபர் பண்ணிட்டாங்க. நாளை மறுநாளுக்குள்ள தஞ்சாவூர்ல ஜாயின் பண்ணணும். இங்க ரிலீவ் பண்ணிட்டாங்க. நாளைக்குக் காலைல, பத்து மணி பஸ்ஸுல கிளம்புறேன்" என்றேன் வேதனையுடன்.

நந்தினியின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது. சட்டென்று திரும்பி, வேகமாக உள்ளே ஓடிவிட்டாள்.



இதோ... தயாராகிவிட்டேன். மணியைப் பார்த்தேன். எட்டரை. பத்து மணிக்கு பஸ். அதற்குள் நந்தினியைப் பார்த்து கடிதத்தைக் கொடுக்க வேண்டும். மேலும், கீழுமாக இரண்டு, மூன்று முறை சென்று பார்த்தேன். நந்தினியைப் பார்க்கவே முடியவில்லை.

மணி ஒன்பதாக, வேறு வழியின்றி புறப்பட்டேன். நந்தினியின் அம்மாவிடமும் அப்பாவிடமும் விடைபெற்றுக் கொண்டு, "நந்தினி இல்லையா?" என்றேன்.

"அவ கோயிலுக்கு போயிருக்கா. வர்ற நேரம்தான். வழில பாக்கலாம்" என்று நந்தினியின் அம்மா கூற, வேகமாக நடக்க ஆரம்பித்தேன்.

கோயிலுக்கு சற்று முன்பே, நந்தினியை கவனித்துவிட்டேன். கோயிலுக்கு வெளியே காயல் கரையோரமிருந்த தென்னை மரத்தில் சாய்ந்தபடி, நான் வரும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் வருவதைப் பார்த்தவுடன் அருகில் வந்து "கிளம்பிட்டீங்களா?" என்றாள் சோகமாக.

"ம்..." என்ற நான், மேற்கொண்டு ஒன்றும் பேசத் தோன்றாமல் மௌனமாக நின்றேன்.

நந்தினியிடமும் பேச வார்த்தையில்லை.

மனத்தில் தெம்பை வரவழைத்துக் கொண்டு கடிதத்தை எடுப்பதற்காக பாக்கெட்டினுள் கையை விட்டேன். எனது குடும்பக் கடமைகள்... நந்தினி என்னை விரும்பினாலும், தன் பெற்றோரை எதிர்த்துக் கொண்டு என்னுடன் சேர்வாளா? காதலித்துத் தோற்கும் வேதனையை விட, காதலைச் சொல்லாமலே இருந்து விடுவது மேல்... என்றெல்லாம் தோன்ற, சட்டென்று காதலைச் சொல்லும் முடிவைக் கைவிட்டு பேசாமல் நின்றேன்.

"சார் திரும்பி இங்க வர மாட்டீங்கள்ல?" என்றாள் நந்தினி.

என்னிடம் அமைதி.

"அந்த கவிதையை எழுதி முடிச்சீங்களா?" என்றாள்.

"இல்ல... முடியல" என்றேன் அர்த்தத்துடன்.

சில விநாடிகள் தீவிரமாக யோசித்த நந்தினி, பிறகு ஒரு முடிவுக்கு வந்தாற் போல், "ஆமாம். எவ்வளவோ கவிதை மனசில தோணும். எல்லாக் கவிதையையும் எழுத முடிஞ்சுடுதா என்ன?" என்றாள்.

நான் அதற்கு பதில் கூறாமல், "சரி நந்தினி. நேரமாயிடுச்சு. நான் கிளம்புறேன்" என்றேன்.

"ம்..." என்று தலையாட்டினாள்.

சில விநாடிகள் அவளது முகத்தை உற்று பார்த்துவிட்டு, சட்டென்று திரும்பி வேகமாக நடக்க ஆரம்பித்தேன்.


சிறிது தூரம் சென்ற பிறகு, எனது பாக்கெட்டிலிருந்த கடிதத்தை எடுத்து, துண்டு துண்டாகக் கிழித்து விட்டெறிந்துவிட்டு திரும்பிப் பார்த்தேன்.


தூரத்தில் நந்தினியும் ஒரு காகிதத்தை கிழித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. ஒரு விநாடி மனசு தளும்பி அடங்கியது. "கடவுளே..."என்று மனசுக்குள் கூவினேன்.


பொங்கி வந்த அழுகையை தொண்டைக்குள் விழுங்கிகொண்டு, பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தேன். ●

ரஜினியால சேர்ந்துட்டோம்!









கேரளாவில் முப்பத்திரண்டு மணி நேரம் தொடர்ந்து வயலின் இசைத்து கின்னஸ் சாதனை புரிந்து, தற்போது சென்னையில் மையமிட்டிருக்கும் இளம் புயல் ஆதிரா. வயது பதினேழு.

''கேரளாவின் புகழ்பெற்ற இசைக் கலைஞரான கோபாலபிள்ளையின் பேத்தி நான். என் அப்பா கிருஷ்ண பிள்ளையும் வீணை மற்றும் வயலின் கலைஞர். என் தாத்தா இறந்த தினமான நவம்பர் 10ம் தேதி, கேரளாவிலுள்ள சூர்யா கல்சுரல் சொசைட்டியின் உதவியோடு, இருபதாயிரம் பார்வையாளர்கள் முன்னிலையில் தொடர்ந்து முப்பத்திரண்டு மணி நேரம் வயலின் வாசித்து கின்னஸ் சாதனை நிகழ்த்தினேன். பாடலுக்குண்டான ஒரு நோட்டும் பிசகாமல் வாசித்ததில், கைகளில் ரத்தம் கட்டியது, நல்லவேளை, ரத்தம் கசியவில்லை. இல்லாவிட்டால் அத்தனையும் வீணாகியிருக்கும்.'' சொல்லும்போதே உணர்ச்சி வசப்படுகிறார் ஆதிரா.

ஜனாதிபதி உங்களைப் பாராட்டினாராமே?

''ஆம். தனது பிறந்த நாளான அக்டோபர் 16 அன்று என் போன்ற இளங்கலைஞர்களை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தார் அப்துல் கலாம் அங்கிள். நான் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறேன் என்று தெரிந்தவுடன், தமிழிலேயே என்னிடம் பேசத் தொடங்கினார். அவருக்கு விஞ்ஞானத்தில் மட்டுமல்ல, எல்லாவற்றிலும் அபார ஈடுபாடு. நான் பாட ஆரம்பித்தபோது என் கூடவே சேர்ந்து பாடினார்.

ஒரு முறை திருவனந்தபுரத்திலுள்ள மனநல மருத்துவமனைக்குச் சென்று, அங்கிருக்கும் நோயாளிகள் முன்பு பலமணி நேரம் பகுதாரி, காப்பி, மோகனம் ராகங்களில் வயலின் வாசித்தேன். 'வேண்டாம். இவர்கள் மூர்க்கத்தனமாகி விடுவார்கள்' என்று முதலில் பயந்த டாக்டர்கள், பிறகு இசையில் ஆழ்ந்த நோயாளிகளின் பல்ஸ் ரேட்டைப் பரிசோதித்தபோது, பயந்தபடி இல்லாமல், மூர்க்க மானவர்கள் அமைதியானதையும், பல்ஸ் ரேட் நார்மலாக இருந்ததையும் கண்டு இசையின் மகத்துவத்தை உணர்ந்து அதிசயித்துப் போனார்கள். அன்றிரவு எனக்குத் தூக்கமேயில்லை.''

சாதனை...



அடுத்து என்ன செய்வதாய் உத்தேசம்?

''இசைக்கு என்னை அர்ப்பணிக்க முடிவு செய்துவிட்டேன். அதற்குத் தோதாய் பெற்றோருடன் வந்து சென்னையில் செட்டிலாகிவிட்டேன்.'' என்கிறார் ஆதிரா.



வேதனை..!

இந்திய கிரிக்கெட் அணியில் பிரமாதமாய் ஆடிவரும் சச்சின் டெண்டுல்கர், அவரது சொந்த மாநில அணியில் இடம் கிடைக்காமல், காரணமேயின்றி வெளியேற்றப்பட்டால் எப்படி இருக்கும்? அப்படியொரு மனவேதனையில்தான் 'குட்டி' படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்த ஸ்வேதாவும், அவரது குடும்பத்தினரும் இருக்கின்றனர்.


பணக்கார வீட்டில் வேலை செய்யும் சிறுமியாக 'குட்டி' படத்தில் ஸ்வேதா மிக அற்புதமாக நடித்திருந்தார். அவருடைய பிரமாதமான நடிப்பால், அந்த ஆண்டுக்கான (2001) இந்தியாவின் சிறந்த குழந்தை நட்சத்திர விருது கிடைத்தது. ஆனால், அந்தப் படத்திற்கு தமிழக அரசின் விருது கிடைக்கவில்லை. "ஏன் இப்படி பண்ணாங்கன்னு தெரியலை" என்று சோகமாகச் சொல்கிறார் ஸ்வேதா.

"சமீபத்துல தொடர்ந்து மூணு வருஷங்களுக்கான விருதுகளை தமிழக அரசு அறிவிச்சதுல, 2001ம் ஆண்டுக்கான குழந்தை நட்சத்திர விருதை 'சொன்னால்தான் காதலா' படத்துல நடிச்ச டி.ஆர். மகன் குறளரசனுக்குக் கொடுத்திருக்காங்க. இது எப்படி நியாயம்னு நீங்களே சொல்லுங்க? ஏற்கெனவே 99ம் வருஷம் 'மல்லி' படத்துக்காக இரண்டு இண்டர்நேஷனல் விருதுகளும், தேசிய விருதும் வாங்கிய போதும், தமிழக அரசு ஸ்வேதாவை கண்டுக்கவேயில்லை. இப்போ 'குட்டி'க்கும் அதே கதிதான். உலக அளவிலும் தேசிய அளவிலும் சாதிச்ச என் பொண்ணை, அவ சொந்த மண்ணுல அங்கீகாரம் கொடுக்க ஏன் தயங்குறாங்கன்னு புரியவேயில்லை. ஸ்வேதாவைத் தாண்டி குறளரசனுக்கு விருது கொடுத்ததை, டி.ஆரே ஏத்துக்குவாரான்னு தெரியலை" என்று குமுறினார் ஸ்வேதாவின் தந்தை பத்மநாபன்.

தற்பொழுது பத்தாவது படித்து வரும் ஸ்வேதா, சந்தோஷ் சிவனின் அரவாணிகள் பற்றிய தமிழ்ப் படமான 'நவரசா'வில் ஹீரோயினாக நடித்து வருகிறார். "நந்திதா தாஸ் மாதிரி அர்த்தமுள்ள படங்களில்தான் சின்ன வயசிலிருந்தே நடிச்சுட்டு வர்றேன். பணம், புகழ் எதுவுமே வேண்டாம். ஆனா நம்ம ஊர்லேயே எனக்கு அங்கீகாரம் கொடுக்காம போனா எப்படி?" என்று ஸ்வேதா கேட்டபோது, நம்மிடம் பதிலில்லை.

"'மல்லி' படத்துக்காக இண்டர்நேஷனல் அவார்டு வாங்க ஹைதராபாத் போனபோது, ஃப்ளைட்ல நம் சி.எம்.மைச் சந்திச்சேன். என்னை மடியில உட்கார வைச்சு கன்னம் வருடி, ஆசையா அரை மணி நேரம் பேசினாங்க. அப்போ 'உனக்கு என்ன வேணுமானாலும் எங்கிட்ட கேட்கலாம்'னு சொன்னாங்க தெரியுமா?" என்று அர்த்தம் பொதிந்தபடி பேசிய ஸ்வேதாவை, அவரது தந்தை பத்மநாபன் ஆறுதலாக அணைத்துக் கொண்டார்.

- சநகன்



சின்னான் செய்திகள்

ஹலோ ரீடர்ஸ்! உங்க எல்லாருக்கும் சின்னானோட 'ஹாய்'. அடுத்தவங்க சொல்ற 'அறிவுரை'யைக் கேட்டு நடக்கறது கசக்கும். ஆனா அடுத்தவங்களுக்கு 'அறிவுரை' சொல்றதுன்னா இனிக்குமே! அதான் 'இனிப்பா' எழுத ஆரம்பிச்சுட்டேன்.

"**அ**ம்மா அம்மம்மா... அம்மா அம்மாம்மா'ன்னு முதல்வர் தலையில் அண்டார்டிகாவை 'அலேக்'கா தூக்கி வைச்சுட்டாங்க கோலிவுட் 'குழந்தைகள்'. அப்படியே ராமதாஸ், திருமாவளவன், கிருஷ்ணசாமின்னு ஒரு லிஸ்ட் போட்டு பாராட்டிட்டாங்கன்னா எந்தப் படத்துக்கும் பிரச்னை வராதுங்கோ! (என் ஐடியாவைக் கேட்கறவங்க புத்திசாலி! கேட்காதவங்க அப்புறமா அனுபவசாலி!)

போன வாரம் ஈரோடு போற பஸ்ஸுல ஒரு அரசு பெண் டாக்டர்கிட்ட 'வம்பு' செய்து போலீஸ்கிட்ட மாட்டிக்கிட்டாராம் அதிரடிப்படை வீரர் ஒருவர். பேரு கண்ணனாம்! (ஓகோ!) பெண் டாக்டர் பேரு ஜெயலட்சுமியாம்! (ஆகா!)

நியூமராலஜியை நம்புற கோஷ்டியா நீங்க! அப்ப இந்த 'சின்னானாலஜி'யையும் நம்புங்க! 'தனுஷ்'விட்ட காதல் ஏவுகணை சக்ஸஸ். 'புஷ்'விட்ட தேர்தல் ஏவுகணை சக்ஸஸ். இந்தியாவிட்ட 'தனுஷ்' ஏவுகணையும் சக்ஸஸ். ஆக, ரஜினியும் 'சந்திரமுகி' ஏவுகணையை 'ரஜனிஷ்'ன்னு 'ஷ்' வைச்சு விட்டார்னா 'சக்ஸஷ்' ஆகுமுங்கோ!

ஹெச்.ராஜா... அதாங்க நம்ம பி.ஜே.பி. எம்.எல்.ஏ. hraja.comன்னு புதுசா வலை விரிச்சிருக்காரு. அதான் மத்த எம்.எல்.ஏக்களைக் கேட்கறேன், நீங்க மட்டும் என்ன குறைஞ்சவங்களா? உங்களுக்கு டாட்காம் ஆரம்பிக்கத் தகுதியில்லையா? (ஏதோ... வெப்சைட் டிசைன் பண்ணித்தர்ற கம்பெனிகளுக்கு நம்மால முடிஞ்ச உதவி! கைமாத்தா சின்னான். காம்னு ஒண்ணு போட்டுத் தருவீங்கள்ல!)

சீனாவில சிங்கங்களெல்லாம் ஏங்கிக் கெடக்குது. எதுக்கு? அடுத்த மூணு மாசத்துக்கு சிக்கனுக்குத் தடாவாம்! காரணம் 'பறவைக் காய்ச்சல் நோய்' படு ஸ்பீடா 'வூடு' கட்டித் தாக்குதாம். அதுக்காக சிங்கங்களுக்கு பால்சோறும், பக்கோடாவும் மட்டும் கொடுப்பாங்கன்னு நினைக்காதீங்க. மத்ததெல்லாம் உண்டாம்!

அதிகம் பேசிட்டேன். நடையைக் கட்டுறேன், ஜூட்! ○

நடக்குமென்பார் நடக்கும்!

- அக்னிசர்மா பக்கம் -

மேஷம் : எப்பவுமே ஜெயிச்சிக்கிட்டிருந்தா வாழ்க்கையில சுவை இருக்காதுங்க. தடைகள், குறுக்கீடுகள்னு சில தடங்கல்கள் இருக்கத்தான் செய்யும். நிதானமா செயல்படுங்க. எதிர்பாராத பயணம், புதியவர்கள் அறிமுகம்னு சுவாரஸியமான வாரம். உத்தியோகத்தில உற்சாகம் கூடும். வெளிநாடு / வெளியூர் பயணம் போகும் வாய்ப்பு உண்டாகும். எந்திரம், இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், டிராவல்ஸ் தொழில்கள்ல ஆதாயம் கூடும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். உடன்பிறந்தவங்க உதவுவாங்க. பெண் களுக்கு உற்சாகமும், தெய்வீக ஈடுபாடும் கூடும்.


ரிஷபம் : உங்க துணிவும், தன்னம்பிக்கையும் கூடுறதால, எதிர்ப்புகள் அடங்கிப் போற நேரம்க. சகலகாரியங்களும் முன்னேற்றமடையும். உத்தி யோகத்தில உங்க கோரிக்கைகள் நிறைவேறும். புது முயற்சி ஏதும் செய்ய எண்ணமிருந்தா ஆரம்பிங்க. ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், ஆபரணத் தொழில், பத்திரிகை தொழில்கள் ஏற்றம் பெறும். கலைஞர் களும், அரசியல்வாதிகளும் மேன்மை அடைவார் கள். குடும்பத்தில் இதுவரை இருந்த குழப்பம் மறைஞ்சு நிம்மதி கூடும். பெண்களுக்கு எண்ணம் ஈடேறும்.

மிதுனம் : குழப்பம், சிக்கல், கவலைன்னு சங் கடப்பட்ட உங்க மனநிலை மாறி, ஒரு தெளிவு பிறக் கிற நேரம்க இது. கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சின்னு இருக்கறவங்க லட்சியத்தை நெருங்கிடுவாங்க. உத்தியோகஸ்தர்களுக்கு புதிய திருப்பங்கள் காத் திருக்கு. புதுப்பதவி, இடமாற்றம், சிலருக்கு ஏற்பட லாம். கலைத்துறையினருக்கு எதிர் பாராத முன்னேற் றம் வரும். இரும்பு, இண்டஸ்ட்ரீஸ், ரியல் எஸ்டேட் துறையினர் ஏற்றம் பெறுவாங்க. குடும்பத்தில் செலவுகள் கூடும், உஷாரா இருங்க. பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை மகிழ்வு தரும்.



துலாம் ராசிக்காரரான
பாடகர்
கார்த்திக்குக்கு
புது அறிமுகங்கள்
கிடைக்குமாம்

நவம்பர்
17 முதல் 23
வரை



பரிகாரம் :

செவ்வாய் தோஷம், நாக தோஷம் என்று ஜாதக தோஷத்தினாலோ, மற்ற காரணங்களாலோ திருமணம் தடைப்பட்டு கவலைப்படுபவர்கள், திருமணஞ்சேரிக்குப் போய், வேண்டிக் கொண்டு, அங்கு சொல்லப்படும் முறைப்படி பூஜை விதிகளைப் பின்பற்றினால் அடுத்த 90 நாட்களுக்குள் எல்லாத் தடைகளும் நீங்கி திருமணம் கூடி வருவது உறுதி. மாயவரத்திலிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளார் இந்தத் திருமணத் தடை நீக்கும் ஈசன்.

- வி

கடகம் : வார ஆரம்பத்தில உங்களுக்காக சில பிரச்னைகள் காத்திட்டிருக்குங்க, நிதானமா செயல்படுங்க. புதிய அறிமுகங்கள், முக்கியஸ்தர்கள் ஆதரவுன்னு உங்க பலம் கூடும். பொருளாதாரம் ஏற்ற இறக்கமாகத்தான் இருக்கும். உத்தியோகத்தில அனுகூலமான நேரம்தான். கம்ப்யூட்டர், தொழில் உபகரணங்கள், புத்தகம், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எல்லாரும் ஏற்றம் பெறுவாங்க. குடும்பத்தில பொதுவா மகிழ்ச்சி நிலவும். சுபகாரிய முயற்சிகள் அனுகூலமாகும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

சிம்மம் : அதிர்ஷ்ட தேவதை உங்களைத் தேடி வந்துகிட்டிருக்கா. எந்தக் காரியம் எடுத்தாலும் வெற்றிதான் உங்களுக்கு. வில்லங்கமாயிருந்த விஷயங்களெல்லாம் விளையாட்டுப்போல தீர்ந்து போயிடும். உத்தியோகத்தில இதுவரை இருந்த எதிர்ப்புகள் அடங்கி ஒடுங்கி வழிவிடும். கெமிக்கல்ஸ், உலோகவகை, எலக்ட்ரிகல்ஸ், கம்ப்யூட்டர் தொழில்கள் லாபம் அதிகம் பெறும். அரசியல்வாதிகளுக்கு புதிய திருப்பம் காத்திருக்கு. குடும்பத்தில் இதுவரை இருந்த குழப்பம் மறைந்து, குதூகலம் கூடும். பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மையும், தெய்வீக ஈடுபாடும் கூடும்.

கன்னி : உங்க இட்டமெல்லாம் கட்டம் கட்டமா நிறைவேறும். தெய்வீக ஈடுபாடு கூடும். பொருளாதார நிலை திருப்தியா முன்னேறும். உத்தியோகத்தில குறுக்கீடுகள், அனாவசிய தாமதமெல்லாம் நிவர்த்தியாகி, உங்களுக்கு அனுகூலங்கள் ஏற்படும். கெமிக்கல்ஸ், தோல் பொருள், ஃபர்னிச்சர், ரியல் எஸ்டேட் தொழில்கள்ல லாபம் கூடும். பயணங்கள்ல கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க. ஏற்றுமதி, இறக்குமதி தொழில்ல லாபம் கூடும். குடும்பத்தில உற்சாகம் கூடும், கருத்து வேறுபாடுகள் மறையும். உடன்பிறந்தவர்கள் கொஞ்சம் செலவு வைப்பாங்க. எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேர்ந்து, பெண்களுக்கு மகிழ்ச்சி தரும்.

துலாம் : இதுவரைக்கும் எந்தப் பக்கம் திரும்பினாலும் குழப்பம், சஞ்சலம்னு இருந்த நிலை மாறி, தெளிவு பிறக்கும். பொருளாதார நிலை மெல்ல மெல்ல முன்னேறும். புது அறிமுகம் சில கிட்டும். உத்தியோகத்தில சிலருக்கு இடமாற்றம், பதவி உயர்வு ஏற்படலாம். எந்திர வகை, மருத்துவம், எலக்ட்ரானிக்ஸ் தொழில்கள்ல இருக்கிறவங்களுக்கு ஏற்றமான நேரம். அரசியல்வாதிகள் கொஞ்சம் நிதானமா செயல்படறது நல்லது. குடும்பத்தில பொதுவா அமைதி நிலவும்னாலும், ஆரோக்கியத்தில கவனமா இருப்பது நல்லது. பெண்களுக்கு சுப வேளை கூடிவரும்.

விருச்சிகம் : குடை பிடிக்காம நல்லா நனைங்க, அதிர்ஷ்டம் மழையா கொட்டப் போகுது. எதிர்பாராத சந்திப்பு ஒண்ணு காத்திருக்கு. நின்னுபோன பக்கமெல்லாம் தடைகள் நீங்கி, வர வேண்டிய பணம் பல வழிகள்லயும் வந்து சேரும். ஆபீஸ்ல உங்க உற்சாகம் பெருகும். எதிர்பார்த்த பணவரவு, இடமாற்றம், பதவி உயர்வு எல்லாம் கூடி வரும். கெமிக்கல்ஸ், மருத்துவம், காண்ட்ராக்ட்ஸ், ரியல் எஸ்டேட் தொழில்கள் ஏற்றம் பெறும். சட்டம், ராணுவம், காவல் துறையினர் மேன்மை பெறுவாங்க. குடும்பத்

தில குருபலன் கூடி சுபகாரியங்கள் நடக்கும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

தனுசு : உங்க ராசியில சனி பகவான் கொஞ்சம் சிரமம் கொடுக்கலாமான்னு பார்க்கிறாருங்க. சிறு பிரச்னைகளும், பொருளாதார சிரமமும் ஏற்படும். பொறுமையா நிலைமைகளைக் கையாளுங்க. வாரக் கடைசியில நிலைமை மாறிடும். தெய்வ பலத்தைக் கூட்டிக்கோங்க. உத்தியோகத்தில ஒரு திருப்பம் காத்திருக்கு. புத்திசாலித்தனமா பயன்படுத்துங்க. கூடுதல் பொறுப்பும், புதிய முயற்சியும் அனுகூலம் தரும். இரும்பு, யந்திரம், மருத்துவம், கெமிக்கல்ஸ் துறையினர் ஆதாயம் பெறுவாங்க. குடும்பத்தில நிம்மதி நிலவும். பெண்களுக்கு எதிர்பாராத பொருள் வரவு உற்சாகம் கூட்டும்.

மகரம் : குரு பகவானுக்கு உங்கமேல அன்பு கூடிப் போச்சுங்க. இனி தொட்டதெல்லாம் வெற்றிதான். வெளிநாட்டு உதவி உங்களைத் தேடி வருது. ஆரோக்கியம் பாதிக்கப்பட்டவங்களுக்கு, நல்ல முன்னேற்றம் தெரியும். அரசாங்க விவகாரங்கள் அனுகூலமாகும். உத்தியோகத்தில உங்களுக்கு தொல்லையும், பிரச்னையுமாயிருந்ததெல்லாம் ஓய்ஞ்சு போயிடும். வெளிநாட்டுத் தொழில் லாபம் கூட்டும். தோல் பொருள், எண்ணெய் வகை, பொன், வெள்ளி தொழில்கள் மேன்மை பெறும். குடும்பத்தில் சுபகாரியங்கள் ஈடேறும். பெண்களுக்கு உற்சாகமான நிலை இருக்கும்.

கும்பம் : உங்க ராசிக்கான கிரக மாற்றங்கள் உங்க திறமையைக் கூட்டி, எந்தக் கடினமான வேலையையும் சுலபமா முடிச்சு வைக்கும். புதியவர்கள் அறிமுகம், முக்கியஸ்தர் ஆதரவுன்னு உற்சாகமான வாரம். உத்தியோகத்தில உங்க திறமை பாராட்டை வாங்கித் தரும். உங்க கோரிக்கைகள் நிறைவேறும். ரியல் எஸ்டேட், தோல் பொருள்கள் எண்ணெய் வகை, ரியல் எஸ்டேட் தொழில்கள் லாபம் தரும். குடும்பத்தில் பொருளாதார நிலை உயரும். மகிழ்ச்சி நிலவும். குடும்ப ஒற்றுமை மேன்மை பெறும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம்.

மீனம் : உங்க காரியங்கள்ல தாமதமும், தடங்கல்களும் ஏற்பட்டாலும் உடனுக்குடன் நிவர்த்தியாகும். தெய்வபலமும், தெய்வீக ஈடுபாடும் கூடி, நன்மைகளைத் தேடித் தரும். உங்க பொருளாதார வறட்சி நீங்கி, சுபிட்சம் கிடைக்கும். உத்தியோகத்தில் நிம்மதியான சூழ்நிலைதான் என்றாலும், எல்லோருடனும் சுமுகமாக நடந்து கொள்வது நல்லது. கலைத்துறை, ரியல் எஸ்டேட், ராணுவம், காவல், சட்டம் துறையினருக்கு ஏற்றமான நேரம். அரசியல்வாதிகள் சிந்தித்துச் செயல்பட வேண்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். பெண்களுக்கு விருந்து, உபசாரம், உல்லாசம் என்று மகிழ்ச்சியான வாரம். ●

இது நல்ல வாரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	நவ. 17 (கார். 2)	உத்திராடம்	பஞ்சமி	முருகன் ஸ்தலங்களில் சூரசம்ஹாரம்
வியாழன்	நவ. 18 (கார். 3)	திருவோணம்	சஷ்டி/ ஸப்தமி	திருவோண விரதம் / செந்தூர் தேவசேனா திருக்கல்யாணம்
வெள்ளி	நவ. 19 (கார். 4)	அவிட்டம்	அஷ்டமி	-
சனி	நவ. 20 (கார். 5)	சதயம்	நவமி	-
ஞாயிறு	நவ. 21 (கார். 6)	பூரட்டாதி	தசமி	ஸ்ரீ வாஞ்சியம் - ருக்மிணி கல்யாண உத்ஸவம்
திங்கள்	நவ. 22 (கார். 7)	உத்திரட்டாதி	ஏகாதசி	திருக்கடையூர், திருவண்ணாமலை - 1008 சங்காபிஷேகம்
செவ்வாய்	நவ. 23 (கார். 8)	ரேவதி	துவாதசி	-

"வாசனை மூக்கைத் துளைக்குது!"



என்ன, எல்லாரும் சந்தோஷமா தீபாவளி கொண்டாடினேளா? பலகாரமெல்லாம் சாப்டேளா? நம்ம பாப் ஷாலினி இருக்காளோல்லியோ... அவருக்கு 'பனீர் மட்டர்' செய்ய சொல்லித் தரணும்னா... வாடியம்மான்னேன். அவ வர்றதுக்குள்ள உங்களுக்கு ஒரு தகவலச் சொல்றேன். பல பேர் இந்த பனீர் மட்டரை 'பனீர் பட்டர்'னுதான் உச்சரிக்கறா. இப்படிச் சொல்றதோட இல்லாம, இதுல பட்டரும் கலந்திருக்குன்னு தப்பா நெனச்சுக்குறா. இதுல பட்டர் கிட்டர் எதுவும் போடறதில்ல. 'பனீர் மட்டர்'தான் நாளடைவுல மருவி 'பனீர் பட்டர்'னு ஆயிடுத்து. 'சரி, போதும் மாமி புராணம்'னு சொல்றேளா, ஓ.கே. அதோ ஷாலினி வந்துட்டா, வாங்க சமைக்கப் போவோம்.

"என்னடியம்மா, தயாரா?"

"ஆரம்பிப்போம் மாமி."

"200 கிராம் பச்சைப் பட்டாணி, 10 கிராம் சீரகம், 200 கிராம் வெங்காயம், 200 கிராம் தக்காளி, 50 கிராம் பச்சை மிளகாய், 10 கிராம் மஞ்சள் தூள் எல்லாத்தையும் எடுத்துக்கோடியம்மா."

"ம்... எடுத்துட்டேன்!"

"கூடவே முந்திரி 200 கிராம், மல்லி தூள் 50 கிராம், 200 மி.லி. எண்ணெய், பனீர் ¼ கிலோ, தயார் பண்ணிடு."

"மத்ததெல்லாம் ஓ.கே. ஆனா இந்த பனீரை எப்படித் தயார் பண்றது மாமி?"

"அதுக்கெல்லாம் இப்ப ரொம்ப மெனக்கெடத் தேவையில்ல. இப்போ மார்க்கெட்ல சுலபமாக கிடைச்சுடறது. வாங்கி ஃப்ரிட்ஜ்ல வெச்சிருக்கேன். எடுத்து சின்னச் சின்ன துண்டா வெட்டி வெச்சுக்கோ. கூடவே வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாயையும் நறுக்கிக்கோ."

"ம்... அப்புறம்?"

"இஞ்சி, பூண்டை நன்னா விழுதா அரைச்சுக்கோ."

"அரைச்சப்புறம்...?"

"வாணலில எண்ணெய் விட்டு, காய்ஞ்சப்புறம், அதுல சீரகம்,

வெங்காயம் ரெண்டையும் போட்டு, பொன்நிறம் வர்ற வரைக்கும் வதக்கு.''

''வதக்கியாச்சு.''

''இப்போ இஞ்சி, பூண்டு, தக்காளி, மல்லி, மிளகாய், மஞ்சள்தூள், வெட்டி வெச்சிருக்கிற பனீர், பட்டாணி எல்லாத்தையும், வதக்கி வெங்காய, ஜீரகத்தோட கொட்டி ஒண்ணா வேகவை.''

''வச்சுட்டேன் மாமி, அவ்ளோதானா?''

''ஏண்டியம்மா பறக்கற? பசி வயித்தப் பிராண்டறதா?''

''ஆமா மாமி... வாசனை வேற மூக்கைத் துளைக்குது... நாக்குல தண்ணி ஊறுது...''

''சரி...சரி... ஹாட்பேக்ல சப்பாத்தி வச்சிருக்கேன். எடுத்து தட்டுல வைச்சுக்கோ...''

''வச்சுட்டேன் மாமி... தொட்டுக்க?''

''ஒரு நிமிஷம் பொறுடியம்மா... பனீர் மட்டர் தயாரான்னு பாக்கறேன்...''

''......''

''ம்... ரெடியாயிடுத்து... ரொம்ப நல்லா வந்திருக்குடியம்மா... இந்தா சாப்பிட்டுட்டுச் சொல்லு.''

''மாமி.... சும்மா சொல்லக் கூடாது... உங்க கைமணமே தனிதான்... ரொம்ப நல்லாயிருக்கு... சப்பாத்தி தவிர வேற எதுக்கெல்லாம் இது சைட் டிஷ் மாமி?''

''பூரி, நான், பிரெட் சாண்ட்விச்னு பலதுக்கும் இதைப் பயன்படுத்தலாம். செய்யறதுக்கு ரொம்பச் சுலபமானது.''

''அப்ப நான் கௌம்பறேன் மாமி, உங்க உதவியால இன்னிக்கு வாய்க்கு ருசியா சாப்பிட்டேன். ரொம்ப தேங்க்ஸ்.''

படங்கள் : ஸ்ரீஹரி



திருக்கோயில் - தீபாவளி மலர்

ஆலயங்களின் நோக்கமே அன்பையும் அறத்தையும் வளர்ப்பது. அதில் இறையுணர்வு கலந்து ஆன்மிகமாக உயரும்போது நாடு செழிக்கிறது. மக்களுக்கு நன்மை கிடைக்கிறது. தமிழகத்தின் ஆலயங்களையும், அவற்றின் சிறப்புகளையும், அங்கு சென்று வழிபடுவதால் கிட்டும் பயன்களையும் தொகுத்து. அறநிலையத்துறை வெளியிடும் 'திருக்கோயில்' இதழின் தீபாவளி மலர். அருளுரைகளும், அறிவுரைகளும், கருத்தோவியங்களும் எழுத்தோவியங்களும் கொண்ட ஆன்மிக மலர்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை - 34. விலை ரூ.10



வசீகரப் பொய்கள் - எஸ். ஷங்கர நாராயணன்

நேற்றைக்குச் சரியென்று தோன்றியது இன்றைக்குத் தவறாகி விடுகிறது. இன்றைக்கு நல்ல மனிதர் என்று நம்புபவர், நாளை பொல்லாதவராகி விடுகிறார். மாறிக் கொண்டேயிருக்கும் உலகின் போக்கில், நிகழ்வுகளையும், யதார்த்த வாழ்வில் அலைமோதும் மனித மனங்களையும் மையமாக்கி வடித்த சிறுகதைகளின் தொகுப்பு.

அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 11. விலை ரூ.60

பூத்த மலர்கள் - ஜி.வி. ராவ்

மனித வாழ்வே உணர்வுகளின் குவியல்தான். ஆனால் நடைமுறையில் உணர்ச்சி வசப்பட்டு எடுக்கும் முடிவுகள் சரியாகவே இருப்பதில்லை. உணர்வுகளைப் புரிந்து, அறிவுபூர்வமாய் வாழ்வை அணுகவும், சிக்கலில்லாத வாழ்வை அமைத்துக் கொள்ளவும் வழிகாட்டும், மனித உணர்வுகளைப் பற்றிய, உளவியல் நூல்.

உரத்த சிந்தனை பதிப்பகம், 3, தணிகாசல முதலி தெரு, பெரம்பூர், சென்னை - 11. விலை ரூ.50

சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு - ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

நீண்ட பயணங்களில் வெற்றி கண்டவை சில, மூழ்கிப் போனவை பல. புதைந்து போன புதையல்களும், முத்துக்களும், பவளங்களும் எத்தனையோ, தமிழ் சினிமா உலகை 'திரை' கடல் என்றால் பொருத்தம் தான். இதில் 1917 முதல் கரை சேர்ந்தவை, சேராதவை என்று அவற்றின் அத்தனை விவரங்களையும் சேகரிப்பதையே வாழ்க்கையாக்கிக் கொண்டு வடித்தெடுத்த தொகுப்பு. விருதுகளும் பாராட்டும் பெற்ற படங்கள், இயக்குநர்கள், நடிக நடிகையர், இசையமைப்பாளர்கள், கவிஞர்கள் என்று தமிழ்த் திரையின் அத்தனை செய்திகளையும் தரும் அகராதி.

சிவகாமி பப்ளிகேஷன்ஸ், 42, டாக்டர் ராதாகிருஷ்ணன் பிரதான சாலை, ராதாகிருஷ்ணன் நகர், திருவான்மியூர், சென்னை - 41. விலை ரூ.500

- விஷ்வக்





கிரடிட் கார்ட் க்ஷரம்!

• ஜெயக்குமார்

பிக்பாக்கெட் செயின் திருட்டெல்லாம் இப்போது பழைய பேஷனாகி விட்டது. கிரெடிட் மோசடி தான் லேட்டஸ்ட். சென்ற வாரம் சென்னையில் நடந்திருக்கும் ஒரு கிரெடிட் கார்டு மோசடி, பலரை புருவம் உயர்த்த வைத்திருக்கிறது. நல்லவேளையாய் குற்றவாளிகளை சாமர்த்தியமாகப் பிடித்துவிட்டிருக்கிறது போலீஸ். என்ன நடந்தது என்று நம்மிடம் விளக்கினார் சென்னை அபிராமபுரம் குற்றப்பிரிவு ஆய்வாளர் ஜெயக்குமார்.

"எங்க ஏரியா லிமிட்டில் இருக்கிற பிரபல செல்போன் கம்பெனிக்கு இரண்டு பேர் டிப்டாப்பாக உடையணிந்து வந்து ஃபாரின் கிரெடிட் கார்டுகளை நீட்ட, கார்டு மீது சந்தேகம் ஏற்பட்டது. ஊழியர்கள் அவர்களை கையும் களவுமாகப் பிடிக்க முயன்றிருக்கின்றனர். அந்த இக்கட்டிலும் ஒரு செல்போனை திருடிவிட்டு தப்பி ஓடிவிட்டனர். குற்றவாளிகளான தங்கவேல் மற்றும் அவன் கூட்டாளி சரவணகுமார் ஆகியோரைப் பற்றி பல இடங்களில் விசாரித்தோம்.

தங்கவேல் 20 வருடங்களாக மலேசியாவில் வசித்தவன். சரவணகுமார் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன். சில இன்ஃபார்மர்கள் கூறிய தகவல்களை வைத்து இந்த இருவரையும் குற்றம் நடந்த இரண்டு நாட்களுக்குள் பிடித்து விட்டோம். தமிழ்நாட்டிலிருந்து கூலித் தொழிலாளர்களை ஏற்றுமதி செய்யும் ஏஜண்டான சந்திரன் என்பவன், தங்கவேலுக்குத் தர வேண்டிய கடனுக்கு பதிலாக அதற்கு அதிகமான தொகையாக போலி கிரெடிட் கார்டுகளைத் தந்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதை எடுத்துக் கொண்டு இந்தியா வந்திறங்கியவன், வேணுகோபாலை கூட்டணியாக சேர்த்துக் கொண்டு சென்னையின் பிரபல துணிக் கடைகளில் பதினைந்தாயிரம் ரூபாய் மதிப்பிற்கான துணிகளும், பிரபல நகைக் கடையில் 10 பவுன் தங்க செயினும், செல்போன் கடையில் ஐந்து செல்போன்களும் வாங்கி போலி கிரெடிட் கார்டு மூலம் சொர்க்கபுரி வாழ்க்கை வாழ்ந்திருக்கிறான். பல நாள் திருடன், கடைசியாக ஒரு நாள் மற்றொரு செல்போன் திருட்டின்போது மாட்டிவிட்டான்."

இதனைத் தொடர்ந்து மலேசியாவிலுள்ள போலி கிரெடிட் கார்டு தயாரிக்கும் கும்பலை மடக்க நடவடிக்கை எடுத்து வரும் காவல்துறை, இத்தகைய மோசடியிலிருந்து வணிகர்கள் தங்களைக் காத்துக் கொள்ள ஆலோசனைகளையும் கூறியுள்ளனர்.

"ஃபாரின் கிரெடிட் கார்டுகள் மூலம் பர்சேஸ் செய்யும்பொழுது வெறுமனே கார்டின் பண விவரங்களை மட்டும் அலசாமல் கொண்டு வரும் நபரின் தகவல்கள், பாஸ்போர்ட் உரிமை போன்றவற்றையும் விசாரிக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

சரி, வணிகர்கள் என்ன சொல்கின்றனர்? "கிரெடிட் கார்டு கொண்டு வருபவர்களை நீண்ட நேரம் சோதித்தால், அவர்கள் அவமானத்திற்குள்ளானதாக நினைக்கிறார்கள். எனவே கார்டு எண்ணின் தகவல்களை மட்டும் சரிபார்த்து கொள்வோம். வேறொருவரின் கிரெடிட் கார்டு எண்ணைப் பயன்படுத்தி போலி கிரெடிட் கார்டு தயாரிப்பவர்களுக்கான கடுமையான சட்டமும் அவர்கள் மீதான அடக்குமுறையும் கடுமையாக இருந்தால் இப்பிரச்னைக்கு ஒரு தீர்வு காணப்படும்" என்கின்றனர்.

- செந்தில்



• விருப்பும்...



• ...வெறுப்பும்...!

• எம்.கே.இளமதி, பேரையூர்

? ரஜினி இப்போது இளமையாகக் காணப்படுகிறாரே...?

! திரையுலகில் அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்வியின் சோர்வையும், மகளின் திருமணம் நிச்சயமானது மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும்போது, வயதும் கூடிக் குறைவது போல் தோன்றுவது இயல்புதானே!

• எச். ஆன்டனி தமிழரசன், மும்பை - 17.

? சமையல் கேஸ் சிலிண்டர் இருபது ரூபாய் விலை ஏறியிருக்கிறது. மேலும் மாதம்தோறும் ஐந்து ரூபாய் அதிகரிக்கும் என்கிற மத்திய அரசின் செயல்பாடு...?

! நகைகள் வாங்க ஆசை காட்டி கடன் கொடுக்க ஆரம்பித்திருக்கும் வங்கிகள், இனி சமையல் கேஸ் வாங்கவும் கடன் தரலாம்.

• எஸ். கருணையானந்தம், உசிலம்பட்டி

? ஆந்திராவைச் சேர்ந்த சென்னாரெட்டியிடம் அளவுக்கு மீறி ஆத்திரம் கொண்டவர்கள், ராம்மோகன் ராவிடம் அளவுக்கதிகமாக பரிவு காட்டுவதன் காரணம் என்ன..?

! சென்னாரெட்டியிடம் அளவுக்கு அதிகமாகப் பரிவு காட்டியவர்கள், ராம்மோகன் ராவிடம் அளவுக்கு மீறி ஆத்திரம் கொண்டதற்கு என்ன காரணமோ, அதே காரணம்தான்!

• எஸ். சக்தி, விக்கிரமசிங்கபுரம்

? ரூ.900 கோடி மாட்டுத் தீவன வழக்கில் சிக்கி இன்னும் அதிலிருந்து விடுபடாத மத்திய அமைச்சர் லாலு, தமக்குப் பிரதமராகும் விதி(?!!) இருந்தால் ஆகியே தீருவேன் என்கிறாரே?

! அத்தனை ஊழல் வழக்குகளையும் சமாளித்து, ஒரு ஜெயலலிதாவால் மீண்டும் முதல்வராக முடியும் என்றால், ஏனய்யா மாட்டுத் தீவன ஊழல் புகழ் லாலு பிரதமராக முடியாது? நம் நாட்டில் இதுவும் நடக்கும் இன்னும் நடக்கும். அதிலும் கூட்டணி அரசியலில் எதுவும் நடக்கும்!

• என். கணேசமூர்த்தி, சிக்கல்

? இந்திய கிரிக்கெட் அணியுடன் தமிழக அரசியலை ஒப்பிடுக...

! இரண்டிலும் கோஷ்டிகளே பிரதானம். இரண்டிலும் தனிப்பட்ட நபர்கள் ஜொலிப்பார்கள்; அமைப்பு தோற்கும். முன்னதில் அரசியல் அதிகம்; பின்னது விளையாட்டாகிவிட்டது.


• எஸ். மரகதம், சென்னை - 37. ❐

? மனிதத் தன்மையோடு வாழ விஞ்ஞான முறை ஏதேனும் கண்டு பிடிப்பாரா நமது அப்துல் கலாம்?

ரஜினி

! தற்போதைய ஜீன் ஆராய்ச்சிகள் மூலம், ஆய்வுக் கூடத்திலேயே தேவர்களையும் உருவாக்கலாம்; அசுரர்களையும் படைக்கலாம் என்கிற நிலைமை வேகமாக உருவாகி வருகிறது. ஆக, மனிதத் தன்மை என்பது இன்று

• வொய்...



• ... நாட்!



மற்ற எல்லோரையும்விட, விஞ்ஞானிகளுக்குத்தான் முக்கியத் தேவை. இதற்கு அப்துல் கலாம் அறை கூவல் விடுத்து, உலகளாவிய இயக்கத்தையே தொடங்க வேண்டும். செய்தால், இந்திய வரலாற்றில் மட்டுமின்றி, உலக வரலாற்றிலும் நீங்கா இடம் பெறுவார்.

● **ச.யுவராணி, ரங்கசமுத்திரம் கிராமம்.**

? முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, சொந்த மண்ணில் இந்தியா ஆஸ்திரேலியாவிடம் கிரிக்கெட் தொடரை இழந்தது வேதனையா? சாதனையா...?

! மோதிரக் கையால் குட்டு!

● **அ.கஹைறல் ரஹ்மான், திருச்சி - 21**

? பால் தாக்கரேயின் மகன், சரத்பவார் காங்கிரஸில் சேர முடிவு செய்திருப்பது குறித்து...?

! சிவசேனாவில் ஏற்பட்டுள்ள உட்கட்சிப் பூசலின் விளைவு ஒரு காரணம். ஜெயிக்கிற குதிரை மேல் பணம் கட்ட விரும்புவது மற்றொரு காரணம்!

● **உ. குணசீலபாண்டியன், இராசபாளையம்***

? எதிலும் 'தமிழ்' என்று முழங்கும் பா.ம.க நிறுவனர், தம்மை மருத்துவர் ராமதாஸ் என்றும், தமது கட்சி எம்.பிக்களை பா.உக்கள் என்றும் எம்.எல்.ஏக்களை ச.ம.உக்கள் என்றும் அழைக்கச் செய்வாரா...?

! அதானே! அபத்தமான போராட்டங்களை விட்டுவிட்டு நர்சரி - ஸாரி - மழலையர் பள்ளிகளில் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பாடத்தைக் கட்டாயமாக்கும்படி போராடினாலும் தகுமே!

● **பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி**

? பா.ஜ. புதிய நிர்வாகிகள் மாற்றத்தால் அந்தக் கட்சிக்கு ஏதேனும் பலன் கிடைக்குமா சார்...?

! அப்படி எதுவும் நடக்கக் கூடியதாகத் தெரியவில்லை. உமாபாரதியின் அதிருப்தி, வி.எச்.பியின் புறக்கணிப்பு, ஆர்.எஸ்.எஸ்ஸின் அதிகப் பிரசங்கம், இவை கண்டு அத்வானியின்



இளமையாகக் காணப்படுகிறாரே..?

• இயல்புத் தோற்றம்!

மற்ற எல்லோரையும்விட, விஞ்ஞானிகளுக்குத்தான் முக்கியத் தேவை. இதற்கு அப்துல் கலாம் அறை கூவல் விடுத்து, உலகளாவிய இயக்கத்தையே தொடங்க வேண்டும். செய்தால், இந்திய வரலாற்றில் மட்டுமின்றி, உலக வரலாற்றிலும் நீங்கா இடம் பெறுவார்.

● **ஈ.யுவராணி, ரங்கசமுத்திரம் கிராமம்.**

? முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, சொந்த மண்ணில் இந்தியா ஆஸ்திரேலியாவிடம் கிரிக்கெட் தொடரை இழந்தது வேதனையா? சாதனையா...?

! மோதிரக் கையால் குட்டு!

● **அ.கஹைறல் ரஹ்மான், திருச்சி - 21**

? பால் தாக்கரேயின் மகன், சரத்பவார் காங்கிரஸில் சேர முடிவு செய்திருப்பது குறித்து...?

! சிவசேனாவில் ஏற்பட்டுள்ள உட்கட்சிப் பூசலின் விளைவு ஒரு காரணம். ஜெயிக்கிற குதிரை மேல் பணம் கட்ட விரும்புவது மற்றொரு காரணம்!

● **உ. குணசீலபாண்டியன், இராசபாளையம்***

? எதிலும் 'தமிழ்' என்று முழங்கும் பா.ம.க நிறுவனர், தம்மை மருத்துவர் ராமதாஸ் என்றும், தமது கட்சி எம்.பிக்களை பா.உக்கள் என்றும் எம்.எல்.ஏக்களை ச.ம.உக்கள் என்றும் அழைக்கச் செய்வாரா...?

! அதானே! அபத்தமான போராட்டங்களை விட்டுவிட்டு நர்சரி - ஸாரி - மழலையர் பள்ளிகளில் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பாடத்தைக் கட்டாயமாக்கும்படி போராடினாலும் தகுமே!

● **பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி**

? பா.ஜ. புதிய நிர்வாகிகள் மாற்றத்தால் அந்தக் கட்சிக்கு ஏதேனும் பலன் கிடைக்குமா சார்...?

! அப்படி எதுவும் நடக்கக் கூடியதாகத் தெரியவில்லை. உமாபாரதியின் அதிருப்தி, வி.எச்.பியின் புறக்கணிப்பு, ஆர்.எஸ்.எஸ்ஸின் அதிகப் பிரசங்கம், இவை கண்டு அத்வானியின்



இளமையாகக் காணப்படுகிறாரே..?

• இயல்புத் தோற்றம்!



சக்கரங்கள் அழட்டும்

"அப்பா... இந்த ஊரை நம்பி இனி நாம வாழ முடியாது. மண் பானை தொழிலுக்கு ஜனங்ககிட்ட மதிப்பு இல்லை. வேற ஏதாவது ஊருக் குப் போயி, வேலை செஞ்சு பிழைச்சுக்கு வோம்..." - மகன் மாரியப்பன் பேசிய தைக் கேட்ட பூமிநாதனின் கண்களில் நீர் ததும்பியது.

"மாரி, நம்ம பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையா சக்கரத்தைச் சுத்தி சட்டி பானை செஞ்சு வித்து வாழறோம். திடீர்னு வேற வேலைக் குப் போகணும்னா எப்படிய்யா?"

"அப்பா, அடுப்புப் புகைஞ்சு மூணு நாளாயிடுச்சு. பச்ச மிளகாயக் கடிச்சுட்டு நாலு மடக்கு புளிச்ச கூழைக் குடிச்சுத்தான் பசி நெருப்ப அணைச்சுக்கிட்டிருக்கோம். வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்கள ரெண்டு கோணிப்பையில போட்டுக்கோ. காலையில எட்டு மணி ரயிலை பிடிச்சு எங்கயாவது போய் வேலை தேடுவோம்."

மறுநாள் காலை அந்தக் குடும்பம், பிழைக்க வழியின்றி வழிவழி யாக வாழ்ந்த ஊரைவிட்டுக் கிளம்பத் தயாரானது.

"நேரமாயிடுச்சு... பரமக்குடி போற ரயில் வந்துடும். அப்பாவைக் காணோமே... எங்க போய்த் தொலைஞ்சாரு" - பூமிநாதனைத் தேடி குடிசையின் பின்பக்கம் வந்தான் மாரியப்பன்.

அங்கே, சட்டி பானை செய்யச் சுழற்றும் சக்கரத்தினை இரு கரங்களாலும் தடவிய வாறு விம்மி, விம்மி அழுது கொண்டிருந் தார் பூமிநாதன். அந்தக் காட்சியை பார்த் ததும் மாரியப்பனுக்கு கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. கோடரியைக் கையி லெடுத்தான்.

"இந்த சனியன் பிடிச்ச சக்கரத்தை துண்டு துண்டா வெட்டி சாக்கடையில எறிஞ்சாத்தான் நீங்க புறப்படுவீங்க போல..."

"விடமாட்டேன் மாரி... விடமாட் டேன்... நான் உசுரோடு இருக்கும்போது இதை அழிக்க விடமாட்டேன்" - ஆவேச மாய் சக்கரத்தின் மேல் விழுந்த பூமிநாத னைத் தள்ளிவிட்டு மாரியப்பன் கோடாரி யைச் சக்கரத்தை நோக்கிப் பிளக்க ஓங்கிய போது "மாரியப்பா, மாரியப்பா" என்று பின் னால் யாரோ அழைக்கும் குரல் கேட்டு திரும்பினான். ரயில் நிலையத்தில் சிற்றுண்டிச் சாலை நடத்தும் ஐயர் நின்று கொண்டி ருந்தார்.

"என்ன மாரி, சட்டி பானை செய்யறதை விட்டுட்டு விறகு வெட்டியாயிட்டியா... கையில் என்ன கோடரி" என்றார்.

"ஒண்ணுமில்ல சாமி" என்று மழுப்பிய வாறு, "என்ன சாமி... என்ன வேணும்?" என்று கேட்டான்.

"மாரியப்பா, பிளாஸ்டிக் கப்புகள்ல டீ, காபி ரயில் பயணிகளுக்குக் கொடுக்கக் கூடாதுன்னு உத்தரவு போட்டிருக்காங்க. அதனால தினமும் நீ இரண்டாயிரம் மண் குவளைகள் செஞ்சு கொடுக்கணும். இந்தா அட்வான்ஸ் ஆயிரம்."

ஐயர், சட்டைப் பையிலிருந்து ரூபாய் தாள்களை எண்ணி மாரியப்பனிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

அப்படியே திகைத்துப் போய் அவனால் எறியப்பட்டுக் கிடந்த சக்கரத்தைப் பார்த்தான் மாரியப்பன். அது சுழலுவது போலத் தெரிந்தது.

எட்டயபுரம் ராஜன்



வலம்புரி முத்து

சத்தியப்பிரியன் 29

இப்பொழுதும் கதிரேசன் தன் சொற்ப உடைமைகளுடன் மேன்ஷனில் தான் குடியிருக்கிறான். காலையில் எழுந்ததும் சைக்கிளை எடுத்துக் கொண்டு தாமரையின் ஃப்ளாட்டுக்குப் போய் விடுவான். மதுராவை காப்பகத்தில் கொண்டு விடுவது, அலுவலகம் செல்வது இது போன்றவை தொடர்கின்றன என்றாலும், அவன் ஒரே குடியிருப்புப் பகுதியில் குடியிருப்பது அவளை ஆசுவாசப்படுத்துகிறது. இரவு எட்டு மணிக்கு அவள் வருவதற்கு சற்று முன்போ அல்லது பின்போ வருவான். அவன் உடன் இருப்பதில் அன்றாட சௌகரியங்கள் உண்டு. ஓயாத பேச்சு மனதை ஆற்றுப்படுத்தியது. இரவு பதினொரு மணி வரை பேசிக் கொண்டிருந்தாலும், முடிவில் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு மேன்ஷனுக்குப் போய் விடுவான். தாமரைக்கு அவனால் எந்த மாசும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறான். மாதாந்திர வேலைகளான, மளிகை, மின்கட்டணம், தொலைபேசிக் கட்டணம் கட்டுதல், படுக்கைப் போர்வைகள், தலையணை உறை மாற்றுவது, வீடு தூசி தட்டுவது, பழைய பேப்பரை எடைக்குப் போடுவது, மதுராவுக்கு கதை சொல்லி எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது எல்லாவற்றையும் அவன்தான் பார்த்துக் கொள்கிறான். மதுராவும் அவனிடம், கதிர், கதிர் என ஒட்டிக் கொண்டுவிட்டாள்.

"இவளுக்கு உன்னை என்ன என்று அறிமுகம் செய்வது?" என்றாள் அவன் வந்த புதிதில்.

"வழக்கமா எல்லாப் பெண்களும் தற்காப்பு காரணமா சொல்வது மாதிரி, மாமான்னே கூப்பிடச் சொல்லேன்" என்றான்.

"உதை! உன்னை அவள் கதிர்னே கூப்பிடட்டும்" என்றாள். அதன்பிறகு மதுராவிற்கும் அவன் கதிர் ஆனான்.

கதிரேசனும் இப்பொழுது எட்டு மணி பத்து மணி என கடையில் இருக்காமல், ஏழு மணிக்கெல்லாம் கணக்கைச் சரி பார்த்து ஒப்படைத்துவிட்டு, கிளம்பி விடுகிறான். மதுராவை அநேகமாக அவனே காப்பகத்திலிருந்து பிரத்யேகமாகச் செய்யப்பட்ட வயர் கூடையில் உட்கார வைத்து கூட்டிச் செல்கிறான். நிறுவனத்தில் வேலை பார்ப்பவர் இல்ல விசேடங்களுக்கு, இப்பொழுதெல்லாம் கதிரேசனையும் கூட்டிக் கொண்டு போகிறான். அனைவரிடமும் கதிரேசன் தன் திருமணத்துக்கு முந்தைய காதலன் என அறிமுகப்படுத்த அவள் தயங்குவதே இல்லை.

அருணாசலம் வரும் வரையில் அவர்கள் சந்தோஷமாகவே இருந்தார்கள். அருணாசலம் தான் ஒரு நாள் தொலைபேசியில் அவளுடன் சென்னை வந்ததும் தொடர்பு கொண்டான். தன் அலுவல் காரணமாக தியாகராஜனைப் பார்க்க சென்னைக்கு வந்திருப்பதாகவும், அவளை நேரில் வந்து பார்க்கலாமா எனவும் கேட்டான்.

"வாண்ணே! வந்தேன்னா ஒனக்கு கதிரேசனையும் பார்த்தா மாதிரி

இருக்கன்னு சொல்லலை. ஆனா அப்புறம் ஒரு வாட்டி, நீ இங்கனதான் இருக்க, ஆனா தனியா இருக்கறதைச் சொன்னேன். மொதல்ல அவுக என்னயத்தான் கோவிச்சுக்கிடாக. ஆனா தாமரைக்கு கெத்து உண்டு. சமாளிச்சிக்கிடுறா. அவ தனியா இருப்பதால்தான் சந்தோசமா இருக்கறான்னு சொன்னேன். கேட்டுக்



இருக்கும்" என்றாள்.

"எந்த கதிரேசன்?"

"வள்ளி மெடிக்கல்ஸ் கதிரேசன்"

அருணாசலம் முன்பு இருந்த வண்ணத்தில் இல்லை. குடிப் பழக்கத்தால் வயிறு சரிந்துவிட்டது. முடி மேலேறி விட்டது-அவன் பேசும் தோரணையைக் கேட்டால், அடிக்கடி சென்னைக்கு வருவது தெரிந்தது.

"தியாகராஜன் உன்னை எப்பம் போனாலும் விசாரிக்காம இருக்கவே மாட்டாரு. ரெண்டு வாட்டி நீ எங்கனே கிட்டாரு."

"இப்பவும் போய்ச் சொல்லுண்ணே. நான், மதுரா, கதிரேசன் மூணு பேரும் சந்தோசமா இருக்கோமின்னு"

"சமூகம்னு ஒண்ணு உண்டு தாமரை"

தாமரை கைகளை உயர்த்திக்கும்பிட்டாள். அவள் விழிகள் நேர்ப் பார்வையாக அருணாசலத்தைப் பார்த்தன.

"அண்ணே! நெறையக் கேட்டு நெறைய சலிச்சாச்சுண்ணே. வேணாம்னு தானே நான் இங்கன தனியா இருக்கேன்.

திருப்பித் திருப்பி மூக்கை நுழைப்பீங்கன்னா சொல்லு! நான் பெங்களூருக்கோ, மும்பைக்கோ மாற்றல் வாங்கிட்டுப் போயிடறேன்.''

கதிரேசனும், அருணாசலமும் நேருக்கு நேர் பேசிக் கொள்ளவே இல்லை. அருணாசலம் தான் இருக்கும் அறையில் கதிரேசன் நுழைந்தால், அந்த இடத்தை விட்டு அகல்வதோ, அல்லது அவனை முற்றிலும் தவிர்ப்பது போன்ற பாவத்தை ஏற்படுத்துவது போலவோ, சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டான். ஆனால் கதிரேசனது செய்கைகளில் எந்த மாறுபாடும் இல்லை. அவன் தான் தினம் போல் மதுராவைக் குளிப்பாட்டுகிறான். தினம் செய்யும் ரகளைகளுடன். அறை, அறையாக ஓடுவாள். துரத்திப் பிடிக்க வேண்டும். ஜட்டி போடும்பொழுது கதிரேசன் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும். முதுகில் தூக்கிக் கொண்டு தான் டிரஸ்ஸிங் டேபிள் முன்னால் 'தொப்' என்று போட வேண்டும். அருணாசலம் இருக்கிறானே என்பதற்காக, கதிரேசன் எதையும் குறைக்கவில்லை. கதை கூடச் சொல்கிறான்.

வாயைப் பிளந்து கொண்டு அவன் ஊட்டிவிடும் இட்டிலியையோ, சப்பாத்தியையோ தின்று விடுகிறாள். 'என்ன, எப்பப் பார்த்தாலும் ஊட்டி விட்டுக் கிட்டு' என தாமரையும் கடிந்து கொள்ளாமல் இருப்பதில்லை. அந்த முறை அருணாசலம் கிளம்பிப் போய் விட்டான்.

"கற்புங்கற கான்ஸப்ட் பெண்களை மையமா வெச்சே இருப்பதனால், அதில் சின்ன மாற்றம் ஆனாக்கூட ஆண்களால் தாங்க முடியாமல் போயிடுது. சௌகரியம் கருதித்தானே வாழ்க்கை அமைய முடியும்? அடிப்படையா மனத்தினுள் ஒரு தாமரை உண்டு கதிரேசன், இதயத்தாமரை. விஷயம் என் மாமனாருக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ என நான் பயப்பட வேண்டும். இவன் பயப்படுகிறான். கொடுத்த ஏஜன்ஸியை நிறுத்திவிட்டால் என்ன செய்வது என்ற கவலை அவனுக்கு. மனிதன் கட்டுப்பாடுகள் நிறைந்தவனாகும் பொழுது, சுதந்திரம் இல்லாதவனாகிறான்'' என்றான் கதிரேசனிடம். கதிரேசன் சிரித்தபடி கேட்டுக் கொண்டான்.

ஆனால் அடுத்த முறை அருணாசலம் தனியாக வரவில்லை. விசாலாட்சியும் மகனுடன் வந்தாள். ஆச்சி முன்பிருந்த வாட்டத்துடன் இல்லை. மகன் நன்றாக சம்பாதிக்கிறான் என்பது மனம் நிறைவானாலும், தாமரையைப் பற்றிய கவலை அரித்தவண்ணமே இருந்தது.

விசாலாட்சி வந்த பொழுதும், கதிரேசன் இயல்பாகவே அவன் தினப்படி அலுவல்களைக் கவனித்தான். விசாலாட்சி ஆச்சி கொஞ்சம் குறுகிப் போன தோற்றம் உடையவள் போலக் காணப்பட்டாள். மஞ்சள் பூசிய முகத்தில் நீளமாகத் திருநீறு, குங்குமம் கூடித் தெரிந்தது. முகத்தில் பழைய சோபை இல்லை. மதுராவை காப்பகத்தில் விடவேண்டாம் என சொல்லிப் பார்த்தாள்.

"ஒரு நா பழகிடுச்சுன்னா, நாளைக்கு எம் பொண்ணு ஆயா இங்கனயே இருக்கட்டும் எனக் கேட்கும். இருப்பியா?'' எனக் கேட்டுவிட்டு, காப்பகத்தில் கொண்டு விட்டு அலுவலகம் போய் விட்டான். அருணாசலமும் ஏஜன்ஸி விஷயமாக வெளியில் போய்விட்டான். மதுரா வீட்டில் தான் இருப்பாள் என்ற நினைப்பில் இரவு கடையிலிருந்து வந்த கதிரேசனுக்கு, மதுரா வீட்டில் இல்லை எனத் தெரிந்ததும் பதறிப் போனது. ஓடிப் போய்க் காப்பகத்திலிருந்து பிள்ளையை அழைத்துக் கொண்டு வந்தான்.

"கல்யாணம் காலை ஆறு மணிக்குத் தொடங்கணும். முகூர்த்தம் பத்து மணிக்குத் தொடங்கணும். சாப்பாடு ஒரு மணிக்குத் தொடங்கணும்!"

''மொய் எழுதறது எப்படித் தொடங்கணும்!''

''நூறு ரூபாயில இருந்து தொடங்கணும்!''


- கே.ஜி.எஸ். கோவிந்தன்

ஆயாவிடம் கூட மதுரா அவ்வளவு ஒட்டவில்லை. எல்லாச் செயல்களுக்கும் கதிரேசனை எதிர்பார்த்தான். 'கதிர் கதை சொல்லு! கதிர் தண்ணி எடுத்துட்டு வா! கதிர் சோறு ஊட்டு!' அவனுடைய அத்தனை கட்டளைகளையும் அவன் தலைமேற்கொண்டு செய்தான்.

"பிள்ளை கதிரேசன் கிட்ட நல்லா ஒட்டிக்கிருச்சு'' என்று விசாலாட்சி ஆரம்பித்தாள். இரவுச் சாப்பாட்டின் பொழுது கதிரேசனும், அருணாசலமும் அருகருகே அமர்ந்திருந்தாலும் பேசிக் கொள்ளவில்லை. தாமரை அலுவலகத்தில் விருந்து என்பதால், சாப்பிடாமல் ஹாலில் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள். கவனம் எல்லாம் இன்னும் துவங்கப்படாத நியாயத்தின் மேல்தான்.

''ஒட்றவங்க கிட்ட ஒட்ட மாட்டேங்குதே" என்றான் அருணாசலம். 'ஒட்றா மாதிரி நடந்துக்கிட்டா ஏன் ஒட்டாது' என்ற கேள்வி தாமரையின் நாக்கு நுனிவரை வந்துவிட்டது. பழைய தாமரையாய் ஆத்தா வீட்டில் இருந்த பொழுது அடுத்தவர் மனதைக் காயப் படுத்தும் நோக்கத்துடனே பேசிய தாமரையாய் இருக்க அவள் பிரியப்படவில்லை. இரண்டே நிமிடத்தில் குரல் எழுப்பி அருணாசலத்தை வெளியில் போகச் சொல்லிவிடலாம். நாங்கள் என்ன பாவம் செய்தோம்? நிம்மதியாக உண்டு, நிம்மதியாக சாப்பிட்டு, சந்தோஷமாக விவாதம் பண்ணி வாழ்வது ஏன் இவர்கள் கண்களை உறுத்துகிறது?

''குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்றாள் விசாலாட்சி. தாமரைக்குத் தூக்கிவாரிப் போட்டது. அம்மாவா இப்படிப் பேசுவது? கதிரேசன் மிகவும் நல்லவன் என்ற தோற்றத்தை நிறுவிவிட்டானா? இல்லை, அம்மாவின் இதயத்தில் யுகம், யுகமாய் அடிமைப்பட்டு மக்கிப்போன பெண் வெளியில் வந்து பேசுகிறாளா?



"ஊரு கொண்டாடணுமில்ல செய்யிற காரியத்தை?'' மகன் விடுவதாக இல்லை எனப் புரிந்தது. செயல்கள் மூலம் புரிந்து கொள்ள விருப்பப்படாதவர்களுக்கு, சொல்லிப் புரிய வைக்க வேண்டியிருக்கிறது.

"ஊரு கொண்டாடி என்ன செய்யப் போகிறோம்? என் பொண்ணு தாலி அறுத்தப்ப ஊரா வந்து ஆதரவு காட்டிச்சு?" என்றாள்.

'நாம என்ன தெருவுலயா கொண்டு தள்ளினோம்?''

"இல்லாட்டி புள்ள இங்கன ஒத்தைக்கு வந்து வேலை பார்க்குமா? அது மனசுல ஒண்ணு விளுந்து போயிருக்கும். அதும்படித்தானே போகுது. தப்பா ஒண்ணும் போகலியே. தெனம் சாமி கும்பிடுவதிலயோ, புள்ளைக்குத் தமிழில் தெய்வபக்தியோட நாலுபாட்டு சொல்லிக் கொடுப்பதிலோ குறை வைக்கிறாளா? ஊருக்கு வாரதில்லையே தவிர, போனில் கூப்பிட்டுப் பேசாம இருக்காளா? பொங்கல், தீபாவளி, பொறந்த நாளுக்கு வாழ்த்து அட்டை அனுப்பாம இருக்காளா? எல்லாஞ் செஞ்சுகிட்டு சந்தோசமாத்தானே இருக்கா''

"எந்த பந்தமுமே இல்லாத ஒருத்தனோட தொடர்பு வச்சிருக்காளே, அது என்ன மொறை?'' என்றான் அருணாசலம்.

ஆவேசமாக தாமரை எழுவதற்குள் விசாலாட்சியே காட்டமாக மகனைப் பார்த்துக் காறி உமிழ்ந்தாள்.

"இது மாதிரி பேசுறதோ, இது மாதிரி ஒரு நெனப்போ உனக்கு இதுவே கடைசியா இருக்கோணும்.''

''ஒங்கிட்ட பேசி என்ன பிரயோஜனம்? நான் பேசறவங்ககிட்ட பேசிக்கிறேன்'' என்று அருணாசலம் கூறிவிட்டான்.

'பேசறவங்க கிட்ட பேசிக்கிறேன்' என அவன் சொன்னதை நினைத்துப் படுத்துக் கிடந்த தாமரை, ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

(தொடரும்)



அதிர்ச்சி உண்டு; அழிவு இல்லை!

ஆசிரியர் பக்கம்

நடக்கக் கூடாதது நடந்து விட்டது. நேபாளம் முதல் கன்யாகுமரி வரை ஆஸ்திக அன்பர்கள் மனங்களில் அதிர்ச்சி அலை பரவியுள்ளது.

வெறும் வாயை மெல்லுகிற தமிழக நாத்திக அமைப்புகளுக்கு ஒரு பிடி அவல் கிடைத்து விட்டது. ருத்திராட்சங்களும், மூட நம்பிக்கைகளும், மடங்களும் ஒட்டு மொத்தமாக மென்று அரைபடுகின்றன. கூடவே, 'இந்தப் பிடி அவலை அவர்களுக்கு வழங்குகிற விதமாக ஜயேந்திரர் நடந்து கொண்டிருக்க வேண்டுமா?' என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

எதையும் அரசியல் ஆக்கும் கட்சிகள் இந்தச் சம்பவத்தையும் விட்டு வைக்கவில்லை. ஜயேந்திரர் சார்ந்துள்ள ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பி.ஜே.பி. இயக்கங்கள் ஜயேந்திரர் கைதைக் கண்டனம் செய்துள்ளன. ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளன. 'கிறிஸ்துவ மதத்தின் மதிப்பை உயர்த்த சோனியா செய்த சூழ்ச்சி' என்று கூட அறிக்கை விடப்பட்டால் வியப்பதற்கில்லை!

பரபரப்பைக் காசாக்கக் காத்திருக்கும் பத்திரிகைகளுக்கு, செய்திகளுக்கும் கற்பனைகளுக்கும் கொஞ்ச நாட்களுக்குப் பஞ்சமில்லை.

இத்தனையிலும் ஓர் ஆச்சர்யம், கருணாநிதியின் கண்டனத்துக்கு உட்படாத ஒரே ஒரு காரியத்தை 'ஜெ' செய்து விட்டதுதான்! "சட்டம் அனைவருக்கும் சமம்; அது ஏற்றத்தாழ்வு பாராது" என்று 'ஜெ' கூறியது ஏற்கத்தக்கதே. ஆனால் சட்டம் அனைவர் விஷயத்திலும் அப்படி நடந்து கொள்கிறதா?

வழக்கு நடந்து தீர்ப்பு வெளிவரும் வரை, அது பற்றி அபிப்பிராயம் கூறுவது தவறு. எனினும் பொதுவான சில சிந்தனைகளை முன் வைக்கலாம்:

இந்த நிகழ்வினால் ஆத்திகத்துக்கோ, இறையுணர்வுக்கோ எந்தவிதமான பின்னடைவும் ஏற்பட்டு விடாது. அஞ்ச வேண்டியதில்லை.

"நான் அப்பாவி" என்கிறார் ஜயேந்திரர். இருக்கலாம். ஆனால் அவர் நாளை விடுதலையாகி வந்தால் கூட பழைய கௌரவத்தைத் திரும்பப் பெற முடியாது. துறவி, மடத்தின் பொறுப்புக்களிலிருந்தும் துறவறம் மேற்கொள்வதே நல்லது.

ஆத்திக அன்பர்களுக்கும், காஞ்சி மடத்தைச் சார்ந்த பக்தர்களுக்கும் ஒரு வார்த்தை: மனம் தளராதீர்கள். பதவி வேறு; பதவியை அலங்கரிப்பவர் வேறு. முதல்வர் பதவி என்பது முதல்வரை விட முக்கியமானது. அவ்வாறே பிரதமர் பதவி, குடியரசுத் தலைவர் பதவி போன்றவை. அதேபோல் பீடம் என்பது பீடாதிபதியை விட உயர்ந்தது. காஞ்சி காமகோடி பீடத்தை வணங்குங்கள். ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்டு சந்திரசேகரர் அமர்ந்து அருள்பாலித்த அந்தப் பீடத்தின் மதிப்பை மீட்டு, மேலும் உயர்த்த ஒருவர் வருவார் என்ற நம்பிக்கையுடன், நாடு நலம் பெற காமாட்சியையும் ஏகாம்பரேசுவரரையும் பக்தியுடன் வழிபடுங்கள். ●



கல்கி வழங்கும்
சென்னை ஸ்ரேஞ்
கல்கி ஜன்னலில் ஒரு மின்னல்!
(சென்னை வாசகர்களுக்கு மட்டும்)

8 பக்கங்கள் 21 நவம்பர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

சி.ஐ.பி யார் அந்த கிருஷ்ணா?

தேசிய விருது கிடைக்கும் என்று அனைவருமே சத்தியம் செய்தார்கள். அது பொய்த்துப் போனது. இறுதியில் நீண்ட எதிர்பார்ப்புகளுக்குப் பிறகு கன்னத்தில் முத்தமிட்டால் படத்திற்காக 2001ம் ஆண்டிற்கான சிறந்த பாடகி விருதை தமிழக அரசிடமிருந்து பெறவிருக்கிறார் இளங்குயிலான சின்மயி. இன்னமும் அந்த சந்தோஷத்திலிருந்து மீளாதவரை பேட்டி கண்டோம்.

பாடிய முதல் பாடலே (தெய்வம் தந்த பூவே) விருது வாங்கிக் கொடுத்தது பற்றி?

எல்லாப் பெருமையும் கிருஷ்ணாவுக்கே! அந்த வருஷம் ஸ்ரேயா கோஷல்தான் தேசிய விருது வாங்குவாங்கன்னு தெரியும். அதனால் அதை நான் எதிர்பார்க்கவேயில்லை. தமிழக அரசு விருது கிடைச்சதுல ரொம்ப பெருமைப்படறேன்.

அந்தப் பாட்டுல அழகா சோக கீதம் பாடினீங்க...

கிருஷ்ணா... ஆ! இந்த கமெண்ட்டைக் கேட்டா ஆச்சர்யமாயிருக்கு. அப்போ எனக்கு பதினைந்து வயசு. திடீர்னு ரஹ்மான் ஸ்டுடியோவிலிருந்து கால் வந்து போய் பாடிட்டு வந்தேன். அவ்வளவுதான். மணிரத்னம் படங்கிறதால ஒரு தகவலும் சொல்லலை. அது சோகமான பாட்டுங்கிறதுகூட எனக்குத் தெரியாது. இப்போ இருக்கிற எந்த இசையமைப்பாளரும் பாடலுக்கான சிச்சுவேஷனை, யாருக்காக பாடறோம் கிறதையெல்லாம் சொல்வது கிடையாது.

சின்மயி தமிழ்ப் பெண்ணா?

ஆமாம். ஆனா என் அம்மா அறிவுரைப்படி பல மொழிகள் கத்து வைச்சிருக்கேன். தமிழ், ஹிந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு போன்ற மொழிகளை பள்ளி நாட்களில் படிச்சிருக்கேன். இப்போ ஜெர்மன், ரஷ்யன் மொழிகள் படிச்சு மொழி பெயர்ப்பு வேலைகள் பண்றேன். பிரெஞ்ச் கத்துக்குங்கன்னு ஆபிஸ்ல சொன்னதால அடுத்து பிரெஞ்ச் கத்துக்கப் போறேன்.

இன்று தமிழ்த் திரையுலகில் ஏராளமான பாடகிகள். இதனால் உங்களுக்கென்று தனி அடையாளங்கள் கிடைப்பதில்லையே.

இல்லையே. எனக்குக் கிடைத்துள்ளதே. சோகமான பாடல்கள் பாடினா அது சின்மயிதான் பாடினதுன்னு கலபமா கண்டுபிடிச்சிடறாங்க. அதே மாதிரி டப் [illegible] அது லேசா பார்த்தசாரதின்னு முடிவு பண்ணிடறாங்க. வித்தியாசமான பாடல்கள் கொடுங்கன்னு நாங்களும் கேட்டுட்டு வர்றோம். என்னைப் பொறுத்தவரைக்கும் நான் யார் மாதிரியும் பாடுவது கிடையாது.

உங்களைப் பற்றி புதிதாக ஏதாவது சொல்லுங்களேன்.

நான் ஜெர்மன் மொழி பெயர்ப்பு பண்றது யாருக்கும் தெரியாதது. சைகாலஜி படிக்கிறேன். இதன்மூலமா டைவர்ஸ் நோக்கி போகிற இளம் தம்பதிகளுக்கு கவுன்சிலிங் செய்யவுள்ளேன்.

நீங்க படிச்ச சைக்காலஜியிலிருந்து ஏதாவது எடுத்து விடுங்களேன்.

ம்... இன்னைக்கு டைவர்ஸ் பண்ற பலபேரை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் சாப்ட்வேர் இன்ஜினியர்கள்தான் திருமணம் செய்து உடனடியாக டைவர்ஸுக்கு அப்ளை செய்வதாகத் தெரிகிறது.

மறக்க முடியாத பாராட்டு + போன்கால்...

சமீபத்துல முதல்வருக்கு பாராட்டு விழா நடந்தப்போ நான் 'தெய்வம் தந்த பூவே' ஆரம்பிச்ச போது அந்த நேரு ஸ்டேடியமே ஆர்ப்பரிச்சு கைதட்டுச்சு. அப்புறம் தமிழக அரசு விருது பட்டியல் அறிவிச்சபோது ரஹ்மான் சார் போன் மூலமா கூப்பிட்டு பாராட்டினாரு. கிருஷ்ணா, இது ரெண்டும் ஆயுசுக் [illegible] மறக்க முடியாதது.

கடுப்பான விஷயம்?

ஒரு தடவை சொல்வாயா (வசீகரா), கிறுக்கா கிறுக்கா காதல் கிறுக்கா... (விசில்), சந்திப்போமா இருவரும் சந்திப்போமா (எ20,உ18), ப்ளீஸ் சார் (பாய்ஸ்), கொஞ்சம் நேரம்





குச்சுபுடி (நியூ), மைனாவே மைனாவே (திக்திக்குதே), புது காதல் காலமிது (புதுக்கோட்டை சரவணன்) பாடல்களெல்லாம் நான் பாடினதுதான். ஆனா இது யாருக்குமே தெரியறதேயில்லை. தற்போதைய பாடல்கள் அளவுக்கு பாடகர்களை மக்கள் தெரிஞ்சுக்கிறதில்ல.

யாரிடம் மன்னிப்புக் கேட்க விருப்பம்?

ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு தோன்றி பிரச்னை வரும். ஆனால் அந்த மனிதரோடு வாழ் நாள் முழுவதுமே பேசாமல் இருப்பார்கள். இப்படி புரியாமல் சண்டை போடுபவர்களிடம் எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிப்புக் கேட்கலாம். வேறு வழி?

எந்தப் பாடல் வரிகள் உங்களுக்கானது?

'சின்ன சின்ன ஆசை' பாட்டைச் சொல்லலாம். அதுமாதிரி நிறைய ஆசைகளுண்டு.

சரி, ஒரு பர்சனல் கேள்வி. அடிக்கடி 'கிருஷ்ணா கிருஷ்ணா'ன்னு சொல்றீங்களே. அவர் வந்து...

ஐய்யோ கிருஷ்ணா. அவர் பரமாத்மா கிருஷ்ணருங்க. நீங்க வேற... ஏதும் கிகிகி எழுதிறாதிங்க. ராதை கோவிச்சுக்கப் போறாங்க.

ச.ந.கண்ணன்

ராஜன்



மச்சான் பேரு கவாஸாக்கி!

நம்மை விட ஜப்பானியர்கள் நன்றாக 'தமிழ் படம்' எடுக்கிறார்கள். நம்பிக்கை இல்லாதவர்கள் 'தி அயர்ன் ஃபிஸ்ட்' எனும் படத்தைப் பார்த்துக் கொள்ளலாம். 'மச்சான் பேரு கவாஸாக்கி' போன்ற அறிமுக பாடல் மட்டும் தான் இல்லை. பாக்ஸிங் செய்யும் ஹீரோவை ஸ்லோ மோஷனில் இழுத்து இழுத்து காட்டுகிறார்கள். மூசி மூசி போசி போசி என்று மூக்கையும் உள்நாக்கையும் மடித்து அவர்கள் பேசும் வசனங்கள் நல்ல தமாஷ். ஆங்கில சப்டைட்டிலை படிக்காமல் ஒருவர் முகத்தை மட்டும் பார்த்தால் அவர் வயிற்று வலியால் அவதிப்படுகிறாரா அல்லது காதல் வசனம் பேசுகிறாரா என்றே தெரியவில்லை. இரண்டுக்கும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான முக அமைப்பு. ஒரே உணர்ச்சி.

இது வரை வந்த தமிழ்ப் பட வில்லன்களையெல்லாம் அப்படியே அல்வா போல தூக்கிச் சாப்பிட்டு விட்டு ஒரு அட்டகாச வில்லன் வருகிறார். வில்லன் என்றால் அப்படி பொரு வில்லன். இவருக்கு மொத்தம் ஆறு அடியாட்கள். மோட்டார் பைக்கில் யூனிபார்ம் அணிந்து டிபன் பாக்ஸ், ஜியாமெட்ரி பாக்ஸ், வீட்டுப் பாடம் எல்லாம் எடுத்துக் கொண்டு வட்ட வட்டமாக சர்க்கஸ் கூடி போல சுற்றிச் சுற்றி வருவார்கள்.

தலைமை வில்லன் வேறொருவருடைய பைக்கில் அவர் முதுகோடு முதுகாக ஒட்டி பின்புறமாக உட்கார்ந்து கொண்டிருப்பார். சுற்றுபவர்களைப் போய் பார்ப்பார், முறைப்பார். 'என் ஸ்கேலை கொடு' என்று சண்டை போடும் ஒன்னாங் கிளாஸ் பையனைப் போல கத்துவார். அடியாட்கள் வந்து அவரை மொத்துவார்கள். மறுபடியும் வண்டியில் ஏறி போய் விடுவார். இரண்டு சக்கர வாகனத்திற்கு ட்ரைவர் வைத்துக் கொண்ட முதல் அதி பயங்கர வில்லன் இவராகத்தான் இருக்க வேண்டும்.

சரி க்ளைமேக்ஸில் பார்த்துக் கொள்ளலாம், ஏதாவது வித்தியாசமாகச் செய்து இருப்பார்கள் என்று பொறுத்திருந்தால், தடாலென்று படமும் முடிந்து விட்டது!

மருதன்



பொலிட் ஹீரோ

• ஏற்கெனவே நடைபெற்ற 'வெவிட்' குறைப்பு நடவடிக்கையால் ரொம்பவும் நொந்து போயிருந்த மீனவ நண்பருக்கு வெகு விரைவில் விடுதலை காத்திருக்கிறதாம். அவர் வெளியேறும் பட்சத்தில் அந்த இடத்திற்கு வர இருப்பவர் ஏற்கெனவே அம்மாவால் கொம்பு சீவி விடப்பட்டவரான வடசென்னைக்காரர் தானாம். மாநகராட்சி மன்ற ரத்தங்களின் ஏகோபித்த செல்வாக்கினை இவர் பெற்றிருப்பதால் இவர்தான் சரியான மாற்று என்று நம்புகிறதாம் தலைமை. இதனை ஏற்கெனவே ஒரு மீனவ நண்பினை இழந்த மாற்று முகாம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறதாம்.

• மத்திய அரசின் அதிரடி நடவடிக்கையான பெட்ரோல் - டீசல் விலை உயர்வுக்கு கூட்டணிக் கட்சிகளின் தரப்பிலிருந்தே எதிர்ப்பு (!) பலமாக கிளம்பியுள்ள நிலையில் தற்போது இவ்விவகாரம் லாரி - ஆட்டோ டிரைவர்களால் விஸ்வரூபம் எடுக்க உள்ளதாம். இதனைத் தடுக்க உடனடியாக கூட்டணிக் கட்சித் தலைவர்களின் ஆலோசனை (சமாதான)க் கூட்டம் நடக்க உள்ளதாம். இதில் கலந்து கொள்ள தற்போது இடது சாரிகள் ஆர்வம் காட்டவில்லையாம். (எப்பொழுது காட்டுவார்களாம்?)

• ஜயேந்திரர் கைது விவகாரத்தில் தாங்கள் வெற்றி பெற்றதுபோல ரொம்பவும் குஷியாகக் கொக்கரித்து வருகின்றனராம் உடன்பிறப்புகள். ஆனால் இது நமக்குக் கிடைத்த வெற்றியா - தோல்வியா எனத் தெரியாமல் குழம்பியிருக்கும் ரத்தங்கள் தற்போது விவரம் தெரியாமல் பேசி மாட்டிக் கொள்ளக் கூடாது என்று ஒருவருக்கொருவர் மாய்ந்து மாய்ந்து அட்வைஸ் மழை பொழிந்து கொண்டு வருகிறார்களாம்.

• த.மா.கா. இணைப்புக்குப் பின் பலரை தன்வசம் வைத்திருந்த இளங்கோவன் தன்னுடைய பலத்தை மெல்ல இழந்து வருகிறார் என்ற தோற்றத்தை ஏற்படுத்த முயன்று வருகிறதாம் எதிர்தரப்பு. இதை உறுதிபடுத்தும் விதமாக அவரது ஆதரவாளர்கள் பலருக்கு வெற்றி வாய்ப்பு இட்டவில்லையாம். ஆனால் அவரது ஆதரவாளர்களே "எங்கள் தலைவர் ஒரே அறிக்கையில் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டு விடுவார்" என்று அசால்டாகப் பேசிவருகிறார்களாம்.



• கத்திப்பாரா நேரு சிலைக்கு மாலை போட ரொம்பவும் தடபுடலாக ஏற்பாடுகள் தயாரானது ஒரு சில காங்கிரஸ்காரர்களை ரொம்பவும் வருத்தமடையச் செய்து விட்டதாம். இதிலென்ன வருத்தம் என்கிறீர்களா? இதுவரை அநியம் கண்டு கொள்ளப்படாமல் இருந்த சிலைக்கு மாலை போட விரும்புகிறவர்களுக்காக எதற்கு இவ்வளவு செலவழித்து படிகள் தயார் செய்வானும் - வீண் வேலை தானே என்கிறார்கள்.

கலை

மழை சொல்லும் சேதி



ஏற்கெனவே உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சாலைகளை ஒட்டுமொத்தமாக பல்லிளிக்கச் செய்து - அதன் காரணமாக ஆங்காங்கே உயிரைப் பறிக்கக் காத்திருக்கும் பள்ளங்களை ஏற்படுத்தி போக்குவரத்து சிக்கல்களை ஏற்படுத்தி, டிராபிக் போலீசாரின் பிழையை எகிற வைத்து-ஒரேயடியாக பெய்துவிட்டு ஓயாமல் நாசமென செய்து வியாபாரத்தை ஒட்டுமொத்தமாக நாசப்படுத்தியது என்று சென்னை மக்களின் ஒட்டுமொத்த வயிற்றெரிச்சலையும் ஏகபோகமாய்க் கொட்டிக் கொண்ட மழை, தற்போது விரைவில் சென்னை மக்களை தொற்றவிருக்கும் மலேரியா, ஃப்ளு, காலரா போன்ற நோய்களுக்கும் நான் தான் காரணகர்த்தா என மார்தட்டிக் காத்துக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து மழை பொழிவதால் பல்வேறு இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டு விட்டன. இவற்றில் மழை நீரானது பெருமளவில் தேங்கி விடுவதால் அங்கு கொசுக்கள் பெருமளவில் உற்பத்தியாகிவிடுகின்றன. இதன் காரணமாக மலேரியா, ஃப்ளு, காலரா போன்ற நோய்கள் பொது மக்களை குறிப்பாக நடைபாதைகளில் வசிப்பவர்களை தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி தேங்குகின்ற அசுத்த மழை நீரானது சாலைகளில் இருக்கும் குடிநீர் குழாய்களில் இருக்கும் மூடப்படாத துவாரத்தின் வழியே உட்சென்று கலந்து விடுகின்றன. இதைப் பயன்படுத்தும் போது கிருமிகள் நம்மைத் தாக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம். இதைத் தடுக்க வேண்டுமெனில் உடனடியாக சென்னை மாநகராட்சியானது தமது நோய் தடுக்கும் பணியினை விரைந்து மேற்கொண்டு சென்னை மக்களை மாபெரும் ஆபத்திலிருந்து மீட்டு தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளுமா?

முத்து

ராஜன்

∴போக்கஸ்

சென்னையில் வசிக்கும் அரசு ஊழியர்களை எஸ்மா, டெஸ்மாவைக் காட்டிலும் அதிகமாக கனவிலும், நினைவிலும் அநியாயத்துக்கு மிரட்டி வரும் ஒரே விஷயம், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அரசுக் குடியிருப்புகள்தாம். குறிப்பாக பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பில் உள்ள வீடுகள், தற்போது மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாகத் தொடர்ந்து செய்திகள் - புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அப்படி என்ன விபரீத நிலை அங்கு நிலவுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பை அக்குவேர் ஆணிவேராக அலசினோம்.

புகார்களை வீராவேசமாகவும், உருக்கமாகவும் எழுதும் பொது மக்கள், நேரில் சென்று விசாரித்தால் தகவல் தர பெரிதும் அஞ்சுகின்றனர். காரணம் அவர்கள் அரசு ஊழியர்களாக இருப்பதுதான் என்பதை உணர்ந்ததும், ஃபோட்டோவா, பெயரோ போடமாட்டோம் என நாம் உறுதியளித்தோம். அதன் பேரிலும் நம் கல்கி - சென்னை ஸ்கேன் மீது கொண்ட நம்பிக்கையாலும், பலர் ஆர்வமுடன் குறைகளை தரம் வாரியாகப் பிரித்து கொட்டினர்.

"சார்! இங்க இருக்குற மொத்த

உதிரும் உத்திரம்.. பதறும் பட்டினப்பாக்கம்!

வீடுகள் கிட்டத்தட்ட ஆயிரம் இருக்கும். இதெல்லாம் கட்டி ஏகப்பட்ட வருடங்கள் ஆகிவிட்டதால, வீட்ல இருக்குற ஒவ்வொரு பகுதியும் உளுத்துப் போயிட்டுது. வாசப்படியில ஆரம்பிச்சு, மொட்டை மாடி வரைக்கும் எல்லா இடத்துலயும் பிரச்னை இருக்கு. வாசப்படி முக்கால்வாசி அரிச்சிப் போயிருக்கு. கதவை மழைக் காலத்துலயும் சாத்த முடியாது - வெயில் காலத்துலயும் சாத்த முடியாது. ஜன்னல் கதவு பெயரளவுல இருக்கு. சுவரைப் பார்த்தீங்கன்னா முழுசா ஒதங் காத்து, உப்புப்பூத்து இருக்கும். உத்திரம் வெடிப்புகளின் மொத்தக் குத்தகையா இருக்கு. அது மட்டுமில்ல, எப்போ வேணும்னாலும் தலையில விழ காத்துக்கிட்டு இருக்கு" என்று சரமாய் வெடித்துவிட்டு நகர்கிறார் அங்கு வெகு நாட்களாய் குடியிருக்கும் ஒருவர்.

"அவர் சொல்றது ரொம்ப தப்புங்க(!) எப்போ வேணும்னாலும் தலையில விழ காத்திருக்கு இல்ல. ஏகப்பட்ட தடவை கீழ விழுந்தே இருக்கு" என்று அதிர்ச்சி கொடுத்தார் ஒரு நடுத்தர வயது அரசு ஊழியர் "இந்த வீடுகளின் மாடிப் படிகட்டுகளின் உயிர் ஊசலாடத்துவங்கியே ஏறக்குறை பத்து வருடங்கள் ஆகிவிட்டது. இது வரை அதைச் சரி செய்ய முன்வராமல் இருப்பது வேதனையிலும் வேதனை" என்று கூறிவிட்டு தம் வீட்டிற்குள் அழைத்துச் சென்று உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

சாக்கடை நீர் அடைத்துக் கொள்வது சராசரிப் பிரச்னையாக இருப்பினும், அதிகம் பேர் வசிக்கக் கூடிய, நெருக்கடி மிகுந்த பகுதியாக இருப்பதால் இவர்கள் இப்பிரச்னையில் எதிர் கொள்ளும் இன்னல்கள் ரொம்பவும் அதிகமாம். அதுமட்டுமின்றி பல்வேறு வீடுகளின் முகப்பில் இருக்கும் 'போர்டிகோக்கள்' இரண்டாய், மூன்றாய்ப் பிளந்து, இதோ - அதோ நிலையில் இருப்பதையும், அத்தகைய வீடுகள் இரண்டாம் மூன்றாம் தளத்தில் இருப்பதால் அங்கு வசிக்கும் மக்களின் நிலையை நினைத்துப் பார்த்தவுடன் நமக்கு ஒரு கணம் தலையே சுற்றிவிட்டது.

ஒவ்வொரு பிளாக்கிலும் இருக்கும் 'தண்ணீர் மோட்டார் அறை' இருக்கும் நிலை, அவற்றால் நிகழ வாய்ப்பிருக்கும் விபத்துகள் நினைத்த மாத்திரத்திலேயே நமக்கு பேரதிர்ச்சியைத் தந்தது.



ராஜன்

"இதையெல்லாம் அரசுதான் சரி செய்து தரணுமா - ஆபத்து அதிகமாய் இருப்பதால் நீங்களே சரி செய்து ஆபத்தை தவிர்க்கலாமே" என்றால், "அப்படி இடையிடையே பலமுறை செய்து கொண்டேயிருந்ததால் தான் இப்போது உங்களுக்கு பேட்டி கொடுக்க முடிகிறது. அப்படி செய்யாமலிருந்திருந்தால் எப்போதோ சமாதியாகி இருப்போம். ஏதோ எங்களிடம் இருக்கும் வசதிக்கு ஏற்ப அவ்வப்போது சரி செய்து கொள்வோம். இருந்தாலும் 'யானைப் பசிக்கு சோளப் பொறி' கதைதான் நாங்கள் செய்வது. பிரச்னை அதிகமாக இருப்பதால் அரசு முன்வந்தாலொழிய எங்களுக்கு விடிவு கிட்டாது" என்று அதிரடியாய்ப் பேசிவிட்டு பொது மக்கள் விலகத் துவங்கினர்.

இவற்றையெல்லாமாவது ஓரளவுக்குப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் பாழடைந்ததன் காரணமாக காலியாக இருக்கும் வீடுகள் தற்போது சமூக விரோதக் காரியங்களுக்கு இடமாகி, அப்பகுதி மக்களை மனரீதியாக மேலும் பாதிக்கச் செய்துவிடுமோ! என்பதுதான் பலரது அச்சம். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து களமிறங்கி அப்பகுதி மக்களுக்கு ஏதாவது உருப்படியாகச் செய்வார்களா???

இவற்றையெல்லாம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து பொறுமையிழந்த பலர் இக்குடியிருப்பிலிருந்து விடுதலை வாங்கிக் கொள்ள முடிவெடுத்து விட்டனராம். ஒரு வேளை பலர் வீடுகளைக் காலி செய்துவிட்டு சென்றாலாவது, இத்தகைய வீடுகளைப் புதுப்பித்து தரும் எண்ணம் அரசுக்கு வராதா, என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள் பட்டினப்பாக்கம் அரசு குடியிருப்புவாசிகள்!

- இரா. முத்துக்குமார்



✉ ஷோ-கேஸில் வைக்கப்படும் பொம்மைகள் அல்ல இவர்கள். உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்த பிஞ்சுகள் - என ராக்கெட்டுகள் எழுதிய(தில்) ஒரு க(வி)தையும் இருந்தது.

சிம்மவாஹினி, வியாசர்காலனி.

✉ யோகக் குழந்தைகளுக்கு யோகா கற்றுத்தரும் யோகம் விரைவில் எல்லா பள்ளிகளுக்கும் கிட்டட்டும்.

சந்திரசேகரன், வண்ணாரப்பேட்டை

✉ காணாமல் போய்விட்டவர்கள் - டாக்கில் டாக்கில் அறிவித்துள்ளீர்கள். கண்டுபிடித்து தருபவர்களுக்கு எவ்வளவு சன்மானம் தருவீர்கள் என்று சொல்லவில்லையே!

அகஸ்தியா, திருவான்மியூர்

உங்கள் கருத்துக்களை chennaiscan@kalkiweekly.comல் மெயிலலாம்.

டாக்கீஸ் டாக்

தீபாவளியன்று சிறைபிடித்த இடியட் பாக்ஸ்?



இந்த முறையும் தமிழக மக்களை எங்கும் நகர விடாமல் உற்றார் உறவினர்களோடு பழகவிடாமல் கட்டிப்போட்டன, தனியார் தொலைக்காட்சிகளின் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள்.

எல்லாத் தொலைக்காட்சிகளிலும் யாரும் பார்க்காத அதிகாலை வேளையில் பக்திப் பாடல்கள் கர்நாடக, ஹிந்துஸ்தானி வடிவங்களில் வழங்கப்பட்டன.

காலை 8 மணிற்குள் 'சத்ரபதி'யில் சரத்-நிகிதாவின் மிக நெருக்கமான டூயட் பாடல் குறைந்தபட்சம் 50 முறையாவது ஒளிபரப்பப்பட்டு விட்டன.

'வணக்கம் தமிழகம்' நிகழ்ச்சியில் சரத் தன் குடும்பத்தோடு வந்திருந்தார். பாவாடை தாவணியில் ரேயானைப் பார்த்தபோது ஆச்சர்யமாக இருந்தது. ரேடான் தயாரிப்பில் வெகு சீக்கிரத்தில் ஒரு புது ஹீரோயின் அறிமுகப்படுத்தப் படலாம்.

விஜய் டி.வி.யின் லியோனி பட்டிமன்றத்தில் வழக்கம்போல் தமிழ் சினிமாவை நார்நாறாக கிழித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பேச்சாளருக்கு ஆட்டோகிராப் படத்தில் சிநேகாவின் காதலை காண்பிக்கவேயில்லையே என ஆதங்கப்பட்டுக் கொண்டே ஜோக்கடித்தார். இப்படி ஒவ்வொருவர் ஆட்டோகிராபையும் சேரன் தனித் தனியே காண்பித்திருந்தால் இன்று வரைக்கும் படம் முடிந்திருக்காது.

சென்ற தீபாவளியைப் போலவே இந்த முறையும் விக்ரம் எல்லாச் சேனல்களையும் ஆக்ரமித்திருந்தார். 'கெட், செட் கோ' என்று விஜய் டி.வி.யில் மட்டும் வித்தியாசமாக பைக்கின் மூலம் ஊர் சுற்றினார். மற்றபடி எந்தச் சேனல் திரும்பினாலும் அலை வரிசை கூந்தலில் மீசையின்றி விக்ரம் இன்றைக்கும் நடிக்க வந்தது எப்படி, சேது உருவானது பற்றி பேசிக் கொண்டிருந்தது டு, த்ரி, ஃபோர், ஃபைவ் ஹன்ட்ரட் மச்.

சியான் போல எல்லா டி.வி.களிலும் நீக்கமற நிறைந்தவர் '7ஜி' ஹீரோ ரவிகிருஷ்ணா. பாவம் எல்லா சேனல்களிலும் கேட்கப்பட்ட ஒரே மாதிரியான கேள்விகளால் பதில்களில் கொஞ்சம் சோர்வு தெரிந்தது.



ஆச்சர்யம், பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்க மறுக்கும் சோனியா அகர்வாலை டி.வி.களில் காண முடிந்தது. தமிழில் பேசுவதற்கே பயம். டபுள் மீனிங்காக எக்குத் தப்பாகப் பேசிவிடுவேனோ என்று தயங்குவேன் என்றவருக்கு, வணக்கம், நன்றி என்கிற தமிழ் வார்த்தைகள் மட்டும் தெரிந்திருக்கிறது (அடடா, இதுகூட பல தமிழ்ப் பெண்களுக்குத் தெரியாதே), பிறகு உதடு ஒட்டி ஒட்டி 'கண் பேசுªம் வார்தகள் புர்யவீலை, காத்ரிந்தால் மனம் ப்ரியுவில்லை" என்று தடம் புரண்டு பாடிக் காட்டியபோது அவர் இனிமையான குரலில் தமிழுக்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை.

எந்த மாநிலத்திலும் இல்லாத தமிழ் நாட்டிற்கேயுரிய பட்டிமன்ற நிகழ்ச்சி இந்த முறையும் களை கட்டியது. பிரச்னையில்லாதது வாடகை வீடா, சொந்த வீடா என்கிற புதுத் தலைப்பில் சாலமன் பாப்பையாவின் பட்டிமன்றம் எல்லோரையும் ஒரு சேர கட்டிப் போட்டது. தங்களுக்குக் கிடைத்த சொந்த அனுபவங்களோடு பேச்சாளர்கள் சுவைபடப் பேசிய போது எல்லோர் வீடுகளிலும் தங்களது உணர்வுகளை அவர்கள் பிரதிபலித்ததாகவே உணர்ந்தனர்.



எஸ்.சி.வி.யில் மட்டும் பட்டாடை உடுத்தாமல் மாநிற காம்பியர்கள் வழக்கம்போல் டி-ஷர்ட், ஜீன்ஸில் நாள் கிழமை புரியாமல் ஆளாளுக்கு கலாய்த்துக் கொண்டிருக்க, இன்றைக்காவது பட்டு சாரி உடுத்தியிருக்கலாமே என்று ஒரு நேயர் கேட்டுவிட்டு கூடவே சாரி நியூ இயர் அன்றைக்கு புடைவையில் வாருங்கள் என்று ஆர்டர் போட்டு போனை வைத்து விட்டார். குறைந்தபட்சம் 50 நாட்களாவது அவகாசம் இருப்பதால் அதற்குள் அவர்கள் சேலை கட்டிப் பழகிக் கொள்வார்கள் என்று நம்புவோம்.

இதெல்லாம் பார்க்க விரும்பாத சீரியஸ் மனிதர்களுக்கு யாசர் அராபத்தின் மரணச் செய்தி பி.பி.சி., சி.என்.என். பார்க்க உதவியது.

ச.ந.கண்ணன்



ரிச்சர்ட்

மதுர...

ஒரு படம் நூறு நாள் ஓடினால் ஊரெல்லாம் போஸ்டர்கள் ஒட்டுவார்கள், கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் 'மதுர' படத்தின் நூறாவது நாள் கொண்டாட்டத்தையொட்டி அண்ணாசாலையில் பெரிதாக பேனர் வைத்திருக்கிறார்கள். அஜித்தின் 'அட்டகாசம்' அமர்க்களமான எதிர்பார்ப்பும் ஓபனிங்கும் அடைந்ததையொட்டி அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் 'விஜய்யின் ஹாட்ரிக் வெற்றி' என்றே 'மதுர' முரசு கொட்டுகிறது.

சதுர...

ஸ்ரீகாந்தின் 'சதுரங்கம்' தீபாவளி சரவெடிகளோடு தானும் இணைந்திருக்க வேண்டியது. ஆனால் போஸ் வெளிவந்து 50 நாட்கள் கழித்துத்தான் ஸ்ரீகாந்தின் அடுத்த படம் ரிலீஸாக வேண்டும் என்ற விதியின்படி சதுரங்கத்திற்கு மேட் வைத்து விட்டார்கள்.



எம்.டி.வியின் புதுக் கவிதைகள்

இப்பொழுதெல்லாம் ஆள் பாதி ஆடை பாதி என்று சொல்வது கூட சரியாக இருக்காது. ஆடை முக்கால் ஆள் கால் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

புதுக் கவிதைகளைப் போல குட்டிக் குட்டி உடை வகைகள் புதுப் புது மொழிகள் பேசிக் கொண்டு நம்மிடம் வந்து சேர்ந்துவிட்டன.

பாப், ராக் கொஞ்சம் கொஞ்சம் இந்திய இசை என்று கலந்து அளிக்கும் எம் டீ.வி.தான் இந்த புதுக் கவிதைகளை அறிமுகப் படுத்தியுள்ளது. இவர்களது இசை நிகழ்ச்சிகளைப் போலவே இருந்தது இவர்களது எம் டீ.வி. ஸ்டைல் ஆடை வகைகளும். கார்கோ அரை ட்ரவுசர், சுருக்கம் விழாத சட்டைகள், பைஜாமா இவை மட்டுமின்றி பெல்ட், தொப்பி, கைப்பை என்று பல விதமான மேற்கத்திய தாக்கம் கொண்ட வகைகள் பெரும்பான்மையாக காணப்பட்டன.

இவற்றை ஏதேனும் ஒன்றை உடுத்தினாலே ஆங்கிலம் தானாக வாயில் உருளத் தொடங்கிவிடும் என்று சொல்கிற அளவிற்கு இருந்தன இந்த ஆடைத் தொகுப்புகள். இந்த கவிதை உடைகளை அறிமுகப்படுத்திய எம் டீ.வி. தொகுப்பாளர் ரமோனா பார்வையாளர்களுக்கு சில ஆடை அலங்கார குறிப்புகளையும் கூடுதலாக சொல்லிக் கொடுத்தார்.

நீர்மூழ்கிக் கப்பலைச் சாப்பிடணுமா?

டேஸ்ட்.காம்



ஸ்பென்ஸர் பிளாசாவில் முளைத்துள்ள ஒரு அமெரிக்க சாண்ட்விச் சென்டரின் பெயர் சப் வே. இங்கு வருபவர்கள் விரும்பி சாப்பிடும் உணவு என்ன தெரியுமா? நீர்மூழ்கிக் கப்பல்கள். இங்கு கிடைக்கும் சாண்ட்விச், நீர்மூழ்கிக் கப்பல் தோற்றத்தில் காணப்படுவதால் இந்த அமைப்புக்கு சப் வே என்று பெயர் வைத்திருக்கிறார்கள். (சப் என்றால் சப்மெரைன்). கையுறை, தலையில் தொப்பி எல்லாம் போட்டுக் கொண்டு படு சுத்தமாக நாம் கேட்கும் சமாச்சாரத்தை நொடியில் கலந்து, சாண்ட்விச்சில் செருகி, இரண்டு தட்டு தட்டி இதோ ரெடி என்று கொடுத்து விடுகிறார்கள்.

மாமிசம் வேண்டாம் என்பவர்களுக்கு தனி வரிசை, தனி கத்தி, தனி நீர்மூழ்கிகள். சப் வே ஒரு தொடர் சங்கிலி அமைப்பு. எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான உணவு வகைகள்தான் பரிமாறப்படுகின்றன.

ஐஸ்வர்யா ராய் போல ஒடிசலாக இருக்க வேண்டும். அதே சமயம் நன்றாக சப்புக் கொட்டி ருசியாக சாப்பிடவும் வேண்டும் என்று கனவு காணும் இன்றைய இளைஞிகளுக்கென்றே டயட் நீர்மூழ்கிகளும் இங்கே கிடைக்கின்றன. நீர்மூழ்கியைப் போல் கத்தி கப்பல், கட்டுமரம், டைட்டானிக் போன்ற வகையறாக்களும் கிடைக்குமா என்று தெரியவில்லை.

கங்கா

ஷோ–கேஸ்

பச்சை நிறமே.. பச்சை நிறமே!

பழைய மேத்ஸ் நோட் புக்கை கிழிச்சு கத்திக் கப்பல் செஞ்சி விட்டுக்கிட்டிருக்கும்போது என் ஃப்ரெண்ட் சந்தியா வந்து "நிஜ கப்பலே வந்திருக்கு பார்க்க வறியா" என்றாள். கப்பலுக்கு மேட்ச்சா ஒரு காஸ்ட்யூம் போட்டுக் கொண்டு (திருத்த முடியாது) கிட்டத்தட்ட கேட் வின்ஸ்லெட் போல மாறி போர்ட்டுக்கு ஓடினோம்.



'அமைதியின் நிறம் பச்சை' என்று அறிவித்தபடி சமர்த்தாக வந்து சேர்ந்திருந்தது க்ரீன்பீஸ் கப்பல். இதோட பேரு ரெயின்போ வாரியர். நான் செஞ்ச கப்பலை விட கொஞ்சம் அளவில் பெரிது தான் என்று தாழ்மையுடன் ஒப்புக் கொள்கிறேன். (அடடா என்ன ஒரு தன்னடக்கம்!)

கடலையும் அதில இருக்கிற உயிரினங்களை காப்பாத்தறதுக்கும் அதுக்காக உலகம் பூரா பிரசாரம் செய்யறதுக்கும் இந்தக் கப்பலை வாங்கியிருக்காங்க க்ரீன்பீஸ் என்கிற அமைப்பு நம்ம சென்னைக்கு வரதுக்கு முன்னாடி இந்தக் கப்பல் சிட்னி, ஆக்லாண்ட், இத்தாலி, இங்கிலாந்து எல்லாம் போயிருக்காம்.



கப்பல்லுக்குள்ளே போய் என் ஃப்ரெண்ட் ஜீத்தோட சேர்ந்து நல்லா வேடிக்கை பார்த்தேன். கப்பல் மாதிரி வீடுன்னு சொல்வாங்க. ஆனா இந்த கப்பலுக்குள்ளேயொரு குட்டி வீடு இருந்தது. சின்னப் பசங்க 'ஆ'ன்னு வாயைத் திறந்து பபிள்காம் கீழே விழறது கூடத் தெரியாம பார்த்துட்டிருந்தாங்க. 'அப்பா இந்த கப்பல் ஏன் எங்கேயும் போகாம ஒரே இடத்துல நிக்குது?' என்று ஒரு குட்டிப் பொண்ணு கேட்க 'ரொம்ப நேரம் சுத்தி கால் வலி. அதான் இங்கே ரெஸ்ட் எடுத்திட்டிருக்கு' என்று சொல்லிக் கொண்டிருந்தார் ஓர் அப்பா.

சுற்றுச் சூழலை பத்திரமா பாத்துக்கணும், கடல்ல இருக்கிற உயிர்களை நம்ம ஃப்ரெண்டா நினைச்சுக்கணும்னு ரொம்ப சிம்பிளா ஆனா மனசுல பதியற மாதிரி சொன்னாங்க. சில விஷயங்கள் பகீர்னு இருந்தது.

ஆலிவ் ரிட்லி எனும் நட்சத்திர ஆமைகளை அதன் ஓடுகளுக்காக சாகடிக்கிறாங்களாம். போன பத்து வருஷத்துல மட்டும் 1,00,000 ஆமைகள் நம்மகிட்ட மாட்டிக்கிட்டு கஷ்டப்பட்டிருக்காம். ஐயோ பாவம்ப்பா. ஒரு ஆலிவ் ரிட்லி 1000 குட்டிபோட்டுச்சுன்னா அதுல ஒன்னு தான் உயிர் பிழைக்குமாம். அப்படி ஒன்னு ஒன்னா பொழைச்சு வந்த குட்டி ஆமையை நாம சாகடிக்கிறது மகா மகா தப்புன்னு சொல்றாங்க க்ரீன் பீஸ். சரிதானே?

அதே மாதிரி திமிங்கலத்தை வேட்டையாடறதையும் இந்த அமைப்பு தீவிரமா எதிர்க்குது. தன் பாட்டுக்கு தேமேன்னு கடல்ல ஸ்விம்மிங் போயிட்டிருக்கிற திமிங்கிலத்தை ஏதோ சண்டைக்கு வந்த எதிரி மாதிரி நினைச்சு சாகடிக்கிறது தப்பில்லையா? நம்ம வீரத்தை கடல் மிருகங்க கிட்டதான் காட்டணுமா?

இது போறாதுன்னு, கடலை கிட்டத்தட்ட குப்பைத் தொட்டி மாதிரி நினைச்சு அதுல நிறைய குப்பைகளைப் போட்டுடறாங்களாம். எண்ணெய், கெமிக்கல்ஸ் எல்லாத்தையும் கலக்க விட்டுடறாங்களாம். இதே மாதிரி போச்சுன்னா அப்புறம் நம்ம கூவம் மாதிரி எல்லாக் கடலும் மாறிடும்னு சொன்னாங்க. கேட்கறதுக்கே ரொம்பக் கஷ்டமாயிருக்கு.

இனி அடுத்த தடவை மேத்ஸ் புக்கையோ சயின்ஸ் புக்கையோ எடுத்து கப்பல் செஞ்சி விடும்போது, ரெயின்போ வாரியர் சொன்னதை மறக்காம ஞாபகம் வெச்சுக்கணும். என்ன ஓ.கேவா?

அப்புறம் சொல்ல மறந்துட்டேன். இந்தக் கப்பல் மொத்தம் 55 மீட்டராம். நானே செய்யறதா இருந்தா நிறைய மேத்ஸ் நோட் புக் தேவைப்படும்னு தோணுது. என்ன சொல்றீங்க?

டைட்டானிக் லஜ்ஜாவதி

ஆடுகளம்



கிரிக்கெட் கிசுகிசு!



சென்ற வாரம் தமிழக ஹைதராபாத் அணிகளுக்கிடையே சேப்பாக்கத்தில் ரஞ்சி ட்ராபி போட்டி நடந்தது. தமிழகம் இதில் வெற்றி பெற்ற நிலையில் க்ரவுண்டில் மேட்சைப் பார்த்துக் கொண்டே சில சீனியர் ப்ளேயர்கள், கோச்கள் சீரியஸாகப் பேசிக் கொண்டதை நம் காதில் உள் வாங்கிய போது கிடைத்த தகவல்கள் :

கடைசி டெஸ்டில் முரளி கார்த்திக் கும்ப்ளேவை விட அதிக ஓவர்கள், அதிக விக்கெட்டுகள் எடுத்ததற்குக் காரணமே ராகுல் ட்ராவிட்தான். முரளி கார்த்திக்கின் கிரிக்கெட் வாழ்க்கை போனதற்கு கங்குலிதான் காரணமாம்.

அதே போல் பாலாஜி, முரளி, கார்த்திக், ஸ்ரீராம் போன்ற தமிழர்கள் வந்து அணியில் புதிதாய் இடம் கிடைத்தாலும், கங்குலி இவர்களை எத்தனை தூரம் வாய்ப்பளித்து நீடிக்க விடுவார் என்பது பெரும் சந்தேகம் தான்.

க்ரவுண்டில் முறையாக ட்ரெயினிங், பயிற்சி எடுப்பது தான் கிரிக்கெட்டிற்கான சரியான வழிமுறைகளாம். ஆனால் இப்பொழுது ப்ளேயர்ஸ் ஜிம்முக்கு சென்று மசில்ஸ் ஏற்றி பிட்னெஸ் ட்ரெயினிங் எடுப்பதனால்தான் பலருக்கும் அடிக்கடி காயம் ஏற்பட்டு இன்ஜுரி லிஸ்டில் சேர்ந்து கொள்கிறார்கள்.

நாக்பூர் டெஸ்ட்டிற்கான பிட்ச்சில் தான் கேட்டபடி ஸ்பின் ட்ராக்கை மாற்றாத கோபத்தில்தான் கங்குலி காயம் ஏற்பட்டு விட்டதாகக் கூறி டெஸ்டை 'பாய்காட்' செய்ததாகவும், இதற்கு பயந்து தான் மும்பை க்ரவுண்டை எங்குமே பார்க்க முடியாத குண்டுங்குழிகளான ஸ்பின் ட்ராக்காக மாற்றி மேட்ச்சை இரண்டு நாளில் முடித்து விட்டார்களாம்.

ரிச்சிபாண்டிங் தனக்கு காயம் ஏற்பட்ட பின்பும் யூனிஃபார்ம் அணிந்து கொண்டு ஆஸ்திரேலியாவின் ட்ரெஸ்ஸிங் ரூமில் அமர்ந்து அவர்களது ப்ளேயர்களை ஊக்கப்படுத்த, கங்குலி காயம் பட்டதாகக் கூறிக் கொண்டு கொல்கத்தா கிளம்பியது கிரிக்கெட் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்பெல்லாம் ப்ளேயர்ஸ் ரூமில் எல்லோரும் கலகலப்பாக இருப்பார்களாம். ஆனால் இப்பொழுதெல்லாம் வீரர்களுக்குள் ஈகோ தலையெடுத்து, ''நீ பெப்ஸிக்கு இத்தனை கோடி வாங்கினாயா நான் கோக்கில் உன்னை விட அதிகமாக வாங்குகிறேன்'' என்று வெளிப்படையாகவே வெட்கமில்லாமல் டிஷ்யூம் டிஷ்யூம் போடுகிறார்களாம்.

தமிழ்நாட்டில் மிகச் சிறந்த கிரிக்கெட்டர்களான ரமேஷ், சரத் போன்றோரை தற்பொழுது தமிழ்நாட்டிற்குள்ளேயே முடக்கி வைத்த பெருமை டால்மியாவையே சாரும் என்றெல்லாம் சூடாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒன்று மட்டும் நிச்சயம், க்ரவுண்டில் நடக்கும் போட்டி, பொறாமைகளை விட, பெவிலியனிலுள் பி.சி.சி.ஐயிலும் நடக்கும் மோதல்கள் பலம் வாய்ந்தவையாகத் தெரிகிறது.

முகில்   செந்தில்

ஹாய் சென்னை!

ஃபோக்கஸ் பிரச்னைகள், காலேஜ் புரோகிராம்ஸ், டேஸ்ட். காம்ஸ், உச்சாணி, ஸ்பெஷல் விழாக்கள் என சென்னை ஸ்கேனுக்கு பொருத்தமான விஷயங்களை எங்க போஸ்ட் பாக்ஸ், இன்பாக்ஸ், ஃபோன் ரிசீவர் என எதுக்கும் அனுப்பலாம். லஜ்ஜாவதியோடு எங்க டீமும் ரெடி. உங்கள் கற்பனை காதல் கடிதங்களை 'லப்டப் லவ் லெட்டர்' என்று தலைப் பிட்டு அனுப்புங்கள்.

முகவரி :
சென்னை ஸ்கேன்,
47NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.
ஃபோன்: 22345622, 23, 24
E-mail:chennaiscan@kalkiweekly.com

திரைப்படத் துறையினரால் அம்மாவுக்கு ஒரு ஜில் மழை பொழியும் விழா நடத்தப்பட்டதல்லவா? இதில் ஒவ்வொருவருமே ஏதோ ஒரு எதிர்பார்ப்புடனேயே வந்திருந்ததாக பலமான பேச்சு அடிபடுகிறதாம். அதே சமயம் அம்மா விரும்பாத அல்லது அம்மாவை வெறுப்பூட்டும் சில சம்பவங்களும் அரங்கேறின. குறிப்பாக நாசர் கமலஹாசனைப் பேச அழைக்கும் போது 'கலைஞானி கமலஹாசன்' என்றழைத்தார். இது கமலஹாசனை கலைஞர் விளிக்கும் அடைமொழியாம். அதனை மேடையில் கூறியது அ.தி.மு.க.வினரை வெறுப் பேற்றி விட்டதாம்.

அதே போல அம்மாவை, "ஜெயலலிதா... ஜெயலலிதா... ஜெயலலிதா" என்று பலமுறை பெயர் சொல்லிக் குறிப்பிட்டார் விஜயகாந்த். இதுவும் அம்மாவை கடுப்பாக்கி விட்டதாம். அதனாலேயே அம்மா பேசும் போது விஜயகாந்த் பேச்சுக்கு பதிலளிக்கையில் "இங்கே பேசிய ஒருவர்" என்று கூறி தனது சீற்றத்தை வெளிப்படுத்தினாராம். இருந்தாலும் 'மேடையில் யாருமே சொல்லத் தயங்கிய பெயரை எங்க கேப்டன் மட்டுமே உச்சரித்தார்' என்று பெருமை பொங்குகின்றனராம் அவரது ரசிகர்கள்.

முதல்வர் என்ற முறையில் மேடையில் அமர்ந்திருந்த அம்மாவை நடிகையாகவே எண்ணி ரஜினி உள்ளிட்டோர் ஃபிளாஷ்பேக் வர்ணனை செய்தது பலரையும் தர்மசங்கடத்துக்குள் தள்ளி விட்டதாம்.

டெய்ல் பீஸ் :

விழாவுக்கு வராமல் புறக்கணித்த திமுக ஆதரவு நடிகர்களை, அதிமுகவினர் அடுத்தடுத்து நடந்த அ.தி.மு.க கூட்டங்களில் திட்டித் தீர்த்து விட்டனராம். (என்னே! அரசியல் பண்பாடு!)

ஸ்வரா



ஐஸ்.. ஐஸ்.. கோலிவுட் ஐஸ்!

தாய்

மாக்ஸிம் கார்க்கியின் 'தாய்' ஒரு மிகச் சிறந்த இலக்கியப் படைப்பு என்று சொல்வதைக் காட்டிலும், அன்றைய ரஷ்யப் புரட்சியைப் புத்தகத்தில் மிகச் சரியாக பிரதிபலித்த ஒரு மகத்தான காவியம் என்று சொல்வது மிகப் பொருத்தமாக இருக்கும்.

தனது மகனின் கலக வேலைகளையும், அவனைத் தேடி வரும் நண்பர்கள் குழாமையும் பார்த்து பயமுறும் மிகச் சாதாரண ஒரு தாய்தான் கார்க்கியின் தாயும். மகன் ஒருமுறை உரக்க இருமினாலும் கம்பளியையும் களிம்பையும் தூக்கிக் கொண்டு ஓடி வரும் இந்தத் தாய் யாரும் எண்ணிப் பார்க்க இயலாத பெரும் வளர்ச்சியைப் பெறுகிறாள்.

பெண்மை, அச்சம் இரண்டும் கிட்டத்தட்ட ஒன்றுதான் என்று நினைக்கும் கருத்தாக்கத்தை தருவதிலிருந்து தனது பங்களிப்பைத் தொடங்குகிறாள்.

பின்பு அடுப்பறையிலிருந்து வெளிவந்து கலகத்திற்கு ஆதரவாக துண்டு பிரசாரங்களை பொது மக்களிடையே ரகசியமாய் விநியோகம் செய்யும் அளவிற்கு அவளது பங்களிப்பு பெரிதாகிறது.

இறுதியில் ரயில் நிலையத்தில் உளவாளிகள் காட்டிக் கொடுத்ததால் இந்தத் தாய் ஒரு கோழிக் குஞ்சைப் போல அதிகாரிகளால் பிடிக்கப்படுகிறாள். பிடிபட்டு இழுத்துச் செல்லப்படும் பொழுது கூட தன் கையில் தேங்கியிருந்த பிரசாரங்களை உரக்கக் கத்தியபடி மக்களை நோக்கி வீசியெறிகிறாள் அவள். அவற்றைப் பொறுக்கி எடுத்து அனைவரும் படிக்க, தனது கடமை முடிந்த மனநிலையுடன் அதிகாரிகளுடன் நடந்து செல்கிறாள் அந்தத் தாய்.



எழுத்தாணி

கிழித்து எறிந்து விட்டு, தமது மகனைப் புரிந்துக் கொள்ள பிரயத்தனப்படுகிறாள். இயோ கலகமா வேண்டாம் என்று 'அவனைக் கட்டி வைக்காமல் 'எதற்காக அவன் புரட்சி இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்கிறான், அவனைப் போன்ற பலர் யாரை எதிர்க்கிறார்கள், எதற்காக எதிர்க்கிறார்கள், அவர்களது போராட்டம் சரியானதுதானா' என்று யோசிக்கிறாள்.

ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு போராட்டம்தான் அவர்களுடையது என்று அந்தத் தாய்க்குத் தெரிய வருகிறது. வயதான தன்னால் பெரிதாக என்ன செய்ய முடியும் என்று நினைத்து விடாமல், அவனுடைய நண்பர்களுக்கு தேநீர் வைத்து

ஒருவேளை மேலைநாட்டு வாசிப்பாளர்களிடையே கார்க்கியின் தாய் ஒரு அதிக வீரம் கொண்டவளாகத் தோற்றமளித்தாலும், நம்முடைய நீண்ட இலக்கிய மரபில் எஞ்சியிருக்கும் தனது ஒரே மகனையும் வேல் கொடுத்து போருக்கு அனுப்பிய தாயின் வீரத்தை கார்க்கியின் தாய் வடிவில் நாம் அடையாளம் கண்டு பூரித்துப் போக நிறைய வாய்ப்பிருக்கிறது.

சிறப்பான வாசிப்பு அனுபவம் பெற இந்தப் புத்தகத்தை குறைந்தது ஒருமுறையாவது வாசித்து விடுவது அவசியம். சென்ற வாரம் ரஷ்யன் கல்ச்சுரல் அகாடெமியில் தாய் திரையிடப்பட்டது.

✍ மருதன்

நீரின் வேர்கள்



தங்களது இருப்பிடத்தையும், வாழ்வையும் நர்மதா நதிக்கரையில் தொலைத்து விட்டு, அவற்றை மீட்பதற்காகப் போராடி வரும் எண்ணற்ற எளிய மக்களின் துயரை சொற்களில் அடக்கி விட முடியாது. இதனைச் சரியாக உணர்ந்த ஜெய்சிங், மஹாராஷ்டிரா, மத்திய பிரதேசம், குஜராத் பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிகளை நேரில் சென்று பார்த்து நிகழ்வுகளை தமது காமிராவில் பதிவு செய்து எடுத்து வந்துள்ளார்.

'சிறிது சிரியுங்கள்' என்று சொல்லி கண் மூடிக் கண் திறப்பதற்குள் வெளிச்ச மின்னலைப் படர விட்டு எடுக்கப்பட்ட சாதாரணப் புகைப்படங்கள் அல்ல இவை.

பீடி புகைத்தபடி வெட்ட வெளியை உற்றுப் பார்க்கும் ஒரு கிழவியின் முகத்தில் பதிந்துள்ள கோடுகளைப் புகைப்படமெடுப்பது அவ்வளவு சுலபமல்ல. குச்சு வீடுகள், புழுதி பறக்கும் வீதிகள், காமிராவைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கும் ஒரு வேற்று மனிதனைக் கண்டு ஒதுங்கிப் போகும் பயம் கலந்த பார்வைகள், இதுவே போதும் என்று நிறைந்து போயிருக்கும் இவர்கள் மனநிலை... இப்படிப் பல நிகழ்வுகளை இயல்பு கெடாமல் கவிதையாக்கியிருக்கிறார் இந்தக் கலைஞர். தண்ணீர் எடுக்க வரும் பெண்களைப் பதிவுசெய்வதற்காக ஒருநாள் முழுவதும் தண்ணீர்ப் பம்பு அருகே காத்துக் கொண்டிருந்தாராம் இவர்.

மதுரைவாசியான ஜெய்சிங்கை நர்மதா மக்களின் துயரம் கைப்பிடித்து இழுத்துப் போயிருக்கிறது. மேதா பட்கரைச் சந்தித்து உரையாடியிருக்கிறார். அப்பகுதி வாழ் மக்களின் வீடுகளில் வசித்து, அவர்களது உணவை உண்டு அவர்களுள் ஒருவராக உருமாறி அவர்களது வாழ்க்கை முறைகளை உள்வாங்கிக் கொண்டிருக்கிறார். அதற்குப் பின்பே தனது காமிராவின் கண்களைத் திறந்திருக்கிறார்.

"நான் கறுப்பு-வெள்ளையைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம், இவர்களுடைய வாழ்க்கையை வண்ணத்தில் வெளிப்படுத்த முடியாது. அதுமட்டுமின்றி, கறுப்பு-வெள்ளை புகைப்படங்கள் இயல்புத் தன்மையை சரியாக வெளிப்படுத்தும்" என்கிறார் ஜெய்சிங்.

சுமார் இரண்டு வாரங்கள் அலையன்ஸ் பிரான்ஸைஸில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன இவருடைய கறுப்பு வெள்ளை சித்திரங்கள்.

✍ இன்பா

இனி கவலையில்லை!




"பிரம்மா தன் தொழிலான படைத்தலை அமைதியாகச் செய்து கொண்டிருக்கும் போதே எவரோனும் ஆத்திரமூட்டி விடுவார்களோ என்னவோ! அந்த சீற்றத்தில் ஒரு சிலரை பாரபட்சமாக சிருஷ்டித்து விடுகின்றார். அதன் விளைவுகள் தாம் இந்த உடலளவில் குறையுள்ள உயிர்கள். பின்னர் தன் மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு உதவ ஒரு நல்லிதயங்கொண்டோரையும் படைத்துவிடுகின்றார். அப்படி விழிகளில் ஒளியிழந்து வாடும் குழந்தைகளுக்கு உதவவே எங்கள் அமைப்பு உருவாக்கப்பட்டது" என்கிறார் 'வித்ய விருக்ஷா' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணசாமி.

"உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு, சமூக ரீதியாக ஒதுக்கப்பட்ட பார்வையற்ற குழந்தைகளுக்கு கல்விக்கான முதல்படியை அமைத்துத் தருவதே எங்கள் அமைப்பின் நோக்கம். ஏற்கெனவே பார்வையற்ற குழந்தைகளுக்கான கல்விக்காக பிரெய்ல் முறை வழக்கத்துல இருக்கு. ஆனா அதைக் கத்துக்கறது சிரமம். இதுல வேதனை என்னன்னா பார்வையற்ற குழந்தைகளோட எண்ணிக்கை ஆறு லட்சத்தைத் தாண்டும். ஆனால் பிரெய்ல் முறையினை கற்று அதனை சொல்லித் தரும் ஆசிரியர்கள் எண்ணிக்கை ரொம்பவும் சொற்பம் தான். ஆனால் அவர்களுக்கு கல்விக் கண் திறப்பது அத்தியாவசியமான விஷயம்.

இதனைச் சாத்தியப்படுத்தணும்னா அக்குழந்தைகளோட பெற்றோருக்கு ப்ரெய்ல் முறையைக் கற்றுத் தரணும். அதற்காக பிரெய்ல் க்யூப் (எழுத்தைப் பழகிக் கொள்ள) பிரெய்ல் பிளாக் (வார்த்தை பழகிக் கொள்ள) இரண்டையும் உருவாக்கினோம். இதற்கான பயிற்சியை நாங்களே அளித்து, இதனையும் அவர்களுக்கே தருகிறோம். முற்றிலும் இலவசமாக. கூடவே அக்குழந்தைகளுக்கான பிரத்யேக பாடப்புத்தகங்களையும் உருவாக்கி அவற்றை அனைத்துப் பள்ளிகளுக்கும் இலவசமாக அனுப்புவது எங்கள் நோக்கம். மேலும் பணிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் நாங்களே பயிற்சி தருகிறோம்."

சென்னை ஐஐடியின் சார்பாக ஒரு 'மல்டி லிங்குவல் சாஃப்ட்வேர்' தயாரிக்கப்பட்டு, அதன்மூலம் பத்து மொழிகளில் கல்வி பயில இவர்கள் பயிற்சியளிக்கிறார்கள். அதே போன்று சிலேட், அல்ஃபாபெட் பிளேட், அபாகஸ், ஜாமெட்ரி பாக்ஸ், டிராயிங் டூல் உள்ளிட்டவைகளைக் கொண்ட 'யுனிவர்சல் பிரெய்ல் கிட்'ஐ இலவசமாக தரத் திட்டமிட்டுள்ளது 'வித்ய விருக்ஷா' பார்வையற்ற குழந்தைகளின் பெற்றோர்களே! இனி கவலை வேண்டாம் உங்கள் குழந்தைகளின் கல்வி குறித்து!

இரா. முத்துக்குமார்



அன்பே...

எனது 'ட்ரீம்ஸ்'ஸில் வந்து
'அட்டகாசம்' பண்ணும் -
'மன்மதன்' ஜோடியே!
என்னோட 'நெறஞ்ச மனசில்'
- 'அது' - அதான்
'காதல்' 'ஜனனம்' ஆகிவிட்டது!
உன் அண்ணன் 'சத்ரபதி'யிடமும்
உன் அப்பா 'மீசை மாதவனி'டமும்
நம் காதல் பற்றி சொல்லிவிடாதே!

இப்படிக்கு
'கோமதி நாயகம்'

- த.சத்தியநாராயணன்,
அயன்புரம்

(வாசகர்களே! உங்களின் குறும்பு காதல் கடிதங்களும் வரவேற்கப்படுகின்றன)

லப்டப் லவ் லெட்டர்

பலருக்கு தம் வீட்டு வரவேற்பறையினை வர்ணஜாலங்களினால் அலங்கரிக்க வேண்டும் என்று ஆர்வமிருக்கும். ஆனால் அவர்களுக்கு அத்தகைய ஓவியங்கள் எங்கு கிடைக்குமென்று தெரியாது. அவர்களுக்கென்றே கடந்த இருபத்தைந்து வருடங்களாக சேவை ஆற்றி வருகிறது குருபரன் தஞ்சாவூர் ஆர்ட் கேலரி. இவர்களது ஸ்பெஷாலிட்டி தஞ்சாவூர் பெயின்டிங்ஸ், கண்ணாடி பெயின்டிங்ஸ் ஆகியவைதான். மேலும் இவர்களது தயாரிப்பில் உருவான ஜெய்ப்பூர் கலர் ஸ்டோன், வொய்ட் ஸ்டோன் மற்றும் கோல்டு ஃபாயிலுக்கு வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்பு இருக்கிறதாம். இவர்களது விநாயகர் ஓவியங்கள் பல்வேறு நாடுகளில் இருக்கும் ஆலயங்களில் இடம் பிடித்து மக்களின் கண்ணுக்கு விருந்தளித்து வருகின்றனவாம். குறிப்பாக கலிபார்னியாவில் இருக்கும் விநாயகர் ஓவியத்துக்கு பெரிய ரசிகர் கூட்டமே உண்டாம்.

அதேபோன்று சின்தடிக் கெமிக்கல் மற்றும் தங்கமுலாம் பூசப்பட்ட பிரேம்களும் இங்கு கிடைக்குதாம்.

முகவரி
7, ஆர்.கே. மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 4
தொலைபேசி : 52108701



கலிஃபோர்னியா விநாயகர்!



வெறிச்...

தீபாவளிக்கு முன்பு தி.நகரைத் தொட்ட அத்தனை சாலைகளும் தான் ட்ராபிக் ஜாமை டேஸ்ட் செய்ததுமில்லாமல் கூட தன்னை இணைத்துக் கொண்ட சாலைகள் மீதும் ட்ராபிக் ஜாமைத் தூவிவிட, கடந்த வாரம் மழையின் நச்சரிப்போடு ட்ராபிக் நெருக்கடிகளால் மிகவும் நொந்து போனார்கள்.

ஆனால் தீபாவளிக்கு அடுத்த நாள் நிலைமை அப்படியே தலைகீழாகிவிட்டது. தமிழ்நாட்டின் எல்லா மூலைகளிலிருந்து சென்னை வந்து செட்டிலான அனைவரும் தீபத் திருநாளைக் கொண்டாட தங்கள் சொந்த ஊருக்குக் கிளம்பிப்போக, கொஞ்சம் சுதந்திரமாக மூச்சுவிட்டது சென்னை.

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு என நான்கு தினங்களும் சென்னை காலியோ காலி. ஒரு சில சாலைகளில் சிறுவர்கள் கிரிக்கெட், பேட்மிட்டன் ஆடினார்கள். பேருந்துகளில் ஒருவரும் ஃபுட்போர்டு அடிக்க முடியவில்லை. அதிசயமாக அன்றைய தினங்களில் பல்லவனில் பெர்த் சீட் கிடைத்து படுத்துக் கொண்டே பயணித்தனர்.

எந்நாளும் சென்னை இப்படியே இருக்காதா என்று ஏங்க வைத்து விட்டது இந்த நான்கு நாட்களும்.

சநகன்
ராஜன்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 *
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 21.11.2004


KOSMIC MUSIC
Latest Releases
Kunnakkudi Vaidhyanathan's
Navarasa Navaraga Thillanas
Inspiration
VIOLIN
FUSION
FUSION
Rajhesh Vaidhya's
Naalam Naalam
Pancharathna Krithis
VEENA
Old Tamil Film Hit Tunes
Vocal & Instrumental Fusion
O. S. Arun's
Immortal Bajans
Madhura Madhura
VOCAL
Meera Bhai, Sadashiva Brahmendrar
Saint Tukaram, Subramanya Bharathi,
Kabirdas, Badrachala Ramdas, Gurunanak
Oothukadu's Compositions
available at all music outlets
Kosmic Music Pvt. Ltd., No.33, Rutland Towers, Shaffee Mohammed Road, Chennai - 600 006. India.
Tele : (+91-44) 5214 2500 (multi Lines). Branches at: MUMBAI - Ph: (+91-22) 30956174,
DELHI - Ph: (+91-11) 33176796. Web: www.kosmicmusic.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered
No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under
PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka